உமா வாசகம்

ஏழாம் புத்தகம்—பொதுப் பகுதி

[இரண்டாம் பாரத்துக்கு உரியது.]

1951௵ ஜூன்௴ வெளியிடப்பட்ட புதிய பாடத்திட்டத்தின்படி
திருத்தி அமைக்கப்பெற்றது.

CONNEMARA PUBLIC LIBRARY
31 MAY 1956
MADRAS

த. சே. உமாபதி, M.A., L.T.,
தலைமையாசிரியர்,
ஸி. அப்துல் ஹக்கீம் இந்து முஸ்லிம் உயர்நிலைப் பள்ளி, சென்னை.

உமாதேவன் கம்பெனி
16, சேம்புதாஸ் தெரு, சென்னை—1

பதிப்புரிமை] 1951 [விலை ரு. 1

First Edition : 1949
Reprinted : 1950 (Twice), 1951.
Revised Edition : November, 1951.

R.B. 430/4-51

CONNEMARA PUBLIC LIBRARY
31 MAY 1956
MADRAS

54746
2.6C211

THE JUPITER PRESS LTD., MADRAS—1.

CONNEMARA PUBLIC LIBRARY
31 MAY 1958
MADRAS

முகவுரை

உமா வாசகம் என்னும் பெயருடன் வெளிப்போதரும் நூல் வரிசையில் இஃது ஏழாம் புத்தகம். 1951-ஆம் ஆண்டில் அரசியலார் வெளியிட்ட புதிய பாடத்திட்டத்தையொட்டி இது திருத்தி அமைக்கப்பெற்றுள்ளது.

சிறுவர் சிறுமியரின் மனோநிலையையும், அவர்தம் தமிழறிவின் எல்லையையும் மனத்திற்கொண்டு இஃது இயற்றப் பெற்றுள்ளது. இதன்கண் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு பாடமும் பாடத்திட்டத்தின் நோக்கமாகிய மொழிப்பயிற்சியை அடிப்படையாகக் கொண்டு இயன்றிருத்தல் குறிப்பிடத் தக்கது. ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் தரப்பட்டுள்ள பயிற்சியே இதற்குச் சான்றாகும். அன்றியும், மொழி வளர்ச்சிக்குரிய புதிய சொற்களும், சொற்றொடர்களும் ஒவ்வொரு பாடத்திலும் ஏற்ற அளவில் இடம் பெற்றுள்ளன.

மாணவர் மாணவிகட்கு அகராதி உபயோகிக்கும் பழக்கம் உண்டாதற்பொருட்டு ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் அருஞ்சொற்களைக் குறித்து, அவற்றுக்குப் புத்தகத்தின் இறுதியில் தரப்பட்டுள்ள அகராதியைப் பார்த்துப் பொருள் எழுதும்படி அமைக்கப்பெற்றுள்ள பயிற்சி குறிப்பிடத்தக்கதாம். செய்யுட்பகுதிக்குக் குறிப்புரைகள் தரப்பட்டுள்ளன.

தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர் இதனைப் படித்துப் பயனுறுதற்கு ஆவன செய்யுமாறு ஆசிரிய அறிஞர்களை வேண்டுகிறோம்.

சென்னை,
9-11-51.

பதிப்பாளர்

உள்ளுறை

உரை நடைப் பகுதி

எண்	பொருள்		பக்கம்
1.	நாட்டுக்குழைத்த நற்குடும்பம்	...	1
2.	மாட்டுக்கும் வாடகை; அதன் நிழலுக்கும் வாடகை	...	7
3.	சிந்தாமணியின் சிறப்பு	...	11
4.	ரேடியோ அல்லது ஒலி பரப்பி	...	15
5.	புலவர்க்குச் சாமரை வீசிய புரவலர்	...	19
6.	நமது நாட்டுச் செல்வம்	...	24
7.	சிவனுடன் வாதிட்ட செந்தமிழ்ப் புலவர்	...	30
8.	கலைக்கோவில்	...	35
9.	புலவர் பெருமிதம்	...	40
10.	எங்கள் இன்பச் செலவு—I	...	45
11.	எங்கள் இன்பச் செலவு—II	...	50
12.	ஒரு விநோதப் பாட்டு	...	58
13.	பஞ்ச தந்திரம்—சந்தி விக்கிரகம்	...	62
14.	தென்முனை கண்ட தீரர்	...	66
15.	'சண்டை நல்லதா, சமாதானம் நல்லதா?'	...	71
16.	இளவரசர் துறவு (நாடகம்)	...	75
17.	தலையாலங்கானத்துப்போர்	...	80
18.	நிதி நிலையங்கள்	...	85

செய்யுட்பகுதி

I.	கடவுள் வணக்கம்:	...	90
II.	நீதி:		
	1. சதகச் செய்யுள்	...	91
	2. இன்னா நாற்பது	...	96
	3. இனியவை நாற்பது	...	97
	4. திரிகடுகம்	...	98
III.	கதைச் செய்யுள்:		
	1. புத்தரும் தீண்டாமையும்	...	99
	2. அந்தணனும் வஞ்சகரும்	...	102
IV.	வருணனை:		
	1. பொருநையாறு	...	103
	2. மலை	...	104
	3. மின்னல்	...	105
V.	பல்சுவை:		
	1. பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி	...	106
	2. வேண்டுதல்	...	106
VI.	தனிப்பாடல்கள்	...	107
VII.	திருக்குறள்	...	109
	செய்யுட்பகுதி - குறிப்புரை		
	அகராதி		

CONNEMARA PUBLIC LIBRARY
31 MAY 1956
MADRAS

CONNEMARA PUBLIC LIBRARY
31 MAY 1956
MADRAS

CONNEMARA PUBLIC LIBRARY
31 MAY 1956
MADRAS

உமா வாசகம்

(ஏழாம் புத்தகம்)

1. நாட்டுக்குழைத்த நற்குடும்பம்

1. நமது நாடு இன்று சுதந்தர நாடாய் விளங்குகிறது. இச்சுதந்தரத்தை அடைய போர் புரிந்தவர் பலர். அவரனைவரும் தந்நலமற்ற தியாகிகள்; உடல், பொருள், உயிர் அனைத்தையும் நாட்டுக்காக உதவியவர்கள்; அறப்போர் புரிந்த அரும்பெரு வீரர்கள்; அவர்களுள் ஒருவர்தாம் இன்று நம் நாட்டு முதல் அமைச்சராயுள்ள **பண்டித ஜவாஹர்லால் நேஹ்ரு**. அவர் தந்தையார், தாயார், மனைவியார், தங்கையர் முதலிய அவர் குடும்பத்தவர் அனைவரும் தமது தாய் நாட்டின் விடுதலை யொன்றையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டவர். பெருந்தனம் படைத்த அவர்கள், இன்ப வாழ்க்கையை எள்ளி, நாட்டின் நலனுக்காகத் துன்ப வாழ்க்கையைத் துணிவுடன் மேற்கொண்டவர்கள்!

2. இந்தியாவின் மணிமுடி என வழங்கும் **காஷ்மீர நாடு** காண்பவருடைய கண்களையும் கருத்தையும் களிப்புறச் செய்யும் எழில் மிக்கது. அங்நாட்டில் இரு நூற்றுண்டுகளுக்கு முன், ஒரு பிராமணர் வாழ்ந்திருந்தார். **ராஜ்கால்** என்பது அவர் பெயர்; அவர் வடமொழி, பாரசீகம் ஆகிய இரு மொழிகளிலும் வல்லவராயிருந்தார். ஆதலால், அவர் **பண்டித ராஜ்கால்** என்று வழங்கப்பட்டார். அவரது புலமையில் ஈடுபட்ட, டில்லியை ஆண்டுவந்த முஸ்லிம் பேரரசர் ஒருவர் அவரை டில்லியில் குடியேற்றினர்; ஒரு மாளிகையையும், ஒரு ஜாகிரையும் அவருக்கு நன்கொடையாக வழங்கி, அவரை ஆதரித்தார். அம்மாளிகை ஒரு கால்வாயின் கரையிலிருந்தது. கால்வாய் என்னும் சொல் இந்தி மொழியில் **நஹார்** எனப்படும்.

நஹார்க் கரையில் வாழ்ந்த ராஜ்கால், **நேஹ்ரு** என்று டில்லி மக்களால் வழங்கப் பெற்றார். இதனால், அவர் கால்வழியில் தோன்றிய அனைவர்க்கும் '**பண்டிதர், நேஹ்ரு**' என்னும் பட்டங்கள் வழங்கலாயின.

3. பண்டித ராஜ்காலின் பெயரர்க்கு மூவர் மைந்தர் இருந்தனர். அவருள் மூன்றாமவரான **மோதிலால் நேஹ்ரு** என்பவரே நம் முதலமைச்சரின் தந்தையாராவர். அவர் சிறந்த வழக்கறிஞர். அலகாபாது உயர் நீதிமன்றத்தில் அவர் பெற்ற புகழ் அவருக்கு அளவற்ற செல்வத்தை ஈட்டித் தந்தது. மோதிலால் நேஹ்ரு, **சொரூப ராணியார்** என்ற அம்மையாரை மணந்துகொண்டார். அவர்கட்கு 1889-ஆம் ஆண்டு நம் மாபெருந்தலைவர் மைந்தராய் உதித்தனர். பின்னர் **விஜய லக்ஷ்மி, கிருஷ்ண** என்னும் இரு புதல்வியரும் பிறந்தனர்.

4. செல்வ மைந்தராகிய ஜவாஹர் பிற சிறுர்களைப் போலத் திண்ணைப் பள்ளியிலோ, தொடக்கப் பள்ளியிலோ கல்வி கற்கவில்லை; வீட்டிலேயே, வெவ்வேறு பாடத்துக்கு வெவ்வேறு ஆசிரியர் அமர்த்தப்பட்டு, அவருக்குக் கல்வி கற்பிக்கப்பட்டது. பின்னர், அவர் இங்கிலாந்துக்குச் சென்று கல்வி பயின்று, இறுதியில் '**பாரிஸ்தர்**' பரீட்சையில் தேறிச் சட்ட நிபுணராய் இந்தியாவுக்குத் திரும்பினார்.

5. அவர் இங்கிலாந்தில் இருந்தபோது **விபின சந்திர பாலர், லாலா லஜபதி ராய், கோகலே** முதலிய தியாகிகளின் சொற்பொழிவுகளைக் கேட்டார். அவை, இளமை தொட்டு அவர் இருதயத்தில் புதையுண்டிருந்த நாட்டுப்பற்றென்னும் வித்தை முளையுற்று, இலை விட்டு எழச் செய்தன. ஆதலால், அவர் இந்தியாவுக்கு வந்தவுடனே **காங்கிரஸ் மகா சபையிற்** சேர்ந்து, நாட்டுக்குத் தொண்டாற்ற முற்பட்டார். அவர், 1916-ஆம் ஆண்டு **இலட்சுமணபுரியில் கூடிய காங்கிரஸ் கூட்டத்தில் உத்தமர் காந்தியாரின் தொடர்பைப்** பெற்றார். அன்று முதல் காந்தத்தால் இழுக்கப்படும் இரும்பு போலக் **காந்தியடிகளின்** ஒப்பற்ற இலட்சியங்களில் ஈடுபட்டு, அவருடைய அரசியல் மாணவராய்த் திகழலானார்.

6. அதே ஆண்டில் ஜவாஹர் **கமலா நெஹ்ரூ** என்னும் அம்மையாரை மணம் புரிந்துகொண்டார். அவ்வம்மையார், எல்லாவற்றானும் கணவர்க்கு இனியர்; குண நலன்கள் நிரம்பியவர்; ஆங்கிலத்திலும், ஹிந்தியிலும் வல்லவர்; தியாகத்தில் தீவிரமானவர்; அஞ்சா நெஞ்சம் படைத்தவர். ஈடுமெடுப்புமற்ற இத்தம்பதிகட்குப் பிறந்த புதல்வியரே **இந்திரா நெஹ்ரூ** என்பவர்.

7. இனி நமது நாட்டு முதலமைச்சரின் குடும்பத்தவர் ஒவ்வொருவரும் நாட்டுக்குப் புரிந்த நற்றொண்டுகளைப்பற்றிக் கவனிப்போம்: ஜவாஹர் இங்கிலாந்திற்படித்துக்கொண்டிருந்த போது, இந்தியாவில் அரசியல் துறையில் கொந்தளிப்பு மிகுதியாய் இருந்தது. திலகர் போன்ற தீவிரவாதிகள் சிறையிலடைக்கப்பட்டார்கள். அப்போதுதான் நாட்டுப்பற்று மோதிலாலைப் பற்றியது. முதலில் அவர் மிதவாதியாகவே இருந்தார்.

8. 1921-ஆம் ஆண்டு **வேல்ஸ் இளவரசர்** இந்தியாவுக்கு வந்தார். அவரை வரவேற்கலாகாது என்று காங்கிரஸ் மகா சபை முடிவு செய்தது. அதன் பயனாக, மற்றத் தலைவர்களுடன் மோதிலாலும் சிறையிலிடப்பட்டார். இதனால், அவர் நோய்வாய்ப்பட்டார். அந்நிலையில் அவர் உப்புப் போர் தொடங்கச் சென்ற காந்தியடிகளைக் கண்டு, தமது விலைமதிப்பற்ற **ஆனந்த பவனம்** என்னும் மாளிகையைச் '**சுயராஜ்ய பவனம்**' எனப் பெயரிட்டு, நாட்டுக்கு நன்கொடையாக வழங்குவதாகத் தெரிவித்து, உப்புப் போரில் ஈடுபட்டார். அதனாற்சிறைப்பட, அவரது நோய் மிகுதியாயிற்று. 1931-ஆம் ஆண்டு அவர் தம்மை காண வந்த காங்கிரஸ் தலைவர்களை நோக்கி, "நான் விரைவிற் மாய்வேன். நீங்கள் சுதந்தர இந்தியாவைக் கண்டு களிப்பீர்களாக!" என்று கூறினார். என்னே அவர் நாட்டுப்பற்று!

9. நம் மாபெருந்தலைவரான ஜவாஹர்லால் அவர்கள், 1916-ஆம் ஆண்டு காங்கிரஸ் மகா சபையில் சேர்ந்தார் என்று கூறினோம். அதுமுதல் அவர் தம் நாட்டு விடுதலையை

விரும்பித் தீவிரமாகத் தொண்டாற்றத் தொடங்கினர். அதனால் அவர் அடைந்த பயன், பல முறை சிறை சென்றதேயாம். அவர் 1921-ஆம் ஆண்டு வேல்ஸ் இளவரசர் வரவை எதிர்த்தது காரணமாக, மூன்று திங்கள் சிறையிலிருந்தார்; பின்னர் வெளிநாட்டுத்துணி மறியலில் ஈடுபட்டு, இருபது திங்கள் சிறைப்பட்டார்; பின்னர் சைமன் குழுவினர் வரவை எதிர்த்துப் போலீஸாரால் தடியடிப்பட்டார்; மீண்டும் உப்புப் போரிலிறங்கி, ஆறு மாதச் சிறை வாழ்க்கையை அனுபவித்தார்; இங்ஙனம் மற்றும் பல முறை பல ஆண்டுகளைச் சிறையில் கழித்தார். நாட்டுரிமைப் போரில் தந்தையார், தாயார், மனைவியார் ஆகிய அனைவரையும், தமது பெருஞ் செல்வத்தையும் நாட்டுக்குத் தியாகம் செய்ததன்றித் தம்மையே தாய் நாட்டுக்கு அர்ப்பணம் செய்த அரிய உத்தமர் அவரையன்றி எவர் உளர்?

10. இனி, அவர்தம் மனைவியாரின் நாட்டுத்தொண்டைப் பற்றிக் கவனிப்போம்: கமலா நெஹ்ரூவைப் போன்ற உயர் குணம் வாய்ந்த பெண்டிர் உலகத்தில் ஒரு சிலரே தோன்றுவர். அவர் ஜவாஹரை மணந்த நாள் முதல் காங்கிரஸ் மகா சபையின் உறுப்பினராய்த் திகழ்ந்து, தம் வாழ்நாள் முழுவதையும் நாட்டுப்பணிக்கே நல்கினர். அவர் உப்புச் சத்தியாக்கிரகத்தில் ஜவாஹரின் தங்கையாரான கிருஷ்ணுவுடன் ஆண் உடையுடுத்து, தொண்டர் படையிற் பயிற்சி பெற்று, நாட்டுக்குத் தம் கடமையைச் செய்தனர்; தம் கணவர் சிறைப்பட்ட பிறகு தாமும் வரி கொடா இயக்கப் பிரசாரத்தால் சிறைப்பட்டார். பின்னர் அவர் நோயுற்ற போது, தம் கணவர் தம்பொருட்டு அரசியலரங்கினின்று விலக எண்ணியுள்ளார் என்ற தவருன செய்தியைக் கேள்விப்பட்டார்; உடனே தம் கணவரின் கைகளைப் பற்றிக் கொண்டு, தம் பொருட்டு நாட்டுப் பணியை நழுவ விடவேண்டா என்று வேண்டிக்கொண்டார். அவ்வம்மையாரின் நாட்டுப்பற்றை என்னென்று கூறுவது!

11. சொரூப ராணியாரும் நாட்டுப்பற்றில் தம் குடும்பத்தைச் சேர்ந்த எவர்க்கும் இளைத்தவரல்லர். அவர் நாட்டுரி-

மைக்காகப் போராடிய தம் கணவருக்கு உடனிருந்து உதவி புரிந்த உத்தமியாராவர். ஒரு சமயம் அலகாபாதில் நடைபெற்ற காங்கிரஸ் ஊர்வலத்தை அவர் தலைமை தாங்கி நடத்திப் போலீஸாரால் புடைக்கப்பெற்றார். பெறுதற்கரிய கணவரும், ஆருயிரன்ன மைந்தரும், கண்கள் போன்ற பெண் மக்களும், கருத்திற்கிசைந்த மருகியரும் அடுத்தடுத்துச் சிறையிலடைக்கப்பட்டபோதும் அவர் அதுகுறித்துச் சிறிதும் மனங்கலங்கித் தமது நாட்டுப்பற்றை நழுவவிடவில்லை. அவர் தம் அரும்பெருங்குணத்தை அளவிட்டுக் கூறுவது எங்ஙனம் இயலும்!

12. தாம் விரும்பியிருந்தால் அழகு மிக்க தமது ஆனந்த பவனத்தில் அளவற்ற செல்வத்தோடு அரசிளங்குமரரைப் போல ஆனந்த வாழ்க்கை நடத்தியிருக்கலாம் நம் நாட்டு முதல் அமைச்சர். அதை அவர் விரும்பவில்லை; இன்பத்தைத் துறந்தார்; துன்பத்தை மேற்கொண்டார்; ஒரு முறையன்று; ஒன்பது முறை சிறைக்குச் சென்றார்: தந்நலமற்ற தந்தையாரை இழந்தார்; அன்பு நிறைந்த அன்னையாரைப் பிரிந்தார்; மனத்துக்குகந்த மனைவியாரை இழந்த காலத்தும் கலங்கா நெஞ்சத்தோடு நாட்டுக்கு நற்பணியாற்றி, விடுதலை கண்டார்.

13. இத்தகைய தந்நலமற்ற உத்தமர்தாம், இன்று நம் நாட்டு முதல் அமைச்சராயிருந்து, நாட்டை நல்வழிப்படுத்த முயன்று வருகின்றார். அவர்தம் தங்கையாரான **விஜயலட்சுமியம்மையார்**, உரிமை இந்தியாவின் ஒப்பற்ற அரசியல் தூதராய், அயல் நாடுகளில் தங்கித் தம் நாட்டுக்கு ஏற்றம் தேடி வருகின்றார்.

14. இங்ஙனம் நாட்டின் நலத்தை நாடியுழைத்த நற்குடும்பத்தார் அனைவர்க்கும் நாம் என்றும் கடமைப்பட்டவராய் இருத்தலன்றி, அவர்களுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி நாட்டு நலத்தைக் கருதி உலையாது உழைத்தலும் வேண்டும்.

பயற்சி :

I. விடை எழுதுக :

அ. ஜவாஹர் குடும்பத்தவரை 'நாட்டுக்குழைத்த நல்லார்' என்று கூறுவது எங்ஙனம் பொருந்தும் ?

ஆ. 'நேஹ்ரூ' என்னும் பட்டம் வழங்கக் காரணம் யாது?

இ. ஜவாஹரின் தாய் தந்தையர் யாவர் ? அவர்களின் உயர்குணங்கள் யாவை ?

ஈ. கமலா நெஹ்ரூ செய்த தியாகங்கள் யாவை ?

உ. 'மோதிலால் நெஹ்ரூ தம்முடைய உடல், பொருள், உயிர் மூன்றையும் நாட்டுக்களித்தார்,' என்று கூறுவது எங்ஙனம் பொருந்தும் ?

ஊ. ஜவாஹரின் தங்கைமார் யாவர் ? அவர்கள் நாட்டுக்குப் புரிந்த தொண்டுகள் யாவை ?

எ. ஜவாஹரின் சிறப்பியல்புகள் யாவை ?

ஏ. அவர் நாட்டு விடுதலைக்காக அடைந்த துன்பங்கள் யாவை ?

II. எதிர்ப் பதங்கள் எழுதுக :

சுதந்தர நாடு, தந்நலம், அறப்போர், பேரரசர், சிறந்த, இறுதி, இளமை, தீவிரவாதி, உயர்குணம், நற்பணி.

III. வாக்கியங்களில் அமைக்க :

தந்நலமற்ற, குறிக்கோள், எழில், புலமை, நன்கொடை, கால்வழி, தியாகம், சொற்பொழிவு, நாட்டுப்பற்று, ஒப்பற்ற, இலட்சியம், அஞ்சா நெஞ்சம், குழு, அர்ப்பணம், பிரசாரம்.

IV. புத்தகத்தின் இறுதியில் உள்ள அகராதியைப் பார்த்துப் பொருள் எழுதுக :

தந்நலம், அமைச்சர், குறிக்கோள், புலமை, வழக்கறிஞர், மகவு, சிறுர், தொடக்கப்பள்ளி, இறுதி, சொற்பொழிவு.



2. மாட்டுக்கும் வாடகை; அதன் நிழலுக்கும் வாடகை

1. அவிவேக பூரணகுரு என்பவர் ஓர் ஆசாரியர். அவருக்கு மட்டி, மடயன், பேதை, மிலேச்சன், மூடன் என்ற ஐந்து சீடர்கள் இருந்தார்கள். அவர்களுக்குக் குருவினிடம் அளவற்ற அன்பும் மரியாதையுமுண்டு. குரு ஏவிய கட்டளைகளை அவர்கள் சிரமேற்றுங்கிச் செய்து முடிப்பார்கள்.

2. ஒரு நாள் குருவும் சீடர்களும் தொலையிலிருந்த ஓர் ஊருக்குப் பிரயாணம் செய்ய அவசியம் ஏற்பட்டது. அவ்வளவு தூரம் தங்கள் குரு நடந்து செல்ல இயலாதென்பதை அறிந்த சீடர்கள், அவர் ஏறிச் செல்வதற்கு ஒரு மோழை மாட்டை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு வந்தார்கள். அதற்கு நாளொன்றுக்கு மூன்று பணம் வாடகை கொடுக்க அவர்கள் இசைந்தார்கள். மாட்டுக்குரியவனும் அதற்கு ஒப்புக் கொண்டான்.

3. மடத்தில் கவனிக்க வேண்டிய அனைத்தையும் கவனித்துவிட்டு அவர்கள் புறப்படுவதற்குள், வெயில் கடுமை-

யாகக் காயத் தொடங்கிவிட்டது. அது வேனிற்காலமாத-லால், வழி செல்லச் செல்லக் கொள்ளிகொண்டு சுடுவது போல வெயிலெறிக்கத் தொடங்கியது. அவர்கள் சென்ற வழியோ, உண்ண நீரும் ஒதுங்க நிழலுமற்ற வெறு வெளி-யாகும். அந்த நிலையில் தொண்டு கிழவரான அவிவேகபூரண குரு வெயிலின் வெப்பத்தைத் தாங்க முடியாமல், பசுங்-கீரைத்தண்டு போலத் துவண்டு மாட்டின்மீது சாய்ந்து-விட்டார்.

4. அருகில் சென்றுகொண்டிருந்த சீடர்கள் அவரை விழாமற்றாங்கி, அவரது இளைப்பையாற்றுவதற்கு எங்கும் நிழலின்மையால், அவர் ஏறிச் சென்ற மாட்டின் நிழலில் அவரை இருக்கச் செய்து, தங்கள் மேலாடைகளால் விசிறி, அவரது களைப்பைப் போக்க முயன்றார்கள்; களைப்புச் சிறிது தெளிந்தவுடனே மீண்டும் அவரை அம்மாட்டின்மீது அமரச் செய்து, தொடர்ந்து பிரயாணம் செய்து, மாலையில் ஓர் ஊரை அடைந்தார்கள். அங்கிருந்ததொரு சத்திரத்தின் திண்ணையில் குருவை இருக்கச் செய்துவிட்டுச் சீடர்கள் மாட்டுக்காரனுக்குச் சேரவேண்டிய வாடகையாகிய மூன்று பணத்தைக் கொடுத்தார்கள். மாட்டுக்காரன் அதை வாங்க மறுத்துவிட்டான்.

5. அவர்கள், தாங்கள் பேசியபடியே வாடகை கொடுத்-தும், மாட்டுக்காரன் மறுத்ததற்குக் காரணம் யாதெனக் கேட்டார்கள். அவன், "ஐயன்மீர், எனது மாட்டை வாகன-மாக உபயோகித்ததற்குச் சேரவேண்டியது மூன்று பணமே-யானாலும், இடைவழியில் அதைக் குடையாக உபயோகித்த-தற்கு வாடகை கொடுக்க வேண்டாவோ?" என்றான். அது காரணமாக மாட்டுக்காரனுக்கும் சீடர்களுக்கும் பேச்சுமுற்றிச் சச்சரவு தொடங்கியது.

6. அதைக் கண்டு பலர் அங்குக் கூடினர். அவர்களுள் நியாயக்காரனொருவன் அவர்களை அணுகி, சச்சரவை நிறுத்-தினான்; பிறகு அவர்களுடைய சச்சரவுக்குக் காரணத்தைக் கேட்டறிந்து, "நீங்கள் இவ்வாறு சச்சரவிடுவது முறை-

யன்று; என் தீர்ப்புக்குக் கட்டுப்படுவதாயின், யான் ஒரு சிறிதும் பாரபட்சமின்றி உங்கள் சச்சரவைத் தீர்த்து வைக்கிறேன். என்ன சொல்கின்றீர்கள்?'' என்று கேட்டான். அதற்கு அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். உடனே அவன் பின் வருமாறு கூறத் தொடங்கினன்:

7. ''நான் சில நாட்களுக்குமுன் நெடுந்தொலையிலுள்ள பட்டணமொன்றுக்குப் பிரயாணம் செய்தேன். நடுவழியில் இருட்டிவிட்டபடியால், ஓர் ஊரிலிருந்த பெரியதொரு விடுதியில் தங்கினேன். அங்குத் தங்குவதற்கு விடுதிக்காரருக்குச் சேரவேண்டிய கட்டணத்தைத் தர நான் இசைந்தேன். அங்குத் தங்கியவர்களுக்கு உணவும் விலைக்குக் கிடைத்தது.

8. ''விடுதிக்காரர் என்னை அணுகி, 'உமக்கு உண்ணுவதற்கு ஏதேனும் வேண்டுமா?' என்று கேட்டார். நான், 'கட்டுச்சோறு கொண்டு வந்திருக்கிறேன். ஆதலால், எனக்கொன்றும் வேண்டா,' என்று பகர்ந்தேன். சிறிது நேரங்கழித்து அவ்விடுதிக்காரர் மற்ற பிரயாணிகளுக்காக மாமிசம் வறுக்கத் தொடங்கினர். அந்த மாமிசத்தின் மணம் என் மனத்தைக் கவர்ந்தபடியால், என் கட்டுச்சோற்றைக் கொண்டு போய் இறைச்சியைப் பக்குவப்படுத்திக்கொண்டிருந்த அடுப்பின் அருகில் அமர்ந்து, அந்நறுமணத்தை மோந்துகொண்டே அதைச் சாப்பிட்டேன். அந்த இடத்தை விட்டு எழுந்தவுடனே, விடுதிக்காரர் என் கையைப் பற்றிக்கொண்டு, கறியின் மணத்தை மோந்ததற்குப் பணம் கேட்டார். நான், 'தரமாட்டேன்,' என்றேன். அவர் விடவில்லை. அதனுல், விவாதம் முற்றியது.

9. ''இருவரும் அவ்வூர் நீதிபதியிடம் சென்று எமது வழக்கைத் தெரிவித்தோம். அவர் கூறிய தீர்ப்பைக் கேளுங்கள்: 'கறி தின்றுல் அதற்குப் பணம் தரவேண்டும். கறியின் மணம் மோந்தால், அதற்குப் பணத்தின் மணம் தந்தால் போதும். அதுவே நியாயம்,' என்று கூறினர்; உடனே என்னிடமிருந்து ஒரு ரூபாயை வாங்கி, அதை விடுதிக்காரர்

மூக்கின் அருகில் வைத்து, மோக்கச் சொல்லி அனுப்பிவிட்டார். இந்த வழக்கும் அத்தன்மையதே. மாட்டின்மீது ஏறி வந்ததற்கு வாடகையைச் செலுத்த வேண்டுவது பணம்; மாட்டின் நிழலில் தங்கியதற்கு வாடகையாகப் பணத்தின் நிழலைக் காட்டவேண்டும். இவ்வளவுதான்!''

10. அது கேட்ட மாட்டுக்காரன் நல்லறிவு பெற்றுத் தனக்குச் சேரவேண்டிய மூன்று பணத்தைப் பெற்றுக்கொண்டு போனான்.

பயிற்சி:

I. விடை எழுதுக:

அ. சீடர்கள் மாட்டை ஏன் வாடகைக்கு அமர்த்தினார்கள்?

ஆ. குருவும் சீடரும் பிரயாணம் செய்த நாளும் வழியும் எத்தகையவை?

இ. சீடர்கள் குருவை எதன் நிழலில் இருக்கச் செய்தார்கள்? ஏன்?

ஈ. மாட்டுக்காரன் ஏன் வாடகையை வாங்க மறுத்துவிட்டான்?

உ. சீடர்களுக்கும் மாட்டுக்காரனுக்கும் நீதி வழங்க முற்பட்டவன் யார்?

ஊ. அவன் கூறிய கதை யாது?

எ. அவன் வழங்கிய தீர்ப்பு என்ன?

II. 1. இக்கதையைக் குருவே சொல்வது போல எழுதுக.

2. இக்கதையை மாட்டுக்காரன் கூறுவதுபோல எழுதுக.

III. எதிர்ப் பதங்கள் எழுதுக:

வெப்பம், மறுத்தான், முடித்தான், நன்மதி, அளவற்ற, இசைந்தன, கிழவன்.

IV. கீழ் வரும் வாக்கியங்களைச் சிறு வாக்கியங்களாக எழுதுக:

1. அவ்வளவு தூரம் தங்கள் குரு நடந்து செல்ல இயலாதென அறிந்த சீடர்கள், அவர் ஏறிச் செல்வதற்கு ஒரு மோழை மாட்டை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு வந்தார்கள்.

2. அருகில் சென்றுகொண்டிருந்த சீடர்கள், அவரை விழாமற்றாங்கி, அவரது இளைப்பையாற்றுதற்கு எங்கும் நிழலின்மையால், அவர் ஏறிச் சென்ற மாட்டின் நிழலில் அவரை இருக்கச்செய்து, தங்கள் மேலாடைகளால் விசிறி, அவரது களைப்பைப் போக்க முயன்றார்கள்.

V. பொருள் எழுதுக:

மோழை மாடு, வேனில், தொண்டு கிழவர், அமரச்செய்து, வாகனம், அணுகி, பாரபட்சம், விடுதி.

3. சிந்தாமணியின் சிறப்பு

1. நம் தமிழ்மொழியில் வழங்கும் நூல்கள் பல. ஐயந்திரிபறக் கற்ற தமிழ்ப் புலவர்களால் பெரிதும் போற்றப்படுவன, அவற்றுள் சிலவே. அச்சிலவற்றுள்ளும் **பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு** என்னும் சங்க நூல்களும், சங்க காலத்தையடுத்துத் தோன்றிய **ஐம்பெருங்காப்பியங்கள்** என வழங்கும் **சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி** என்பனவும் முதன்மையானவை. இப்பாடத்தில் சிந்தாமணியின் சிறப்பைப் பற்றிப் படிப்போம்:

2. சிந்தாமணியின் சிறப்பு முழுவதையும் ஆராய்ந்தறிதல் எளிதன்று. இந்நாலுக்கு இப்பெயர் வழங்குதற்கு அறிஞர்கள் பல காரணங்கள் கூறுவர்: 'இந்நூலின் கதாநாயகனை **சீவகன்** என்பவனை அவன் அன்னையான **விசயை**, '**சிந்தாமணியே**' என்று பாராட்டினபடியால், சிந்தாமணி என்னும் சொல் முதலில் அவனுக்குப் பெயராய், பின்னர் அவன் சரித்திரமாகிய நூலுக்காயிற்று.' என்பர் சிலர். 'இந்நூலின் இறுதியிலுள்ள ஒரு செய்யுளில் இதற்குச்

சிந்தாமணி என்னும் பெயர் வழங்கப்பெற்றிருக்கிறது. அதனால் இதற்கு இப்பெயர் வந்தது,' என்பர் சிலர். 'இந்நாலின்கண் மூன்றிடங்களில் சிந்தாமணி என்னும் சொல் இடம் பெற்றுள்ளது. ஆதலின் இந்நாலுக்கு இப்பெயர் வழங்குவதாயிற்று,' என்பர் மற்றுஞ்சிலர். 'சிந்தாமணி என்பது தேவேந்திரனுக்குரியதோர் இரத்தினம். அது, தன்னை வைத்திருப்பவர் நினைத்தவற்றையெல்லாம் நல்கும் தன்மையது. அதுபோலப் புலவர் சிந்தித்தவற்றையெல்லாம் தரத்தக்க பெருமையுடைய நூலாதலின், இதற்குச் சிந்தாமணி என்னும் பெயர் வழங்குவதாயிற்று,' என்பர் வேறு சிலர்.

3. தமிழ் மொழியில் சிந்தாமணி என்னும் பெயருடைய நூல்கள் பல உண்டு. வைத்திய சிந்தாமணி, சோதிட சிந்தாமணி, வேதாந்த சிந்தாமணி என்பன அவற்றுள் சில. இவற்றினின்றும் வேறுபடுத்திக் காட்டுவதற்காகவே இது **'சீவக சிந்தாமணி'** என்று வழங்கப்படுகிறது. இந்நூலுக்கு **'மண நூல்'** என்னும் ஒரு பெயரும் உண்டு. இந்நூல் பதின்மூன்று பிரிவுகளை உடையது. இதன் ஒவ்வொரு பிரிவும் **'இலம்பகம்'** எனப்படும். இதிற்கூறப்பட்ட பதின்மூன்று இலம்பகங்களில் எட்டு, சீவகன், **காந்தருவதத்தையார்** முதலிய மகளிர் எண்மரைத் தனித்தனி மணம்செய்துகொண்டசெய்திகளைக் கூறுகின்றன. இங்ஙனம் நூல் முழுவதும் மணங்களே கூறப்படுதலின், இதற்கு மண நூல் என்னும் பெயர் வழங்குவதாயிற்று.

4. நாம் இதுவரையில் சிந்தாமணியின் பெயரைப்பற்றி ஆராய்ந்தோம்; இனி அதன் சிறப்புக்குரிய காரணங்களை ஆராய்வோம்: ஐம்பெருங்காவியங்களுள் காலத்தால் முற்பட்டவை **சிலப்பதிகாரமும் மணிமேகலையும்**. ஆனால் அக்காவியங்களின் பெயர்களை எழுதும்பொழுதும் சொல்லும்பொழுதும் சிந்தாமணியே முதலிடம் பெறுகின்றது. இதனால், இதன் பெருமை நன்கு விளங்குகின்றதன்றோ?

5. செந்தமிழ் மொழியிற் சிறந்து விளங்கும் பழைய இலக்கிய இலக்கண நூல்கள் பலவற்றிற்கு உரை எழுதிய

உரையாசிரியர்கள், தங்கள் உரையில் இந்நூலினின்றும் பல செய்யுட்களை மேற்கோளாக எடுத்துக் காட்டியுள்ளார்கள். சங்க இலக்கியங்களின் தமிழ் நடைபோன்று இந்நூலின் தமிழ் நடை மிகச் சிறந்து விளங்குகின்றது. அன்றியும், இதன்கண் எல்லா வகையான வருணனைகளும் இடம் பெற்றுள்ளன. ஆதலால், பிற்காலத்தில் காவியங்கள் இயற்றிய பெரும்புலவர்கள் இவ்வருணனைகளை நன்கு பயன்படுத்திக்கொண்டார்கள். எடுத்துக் காட்டாகக் **கம்பராமாயணத்**தைக் கூறலாம். கம்பர் தமது இராமாயணத்தை அரங்கேற்றியபோது சில செய்யுட்களில் சிந்தாமணித் தொடர்கள் இருக்கக் கண்ட புலவர் ஒருவர், "இவை சிந்தாமணித் தொடர்களாய் இருக்கின்றனவே!" என்றாராம். அப்போது கம்பர், "ஆம்; சிந்தாமணியினின்றும் ஓர் அகப்பை முகந்துகொண்டேன்," என்று விடை கூறினாராம். இதனாலும், சிந்தாமணியின் பெருமை நமக்கு விளங்குகிறதல்லவா?

6. **சேக்கிழார்** என்னும் புலவர் காலத்திலிருந்த சோழ மன்னன் சைவன். ஆனால், அவன் சமண காவியமாகிய சிந்தாமணியைப் பெரிதும் விரும்பிப் படித்து வந்தான் என்னும் செய்தியும் சிந்தாமணியின் பெருமையை விளக்கும் சான்றுகளுள் ஒன்றும். தமிழ் மொழியில் சிந்தாமணி என்னும் பெயரையுடைய நூல்கள் பல இருப்பினும், சிந்தாமணி என்னும் சொல் சீவக சிந்தாமணியொன்றையே குறிப்பதை நாம் அறிவோம். இதனாலும் இந்நூலின் பெருமை இனிது விளங்குகின்றது.

7. சீவக சிந்தாமணியை இயற்றியவர் **திருத்தக்க தேவர்** என்பவர். அவர் சமணர்; சோழர் குடியிற் பிறந்த அரச முனிவர். அவர் இயற்றிய பாடல்கள் 2700. ஆனால், இப்பொழுது சிந்தாமணியில் 445 பாடல்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. அவை பிற்காலத்தவரால் இடை இடையே புகுத்தப்பட்டவை. சிந்தாமணியில் **திருக்குறள், புறநானூறு** போன்ற அரிய நூல்களின் கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. இந்நூல் சிறந்த உவமைகளுக்குக் களஞ்சியமாய் விளங்குகிறது. எந்தச் சமயக் காப்பியமாயினும் சரி, நமக்கு வேண்டுவனவெல்லாம் கவியின் அழகும், மனித வாழ்க்கையைச்

செம்மைப்படுத்தக்கூடிய சீரிய கருத்துக்களேயாகும். அவை இந்நூலின்கண் பரக்கக் காணப்படுகின்றன. ஆதலின், தமிழரனைவரும் இதனை நன்கு கற்று நற்பயனடைதல் வேண்டும்.

பயிற்சி :

I. விடை எழுதுக :

அ. சங்க நூல்கள் எவை ?
ஆ. ஐம்பெருங்காப்பியங்கள் எவை ?
இ. சிந்தாமணியின் பெயர்க் காரணங்களைக் கூறுக.
ஈ. இதைச் 'சீவக சிந்தாமணி' என்று குறித்தற்குரிய காரணம் யாது ?
உ. சிந்தாமணிக்கு 'மணநூல்' என்னும் பெயர் வழங்கக் காரணம் என்ன ?
ஊ. சிந்தாமணியின் பெருமைக்குரிய காரணங்கள் யாவை ?
எ. சிந்தாமணியை இயற்றியவர் யார் ?

II. வாக்கியங்களில் அமைக்க :

ஐயந்திரிபற, ஆராய்ந்து, எளிதன்று, நல்கும், நிகழ்ச்சி, இலக்கியம்.

III. எதிர்ச்சொற்கள் எழுதுக :

பல, போற்று, சிறப்பு, வேறுபடுத்து, முற்பட்டவை, விடை, பெருமை.

IV. இரண்டிரண்டாகத் தரப்பட்டுள்ள வாக்கியங்களை இணைத்து ஒவ்வொரு வாக்கியமாக எழுதுக :

1. நம் தமிழ் மொழியில் வழங்கும் நூல்கள் மிகப்பல.
புலவர்களால் போற்றப்படுவன அவற்றுள் சில.
2. இந்நூலில் மூன்றிடங்களில் 'சிந்தாமணி' என்னும் சொல் வந்துள்ளது.
ஆதலால், இதற்குச் 'சிந்தாமணி' என்னும் பெயர் வந்தது.

V. அகராதியைப் பார்த்துப் பொருள் எழுதுக :

வரலாறு, நல்கும், நிகழ்ச்சி, நாமகள், மணமகள், பூமகள், இலக்கியம், காவியம், வருணனை, எடுத்துக்காட்டு, சான்று, உவமை, சமயம், சீரிய.

4. ரேடியோ அல்லது ஒலி பரப்பி

1. விஞ்ஞானக் கலை உன்னத நிலையை அடைந்து வரும் இக்காலத்தில் பல புதுமைகள் வெளிப்போந்துள்ளன. அவற்றுள் சிறந்ததும், மிக்க பயனுள்ளதும் **ஒலி பரப்பி.** பல்லாயிர மைல் தொலையில் உள்ளவர் பேசுவதையும், பாடுவதையும், அண்மையிலிருந்து பேசப்படுவது போலவும் பாடப்படுவது போலவும் செய்வது இக்கருவியே. இஃது எங்ஙனம் இயலும் என்பதை ஆராய்வோம் :



2. நீர் நிலையொன்றில் ஒரு கல்லை எறிந்தால் நாம் காண்பது யாது? அந்நீரில் கல் விழுந்த இடத்திலிருந்து அலைகள் தோன்றி, எல்லாப் பக்கங்களிலும் செல்கின்றன; இவ்வலைகளைத் தாங்கி நிற்பது யாது? அந்நீர் நிலையின் நீர்ப் பரப்பேயன்றோ ?

3. மின்சார சக்தியினுல் கம்பியின் மூலம் செய்திகள் அனுப்புவதைப்பற்றி நாம் அறிவோம். ஆனல், கம்பியில்லாமலே மின்சார சத்தியால் ஓரிடத்தினின்று பிறிதோரிடத்திற்குச் செய்தியனுப்ப இயலுமா என்பதை ஆராயப் புகுந்தார், **மார்க்கோனி** என்னும் ஒரு விஞ்ஞானியார். அவர் இத்தாலி நாட்டில், **'பொலோனு'** என்னுமிடத்தில், 1874-ஆம் ஆண்டில்

பிறந்தவர். குக்லில்மோ மார்க்கோனி என்பது அவரது முழுப் பெயர்.

4. மார்க்கோனி தம் நுண்ணிய அறிவின் திறத்தாலும், தமக்கு முன்னர் ஆராய்ச்சி நடத்திய சில விஞ்ஞானிகள் கண்டு வெளியிட்ட உண்மைகளின் ஆதரவாலும், நம்மைச் சூழ்ந்-துள்ள வானவெளியில் மிக நுண்ணிய அணுத்திரள்களா-லாகிய ஒரு பொருள் இருக்கிறது என்பதை நிச்சயித்தார். அதற்கு 'ஈதர்' என்பது பெயர். முன்னர்க் கூறப்பட்டபடி, நீர்ப்பரப்பின் மீது நீர் அலைகள் விரைவது போல இந்த ஈதர் என்னும் பொருளின் மூலம் **மின் அலைகள்** பிரவக்கூடும் என்-பதை அவர் கண்டறிந்தார்,

5. அது முதல் மார்க்கோனி மின் அலைகளின் மூலம் கம்பியில்லாமலே செய்திகளையனுப்ப இயலும் என்னும் துணிவோடு மேலும் பல ஆராய்ச்சிகளை நடத்தி வந்தார். அவற்றின் பயனுக, அவர் மின் அலைகளைத் தம் விருப்பம் போல் இயக்குவதற்கும், அவை தொலையிலுள்ள மின்சாரக் கருவியில் தாக்குவதற்குமான வழிகளைக் கண்டறிந்தார்; இறுதியில் 1896-ஆம் ஆண்டு கம்பியின்றிச் செய்தியனுப்பக் கூடிய கருவிகளைக் கண்டறிந்தார்.

6. தொடக்கத்தில் அண்மையிலுள்ள இடங்களுக்கு மட்டுமே இம்முறைப்படி செய்தியனுப்ப முடிந்தது. எனி-னும் மார்க்கோனி தமது இடையரு முயற்சியால் நெடுந்-தொலையிலுள்ள இடங்களுக்கும் செய்திகளையனுப்பி வெற்றி பெற்ருர். அன்றியும் ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்துக்கு அனுப்பப்படும் செய்திகளைப் பிறர் அறியாமல் தடுப்பதற்-கான முறையையும் ஆராய்ந்தறிந்தார்.

7. இம்முறைப்படி, மின் அலைகளின் வேகமும் அசை-வும் பல்வேறு அளவுகளாக மாற்றி அனுப்பப்படும். இம்-முறைக்கு ஆங்கிலத்தில் '**டியூனிங்**' என்பது பெயர். செய்தி அனுப்பும் கருவி, இந்த அளவுக்கு ஏற்றவாறே அமைக்கப்-பட்டிருக்கும். ஆனல் **செய்தி வாங்கியாகிய 'ரிஸீவர்'** என்னும் கருவி, வேண்டும் போது, வேண்டும் அளவுக்கு ஏற்றவாறு

மாற்றிக்கொள்ளக் கூடியதாய் அமைக்கப் பெற்றிருக்கும் ஆகவே, ஓரிடத்திலிருந்து அனுப்பப்படும் செய்தி வெளிப்படும் மின் அலைகளின் வேகத்தையும், அசைவின் அளவையும் முன்னரே அறிந்தவர் மட்டுமே அவற்றுக்கேற்பச் 'செய்தி வாங்கி'களைத் திருப்பி வைத்துச் செய்தியைப் பெறலாம். பிற இடங்களுக்கு அச்செய்தி எட்டாது.

8. மார்க்கோனி இதைக் கண்டறிந்ததோடு அமையாமல், தம் ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்தி, **'ரேடியோ'** என்னும் **ஒலி பரப்பியை** உருப்பெறச் செய்தார். இதன் உதவியால் குற்றெலி நெட்டொலிகளின் வடிவில் அனுப்பப்பட்டு வரும் கம்பியில்லாத் தந்திச் செய்திக்குப் பதில், ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குப் பேச்சொலியும், பாட்டொலியும் அனுப்புவது சாத்தியமாயிற்று. இஃது எங்ஙனம் இயலும் என்பதைக் கவனிப்போம் :

9. ஒருவர் பேசினாலும், அன்றிப் பாடினாலும், அப்பேச்சிலோ அல்லது பாட்டிலோ உள்ள பல வகையான ஒலிகளை **மின்-காந்தத்தால்** (எலெக்ட்ரோ மாக்னெட்டு) ஆகிய ஒரு கருவி, மின் அலைகளாக மாற்றி, வானில் செலுத்துகின்றது. அந்த அலைகள், வானிலுள்ள ஈதரின் மூலம் பல திசைகளிலும் பரவுகின்றன. அலைகளை ஏற்றுக்கொள்வதற்கெனத் தயாரிக்கப்பட்டுள்ள 'ரிஸீவர்' என்னும் ஒலி வாங்கி, அந்த அலைகளை எளிதில் ஏற்று, **'லௌட் ஸ்பீக்கர்'** என்னும் **ஒலி பெருக்கியிற்** செலுத்துகிறது. அப்போது அந்த அலைகள் பழைய ஒலியின் வடிவாக மாறிப் பேச்சாகவோ, பாட்டாகவோ தெளிவுபட வெளிப்படுகின்றன. இக்கருவிகள் அனைத்தும் சேர்ந்ததே **'ரேடியோ'** எனப்படுவது.

10. இத்தகைய ரேடியோவினால் இக்காலத்தில் நாம் எய்தும் பயன்களைக் கணக்கிட்டுக் கூற முடியாது. இதன் உதவியால், எண்ணற்ற உயிர்களும், கணக்கற்ற கப்பல்களும் அபாயத்தினின்றுங் காக்கப்படுகின்றன. பல்லாயிர மைல் தூரத்தில் பேசப்படும் பேச்சும், பாடப்படும் பாட்டும் நமது வீட்டிலேயே பேசப்படுவது போலவும், பாடப்படுவது போல-

வும் நமக்குக் கேட்கின்றன. இது விஞ்ஞானக் கலை நமக்களித்துள்ள நல்வரமன்றோ!

பயிற்சி :

I. விடை எழுதுக :

அ. 'மார்க்கோனி' என்பவர் யார்? அவர் மேற்கொண்ட ஆராய்ச்சி யாது?

ஆ. 'ஈதர்' என்பது யாது?

இ. 'டியூனிங்' என்பது என்ன?

ஈ. ரேடியோவில் அடங்கியுள்ள கருவிகள் யாவை? ஒவ்வொரு கருவியாலும் ஏற்படும் பயன் யாது?

உ. ரேடியோவால் மக்கள் சமூகத்துக்கு ஏற்படும் நன்மைகள் யாவை?

II. சொல்லியுள்ளபடி செய்க :

1. விஞ்ஞானக் கலை உன்னத நிலை அடைந்துள்ள இக்காலத்தில் பல புதுமைகள் வெளிவந்துள்ளன. (தடித்த எழுத்திலுள்ள தொடர்களுக்குப் பதில், பொருள் வேறுபடாமல் ஏற்ற தொடர்களைச் சேர்த்தெழுதுக.)

2. அவர் இத்தாலி நாட்டில் பிறந்தார். ('பிறந்தார்' என்னும் சொல்லுக்குப் பதில் 'பிறப்பிடம்' என்னும் சொல்லை அமைத்து வாக்கியத்தை எழுதுக.)

III. வாக்கியங்களில் அமைக்க :

கலை, உன்னத நிலை, அண்மை, நீர் நிலை, நுண்ணிய, கருவிகள், புதுமை, இயலும், இயக்கு.

IV. அகராதியைப் பார்த்துப் பொருள் எழுதுக :

பிறிதொரு, விஞ்ஞானி, அணுத்திரள், நுண்ணிய, இயக்க, இடையறு முயற்சி, குற்றொலி, நெட்டொலி.

5. புலவர்க்குச் சாமரை வீசிய புரவலர்

1. வஞ்சி நகரிலிருந்து சேர நாட்டையாண்ட மன்னர்களுள் பெருஞ்சேரலிரும்பொறை என்பவர் ஒருவர். அவர் தகடூர் என்னும் நகரத்தை ஆண்டு வந்த ஒப்பற்ற வீரரான அதியமான் நெடுமானஞ்சியைப் போரில் வென்றார்: தகடூரை அழித்தார்; அக்காரணத்தால், சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறை என்னும் விருதுப் பெயரையும் பெற்றார். அவர் அறநெறி வழுவாதவர்; கொடையிற்சிறந்தவர். புலவர்களை ஆதரித்த புரவலர்; செந்தமிழ் போற்றிய சீரிய மன்னர்.

2. இரும்பொறையின் புகழ் எங்கும் பரவியது. ஆதலால், பழுத்த மரங்களைத் தேடிச் செல்லும் பறவைகளைப்போலப் புலவர் பலர் அவரை நாடிச் சென்று, பாக்கள் பாடிப் பரிசு பெற்றுச் செல்வது வழக்கமாயிற்று. அங்ஙனம் இரும்பொறையை நாடிச் சென்ற புலவர்களுள் மோசி கீரனார் என்பவர்

ஒருவர். அவர் பாண்டி நாட்டைச் சேர்ந்தவர். அவர் சிறந்த அறிவுரைகள் நிறைந்த பாக்களை இயற்றி, மன்னரை மகிழ்விப்பது வழக்கம். ''உலகில் மக்கள் உயிர் வாழ்வதற்கு நெல்லும் நீரும் இன்றியமையாதவை. ஆனால், உண்மையில், மக்களுக்கு நெல்லும் உயிரன்று ; நீரும் உயிரன்று ; அவற்றைக் குடிகள் பெற்று மகிழுமாறு செங்கோல் செலுத்தும் அரசனே உயிராவன்,'' என்னும் கருத்தடங்கிய செய்யுள் மோசி கீரனார் இயற்றிய செய்யுட்களுள் ஒன்று.

3. இத்தகைய சிறந்த கருத்துக்களமைந்த செய்யுட்களை இயற்றிய புலவரின் நுண்ணறிவைக் கண்டு வியந்த இரும்பொறை, அவரிடம் நட்புரிமை பூண்டார். ஆதலால், புலவர் அடிக்கடி அரசர் அவைக்குச் சென்று, அரிய அறிவுரைகளைக் கூறி, அரசரை அகமகிழச் செய்வது வழக்கமாயிற்று.

4. ஒரு நாள் புலவர் நெடுந்தொலையிலிருந்து காவலரைக் காண வந்தார். அப்போது அரசர் அவையில் இல்லை. அரசர் வருகைக்காகக் காத்திருந்த புலவர், நெடுந்தூரம் நடந்து வந்த களைப்பால், அங்கிருந்த ஓர் அழகிய கட்டிலின்மீது ஏறிப்படுத்தார். களைப்புற்றிருந்த அவர் அக்கட்டிலின் தன்மையைச் சிறிதும் ஆய்ந்தாரில்லை. படுத்தவர் சிறிது நேரத்திற்குள் நித்திரையிலாழ்ந்தார்.

5. புலவர் ஏறிப் படுத்த கட்டில் சாதாரணமானதன்று. அஃது அரசருடைய வீரமுரசம் வைக்கப்படும் முரசு கட்டில். வீரமுரசம் என்பது, அரசர்களின் மதிப்புக்கும் வணக்கத்துக்கும் உரியது. அதனைக் குறித்த நாட்களில் நீர்த்துறைக்குக் கொண்டு சென்று நீராட்டுவர். பின்னர் உழிஞைத் தளிரும் மயில் தோகையும் சேர்த்துத் தொடுத்த மாலையை அதற்குச் சூட்டுவர். பிறகு இரத்தமும் கள்ளும் கலந்த சோற்றுருண்டையை அதற்குப் படைப்பர். இறுதியாக அதனை அரண்மனையில் அழகிய வெண்மெத்தையிட்ட கட்டிலில் வைத்து வணங்குவர். இவ்வணக்கத்துக்கு அரசரும் உடனிருப்பர்.

6. ஆதலால், முரசு கட்டில் அரசருடைய அரியணைக்கு நிகரான பெருமையுடையது. அரசரையன்றி அரியணையில் ஏறத் துணியும் ஒருவனுக்கு என்ன தண்டனை விதிக்கப்படுமோ, அதே தண்டனை முரசு கட்டிலில் ஏறுகின்றவனுக்கும் விதிக்கப்படும். இவையனைத்தையும் மோசிகீரனுர் அறிந்தவரே. ஆயினும், அவர் தம் களைப்பு மேலிட்டால், தாம் ஏறிப் படுத்தது முரசு கட்டில் என்பதைக் கவனிக்கவில்லை. அவர் வந்த பொழுது முரசம் நீர்த்துறைக்குக் கொண்டு போகப்பட்டிருந்தபடியால், கட்டில் காலியாய் இருந்தது.

7. நீர்த்துறையினின்று முரசம் கொண்டு வரப்பட்டது. பிரதானிகள் சூழ அரசரும் அதனுடன் வந்தார். கட்டிலை அணுகியபோது, அதன்மீது யாரோ ஒருவர் உறங்குவதைக் காவலர் கண்டார். அவர்க்குச் சினம் மூண்டது. கண்கள் கனல் வீசின. அவர் வாளை உருவிக் கையிற்பிடித்துக் கட்டிலின் அருகிற்சென்ருர். உடனிருந்தோர் திகைத்து நின்றனர். புலவர் உடல் இரு துண்டாகி இருக்கவேண்டும். ஆனுல், நல்வினைப் பயனுக அது நிகழவில்லை. கட்டிலிற் படுத்திருந்தவரை வெட்டுதற்குக் கையைத் தூக்கிய புரவலர், புலவர் முகத்தைக் கண்டுவிட்டார். அவரை அறியாமலே அவர் கையினின்று வாள் நழுவியது. அடுத்த கணத்தில் ஆங்கிருந்த கவரியொன்று காவலர் கையிற்காட்சியளித்தது. புரவலர், புலவர் உடல் குளிரச் சாமரை வீசி நின்றதைக் கண்ட அனைவரும் திகைப்பு நீங்கி வியப்பில் ஆழ்ந்தனர்.

8. தம்மை மறந்து தூங்கிக்கொண்டிருந்த மோசிகீரனுர், சிறிது நேரங்கழித்துக் கண் விழித்தார்; அருகில் அரசர் நின்று கவரி வீசுவதையும், அண்மையில் வீர முரசு இருப்பதையும், அதைச் சூழப் பிரதானிகள் நிற்பதையும் கண்டார்; திடுக்கிட்டெழுந்தார். தாம் செய்த தவற்றை உணர்ந்தார். அத்தவற்றுக்குத் தம்மை கொல்லாமல் மன்னித்ததுமன்றி, மன்னர் தம் மலர்க் கரத்தால சாமரை வீசி நின்ற நிலையைக்

கண்டபோது உள்ளம் உருகி, ஒன்றும் பேசாமல், திகைத்து நின்ருர்.

9. புலவரது நிலையை உணர்ந்த மன்னர், அவரை அன்புடன் தழுவிக்கொண்டு, "அன்பரே, அஞ்ச வேண்டா! நெடுந்தூரம் நடந்தமையால் களைத்தீர் போலும்! ஏன் எழுந்துவிட்டீர்? இன்னும் சற்று நேரம் உறங்கலாமே!" என்று ஆதரவு பெருகக் கூறினர்.

10. அதுகேட்ட புலவர், "மன்னர் ஏறே, யான் இது முரசு கட்டில் என்பதை அறியாது இதில் ஏறி உறங்கினேன்! இத்தகைய மன்னிக்க முடியாத குற்றம் செய்த என்னை நுமது வாளால் இரு கூருக்கியிருக்க வேண்டும்! அங்ஙனம் செய்யாமைக்கு நமது தமிழறிவன்ருே காரணமாயிற்று? அன்றியும், எனக்குச் சாமரை வீசி நின்றீர்! இப்பணியைத் தமிழுக்கன்ருே புரிந்து புகழ் எய்தினீர்! உலக முழுவதும் பரவத் தக்க இப்புகழ், மேல் உலகத்திலும் உமக்குச் சிறப்பை அளித்தல் நிச்சயம்!" என்று வாழ்த்தினர்.

11. இரும்பொறையின் இனிய செயலை என்னென்று புகழ்வது! அவரது தமிழ்ப் பற்றல்லவா புலவரது மன்னிக்கத் தகாத குற்றத்தையும் மன்னிக்கச் செய்தது! தாம் மன்னர் என்பதை மறந்து, ஓர் எளியவனைப் போலக் கையில் கவரி கொண்டு வீசச் செய்தது எது? தண்டமிழ் மொழியின்பால் அவருக்கிருந்த அளவற்ற ஆர்வமன்ருே!

பயிற்சி :

I. விடை எழுதுக :

அ. வஞ்சியைத் தலைநகராகக் கொண்டு சேர நாட்டை ஆண்டவர் யார்?

ஆ. அவர் யாரைப் போரில் வென்ருர்?

இ. அவருக்கு வழங்கிய விருதுப் பெயர் யாது?

ஈ. மோசி கீரனர் என்பவர் யார்?

உ. அவர் இழைத்த குற்றம் யாது?

ஊ. முரசு கட்டில் என்பது என்ன?

எ. மோசி கீரனார் செய்த தவற்றுக்கு அரசர் அவரை என்ன செய்தார்? ஏன் அவ்வாறு செய்தார்?

II. வாக்கியங்களில் அமைக்க:

சாமரை, ஒப்பற்ற, வழுவாத, அறிவுரை, நுண்ணறிவு, நட்புரிமை, அணுகி, திகைப்பு.

III. சொல்லியுள்ளபடி செய்க:

1. வஞ்சி நகரிலிருந்து சேரநாட்டை ஆண்ட மன்னர்களுள் பெருஞ்சேரலிரும்பொறை என்பவர் ஒருவர். (இரண்டு வாக்கியங்களாக எழுதுக.)

2. ஒப்பற்ற வீரரான அவர் தகடூரைத் தகர்த்தார். (தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்குப் பதில் பொருள் மாறுபடாமல் வேறு சொற்களை அமைக்க.)

3. மோசி கீரனார் ஒரு புலவர். அவர் பாண்டி நாட்டைச் சேர்ந்தவர். அவர் இரும்பொறையை நாடிச் சென்றார். (இம்மூன்று வாக்கியங்களையும் ஒரே வாக்கியமாக எழுதுக.)

IV. எதிர்ச்சொற்கள் எழுதுக:

அழித்தார், வழுவாதவர், சிறந்தவர், போற்று, நட்பு, சோர்வு.

V. அகராதியைப் பார்த்துப் பொருள் எழுதுக:

விருதுப் பெயர், வழுவாதவர், சாமரை, நுண்ணறிவு, அகம் மகிழ, ஆய்ந்தாரில்லை, உழிஞை, தொடுத்த, கவரி.

6. நமது நாட்டுச் செல்வம்

1. நமது நாடு பயிர்த்தொழில் நாடு. நம் நாட்டு மக்களுள் நூற்றுக்கு எண்பத்தொன்பது பேர் கிராமங்களில் பயிர்த்தொழில் புரிபவர். இவர்களுடைய தொழிலுக்கு மாடுகள் இன்றியமையாதவை. உழுதொழில் புரிபவர், ஏர் உழுவதற்கும், பரம்பு அடிப்பதற்கும், நீர் இறைப்பதற்கும், எருவடிப்பதற்கும், வண்டி இழுப்பதற்கும் மாடுகளையே உபயோகிக்கின்றனர். வேறெந்த நாட்டிலும் மாடுகளை இத்தனை வேலைகட்குப் பயன்படுத்துவதில்லை. ஆகவே, நமது நாட்டு வாழ்க்கையில் மாடுகள் எத்துணை முக்கியமான பங்கு கொள்கின்றன என்பது புலப்படுகின்றதல்லவா? இதனாலேதான் 'செல்வம்' எனப் பொருள்படும் 'மாடு' என்னும் பெயரை அவற்றுக்கு வழங்குகிறோம்.

2. மாடுகளை வளர்ப்பதில் பிற நாடுகட்கும் நம் நாட்டுக்கும் ஒரு வேறுபாடு உண்டு: பிற நாடுகளில் விவசாயத்துக்காக மாடுகள் வளர்க்கப்படுவதில்லை. அவை பாலுக்காகவும், இறைச்சிக்காகவுமே வளர்க்கப்படுகின்றன. நமது நாட்டில் பசுக்களும் எருமைகளும் பாலுக்காகவே வளர்க்கப்படுகின்றன. என்றாலும், எருதுகளும் எருமைக்கடாக்களும் விவசாய வேலைகளுக்காகவே வளர்க்கப்படுகின்றன; பிற நாடுகளிற்போல அவை இறைச்சிக்காக வளர்க்கப்படவில்லை.

3. அங்ஙனமாயின், 'நமது நாட்டு விவசாயத்துக்குப் போதிய அளவில் மாடுகளின் தொகை இருக்கிறதா?' என்னும் வினா எழுகின்றது. கீழ் நாடுகளில் மிகப் பெரிதாகிய சீனாவோடு ஒப்பிட்டால், நமது நாட்டிலுள்ள மாடுகளின் தொகை அதிகமென்பது கணக்கிடப்பட்டுள்ளது. அமெரிக்கா, கனடா, டென்மார்க்கு முதலிய மேலை நாடுகளுடன் ஒப்பிட்டால், அத்தொகை சற்றுக் குறைவாகவே இருக்கிறது.

4. நம் நாட்டில் மாடுகளின் தொகை அதிகமேயொழிய, அவை எவ்வகையிலும் மேலை நாட்டு மாடுகளுடன் ஒப்பிடத் தக்கவையல்ல; மேய்ச்சல் வசதி இன்மையால் மெலிந்து, எலும்புந்தோலுமாய்க் காட்சியளிப்பவை. அவற்றுள் பல கிழப்பருவமுற்று, வலிவு குன்றி, வேலைக்குப் பயனற்றவையாயிருப்பவை. அன்றியும், நமது நாட்டுப் பசுக்களும் எருமைகளும் தரும் பாலின் அளவைப் பிறநாட்டு மாடுகள் தரும் பாலின் அளவோடு ஒப்பிட்டுப் பார்த்தால் நம் நாட்டில் மாடுகள் அதிகமிருந்தும் பயனில்லை என்பது புலப்படும். ஓர் ஆண்டில் ஹாலந்து நாட்டுப் பசு ஒன்று ஏறத்தாழ ஒரு லட்சம் பவுண்டு நிறையுள்ள பாலைத் தருகிறதாம். ஸ்விட்ஸர்லாந்து நாட்டுப் பசு எழுபதாயிரம் பவுண்டு பால் தருகிறதாம். ஆனால், நமது நாட்டில் சென்னை மாகாணத்து உயர்தரச் சாதி **ஒங்கோல்** பசு எண்ணாயிரம் பவுண்டு பால் தருகிறதென்றால், நம் நாட்டு மாடுகளின் உண்மை நிலையை அறிய வேறு சான்று தேவையில்லை.



5. இந்நிலைக்குக் காரணம் யாது? நம் நாட்டு மாடுகளுள் பெரும்பாலன ஏழைக் குடியானவர்கட்கு உரியவை. இக்குடியானவர்கட்குப் போதிய உணவுப் பொருள்களைப் பயிரிட்டுக்கொள்ளுவதற்கு வேண்டிய நிலமில்லை. இந்நிலையில் மாட்டுக்கு வேண்டிய புல்லைப் பயிரிடுவதற்கு நிலம் ஏது? அன்றியும், தங்களுக்கு இன்றியமையாத உணவுப் பொருள்களை வாங்கிக்கொள்ளப் பொருளற்ற இவர்கள், மாட்டுக்கு

வேண்டிய பிண்ணாக்கு, பருத்திக்கொட்டை, தவிடு முதலியவற்றை வாங்கப் பொருளுக்கு என்ன செய்வார்கள் ?

6. ஆயினும், சில பணக்காரர்கள் சிறந்த சாதி எருதுகளையும், உயர்ந்த சாதிக் கறவைப் பசுக்களையும், எருமைகளையும் வளர்க்கிறார்கள். இவற்றால் அப்பணக்காரர்களுக்கு நன்மையேயன்றி, நாட்டுக்கு என்ன நன்மை தோன்றக்கூடும்? நாட்டுக்கு நன்மை ஏற்படவேண்டுமானால், ஏழை விவசாயிகள் எல்லாரும் உயர்ந்த சாதி மாடுகளை வளர்க்க வேண்டும். அவற்றிற்குப் போதிய மேய்ச்சல் நிலங்கள் வேண்டும். இந்த வாய்ப்புகளை அளிக்க அரசியலார் முன் வரவேண்டும். ஒவ்வொரு கிராமத்துக்கும் சிறந்த காளை மாடுகள் கிடைக்கும்படி அரசியலார் செய்ய வேண்டும். அன்றியும், பிற நாட்டு மக்கள் மாடுகளை வளர்க்கும் முறைகளைப் பற்றியும், அவற்றால் அம்மக்கள் அடையும் நன்மைகளைப் பற்றியும் அறியாத நமது நாட்டு விவசாயிகட்கு அவற்றை அரசியலார் பிரசாரங்களின் மூலம் அறிவிக்க வேண்டும். மேலும், நமது நாட்டினின்றும் உயர்ந்த சாதி மாடுகள் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதைத் தடுக்க வேண்டும். மாடுகளை மாமிசத்துக்காகவும், தோலுக்காகவும் கொல்லும் வழக்கத்தைச் சட்டத்தின் மூலம் தடை செய்ய வேண்டுவது எல்லாவற்றினும் முதன்மையானது.

7. மாடுகளால் ஏற்படக்கூடிய நன்மைகளை அடைகின்றவர் விவசாயிகள் மட்டுமல்லர். மாடுகளினின்று கிடைக்கும் பால் எல்லா உணவுப்பொருள்களைக் காட்டிலும் சிறந்தது. ஆதலால், அது நாட்டு மக்கள் அனைவர்க்கும் அவசியமானது ; குறிப்பாக இளைஞர்க்கு இன்றியமையாதது. ஆனால், நமது நாட்டில் தனவந்தர் வீட்டுக் குழந்தைகட்கும், இளைஞர்க்கு மட்டுமே இது கிடைக்கிறது. ஏழைகள் வீட்டுக் குழந்தைகட்கு இது கிடைப்பதே இல்லை. இக்குறையை நீக்குவதும் அரசியலார் கடமையேயாம்.

8. 'அரசியலார் என்ன செய்யக்கூடும் ?' என்று பலர் கருதலாம். பொதுவாக கிராமங்களிற்காட்டிலும் பட்ட-

ணங்களில் மக்கள் தொகை வெகு அதிகம். ஆனால், பட்டணங்களிலேதான் கறவை மாடுகள் மிகச் சொற்பம். கிராமங்களில் மாடுகள் அதிகமிருப்பதால், அங்கு வசிப்பவர்க்குப் பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் முதலியவற்றில் ஒன்றோ பலவோ கிடைப்பது எளிது. இது பட்டணங்களில் வசிப்பவர்க்கு வெகு அரிது.

9. பட்டணங்களிற் பால் குறைந்த விலைக்குக் கிடைப்பதில்லை. நம் நாட்டுப் பட்டணங்களில் தண்ணீர் கலந்த பாலுக்கு நாம் கொடுக்கும் விலை **ஆஸ்திரேலியாவிலும் அமெரிக்காவிலும்** கலப்பற்ற பாலுக்குக் கொடுக்கப்படும் விலையைக் காட்டிலும் அதிகம் என்று சொல்லப்படுகிறது. அன்றியும் சுகாதார முறையில் பால் கறக்கப்படுவதில்லை. பால் கறக்கப்படும் பாத்திரங்களும் சுத்தமாக வைக்கப்படுவதில்லை. கொழுமையான உணவுப் பொருள்கள் மாடுகளுக்குக் கிடைப்பதில்லை. ஆதலால், பாலும் சத்துக் குறைந்ததாகவும் உருசியற்றதாகவும் இருக்கிறது. இக்குறைகளை அகற்ற அரசியலார் முற்படவேண்டும். கூட்டுறவு முறையிலோ, பெருத்த மூலதனம் ஏற்படுத்தியோ, உயர்ந்த சாதி மாடுகளை வாங்கி, அவற்றை நல்ல முறையில் போஷித்துச் சுகாதார முறைப்படி பாலைக் கறந்து, கலப்பற்றதாகவும், கூடுமான வரையிற் குறைந்த விலைக்குக் கிடைக்கும்படியும் நகர சபையினரும் அரசியலாரும் செய்ய முற்படவேண்டும்.

10. வடவிந்தியாவிற் பல பட்டணங்களில் மாட்டுப் பண்ணைகள் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றன. அவற்றுள் **நாகபுரி**யில் விவசாய இலாகாவின் ஆதரவிலும் பார்வையிலும் நடைபெறும் பண்ணை மிகச் சிறந்ததென்று கூறப்படுகிறது. அங்குள்ள கூட்டுறவு மாட்டுப்பண்ணையில் கறவை மாடுகள் வைத்திருப்பவர் அங்கத்தினராயுள்ளனர். அவர்கள் தங்கள் மாடுகள் எல்லாவற்றையும் பண்ணைத் தொழுவங்களிற் கட்டுகிறார்கள். கறவை மாடொன்றுக்கு ஆறு ரூபாயும், கறக்காத மாடொன்றுக்கு மூன்று ரூபாயும் மாதந்தோறும் செலுத்துகிறார்கள். அத்தொகையிலிருந்து கொழுமையான உணவுப் பொருள்கள் மொத்தமாக வாங்கப்-

படுகின்றன. மாடுகள் நல்ல முறையில் போஷிக்கப்படுகின்றன. விவசாய இலாகா உத்தியோகஸ்தர் முன்னிலையில் பால் கறக்கப்பட்டு, விற்கப்படுகிறது. இத்தகைய முறையில் நம் நாட்டிலுள்ள பட்டணங்கள் எல்லாவற்றிலும் கூட்டுப் பண்ணைகள் அமைக்கப்பட்டு, ஏழை மக்களின் பொருளாதார நிலையும் முன்னேறினலன்றி, பொது மக்களின் ஆரோக்கியம் விருத்தியடையாதென்பது திண்ணம்.

பயிற்சி :

I. விடை எழுதுக :

அ. மாடுகள் நமக்கு எவ்வாறு பயன்படுகின்றன ?

ஆ மாடுகளை நம் நாட்டவர் வளர்ப்பதேன்? அயல் நாட்டவர் வளர்ப்பதேன் ?

இ. நமது நாட்டு மாடுகளின் நிலை யாது ?

ஈ. நம் நாட்டு மாடுகளின் கீழ்நிலைக்குக் காரணம் யாது ?

உ. நம் நாட்டு மாடுகளின் நிலையை உயர்த்த என்னென்ன செய்தல் வேண்டும் ?

ஊ. பட்டணங்களில் நல்ல பால் கிடைக்க என்ன ஏற்பாட்டைச் செய்யவேண்டும் ?

II. கீழே தரப்பட்டுள்ள தலைப்புக்களைக்கொண்டு ஒரு சிறு கட்டுரை வரைக.

1. நம் நாட்டு மாடுகளின் நிலை; 2. அதற்குக் காரணங்கள் ;

3. அந்நிலையை எப்படி உயர்த்துவது ?

III. வாக்கியங்களில் அமைக்க :

இன்றியமையாதது, புலப்படுகிறது, வழங்குகிறோம், போதிய அளவு, மெலிந்து, சான்று, உரியவை.

IV. சொல்லியுள்ளபடி செய்க :

1. பிற நாடுகளில் மாடுகள் விவசாயத்துக்காக வளர்க்கப்படுவதில்லை. அவை பாலுக்காகவும், இறைச்சிக்காகவுமே வளர்க்கப்படுகின்றன. (ஒரே வாக்கியமாக எழுதுக.)

2. இவற்றால் பணக்காரர்கட்கு நன்மையேயன்றி, நாட்டுக்கு என்ன நன்மை? (கேள்விக்குறி நீக்கப்படவேண்டுமானால் வாக்கியம் எப்படி அமையவேண்டும்?)

3. பால் எல்லா உணவுப் பொருள்களைக்காட்டிலும் சிறந்தது. ('பாலைப் போல' என்னும் தொடரைக்கொண்டு வாக்கியத்தைத் தொடங்குக.)

V. அகராதி பார்த்துப் பொருள் எழுதுக :

பரம்படித்தல், எத்தனை முக்கியம், இறைச்சி, போதிய நிறையுள்ள, சான்று, பிரசாரம், கருதலாம், கறவை, மூலதனம், போஷித்து, தொழுவம், ஆரோக்கியம்.

7. சிவனுடன் வாதிட்ட செந்தமிழ்ப் புலவர்

1. மதுரையம்பதியைத் தலைநகராகக் கொண்டு பாண்டி நாட்டையாண்ட மன்னர்கள் தமிழ்ச் சங்கங்கள் நிறுவியும், தமிழ்ப் புலவர்களை ஆதரித்தும் தமிழன்னைக்குத் தொண்டாற்றினார்கள். அங்ஙனந் தோற்றுவிக்கப்பட்ட சங்கங்களுள் மூன்றாவதாகிய **கடைச்சங்கத்தைத்** தலைமை தாங்கி நடத்திய புகழ், **நக்கீரனார்** என்ற பெரும்புலவருக்குரியது. அவர் இயல், இசை, நாடகமென்னும் முத்தமிழிலும் வல்லுநர்; இலக்கிய இலக்கணங்களை ஐயந்திரிபறக் கற்றவர். அவர் காலத்தில் மதுரையை ஆட்சி புரிந்த பாண்டிய மன்னர் **வங்கிய சூடாமணி** என்பவர்.

2. அம்மன்னர் ஒரு நாள் மாலை நேரத்தில் கோப்பெருந்தேவியாருடன் நிலாமுற்றத்திலமர்ந்து உரையாடிக்கொண்டிருந்தார். அப்பொழுது பாண்டி மாதேவியார், தம் கூந்தலை ஆற்றிக்கொண்டிருந்தமையால், அதினின்றெழுந்த நறுமணம், அரசர் மனதில் ஐயமொன்றை எழுப்பியது. அம்மணம் அவ்வம்மையார் கூந்தலின் இயற்கை மணமா, அன்றிச் செயற்கை மணமா என்பதே அவ்வையமாகும்.

3. மன்னர் பெருமான் உடனே நூறு பொற்காசுகளை ஒரு கிழியிலிட்டு முடித்து, அதைத் தமிழ்ச்சங்க மண்டபத்தில் தூக்கினார்; தம் ஐயத்தை அகற்றத் தக்க அரிய பாட்டினை யாத்துக் கொண்டுவருபவர் அக்கிழியைப் பெறலாம் என்று பட்டணமுழுவதும் பறை சாற்றி அறிவிக்கச் செய்தார். அதனைச் செவியுற்ற புலவர் பலர், தத்தம் மனத்துக்கிசைந்தவாறு பாடல்களைச் செய்து கொண்டுவந்து பாண்டிய மன்னர்க்குப் பாடிக் காட்டினர். அவையனைத்தும் அரசர் ஐயத்தை அகற்றாமையின், புலவர் வறிதகன்றனர்.

4. அக்காலத்தில் மதுரை சோமசுந்தரப் பெருமான் ஆலயத்தில் அர்ச்சகராயிருந்த **தருமி** என்ற ஏழை அந்தணர்,

அப்பொற்கிழியைப் பெற்றுத் திருமணம் செய்துகொள்ள ஆசையுற்றூர்; இறைவர் திருமுன்னர் நின்று தம் விருப்பத்தை விண்ணப்பித்துக்கொண்டார். அன்பர் எண்ணியவற்றை அருள் புரியும் அப்பெருமானுர், அந்தணர் வேண்டுகோட்கு மனம் இரங்கி, '**கொங்குதேர் வாழ்க்கை**' என்னும் தொடக்கத்தினையுடைய ஒரு பாட்டு வரையப்பெற்ற ஓர் ஓலையைத் தமது பீடத்தின் முன் இட்டருளினுர்.

5. அவ்வோலையைக் கண்ட தருமி பெருமகிழ்ச்சியோடு அதை எடுத்துக்கொண்டு விரைந்து சென்று வேந்தர் முன் அப்பாட்டைப் பாடினுர். அது கேட்ட அரசர், உவகையுற்று 'அந்தணரே, அருந்தமிழ் சங்கத்தை அடைந்து, அரிய இச்செய்யுளை அங்குள்ள புலவர்க்குக் காட்டிப் பொற்கிழியைப் பெற்றுச் செல்லும்,' என்று கூறினுர்.

6. அது கேட்ட மறையவர், மட்டிலா மகிழ்ச்சியுடன் மன்னரவையை விட்டகன்று, சங்க மண்டபத்தை அடைந்தார்; அரசர் ஆணைப்படி அங்கு வீற்றிருந்த புலவர் முன் தாம் கொண்டு சென்ற செய்யுளைப் பாடினுர்; பின்னர் அங்கிருந்த பொற்கிழியை அறுத்தற்பொருட்டு அதை அணுகினுர். அவ்வளவில் ஆண்டு அமர்ந்திருந்த அருந்தமிழ்ப் புலவர் நக்கீரனுர், "அந்தணரே, பொற்கிழியைத் தொடாதீர். நும் பாட்டுக் குற்றமுடையது," என்றுர். அது கேட்ட தருமியின் மனம் புழுங்கியது. அவர் அங்கிருந்தகன்று, கோயிலிற்புகுந்தார்; இறைவர் திருமுன்னர் நின்று நடந்தவற்றைக் கூறி முறையிட்டார்.

7. உடனே ஆலவாய் அண்ணலார், மானிடவடிவெய்தி, ஒரு புலவர் போலச் சங்கத்தை அடைந்து, ஆங்கு வீற்றிருந்த புலவர்களைப் பார்த்து, "ஐயன்மீர், குற்றமற்ற இக்கவிக்குக் குற்றம் கூறினவர் உம்முள் யாவர்?" என்றுர். அப்போது நக்கீரர், "புலவரே, உம் கவிக்குக் குற்றம் கூறியவன் நானே," என்று தருக்குடன் புகன்றுர். "நல்லது! நீர் இக்கவியிற்கண்ட குற்றம் யாதோ?" என்றனர் சிவபெருமான்.

8. "நல்லார் குழற்கு நாற்றம் செயற்கையாலன்றி இயற்கையாலுண்டோ? ஆகவே, இல்லது கூறலால், இது குற்றம்," என்றார் புலவர் தலைவர். அது கேட்ட கடவுட்புலவர், "மண்ணுலகத்துப் பெண்களின் கூந்தலுக்கு இயற்கை மணம் இன்றெனினும், விண்ணுலகில் வாழும் அரம்பையர் கூந்தலுக்கேனும் இயற்கை மணம் உண்டன்றோ?" என்றார். "அதுவும் அற்றே," என்றார் நக்கீரனார். உடனே சோமசுந்தரப்பெருமான், "உம்மால் வணங்கப்பெறும் உமாதேவியின் கூந்தல் எத்தன்மையது?" என்றார். வினை வயத்தால், நக்கீரர், "அதுவும் அற்றே," என்றார்.

9. மதியிழந்து மனந்தடுமாறும் மக்களைத் தண்டித்து நல்வழிப்படுத்த வேண்டுவது பெற்றோர் கடமையன்றோ!



அதை மனத்துட்கொண்ட இறைவர், நக்கீரரை 'நான்' என்னும் பிணி நன்கு பற்றிக்கொண்டிருந்தமையால், அதனை அகற்ற எண்ணினார்; நக்கீரருக்குத் தாம் இன்னார் என்பதைத் தெரிவித்தற்பொருட்டு நெற்றிக் கண்ணையும் சடைமுடியையும் காட்டினார். ஆயினும், மாற்றுதற்கரிய மருட்சி-

யுற்றிருந்த நக்கீரர், இறைவரை நோக்கி, "நீர் நெற்றியில் மட்டுமன்றி, உடலெல்லாம் கண்கள் தோன்றக்காட்டினாலும், யான் தோற்பேன் அல்லேன்! நீர் சாற்றிய செய்யுள் குற்றமுடையதே! நும் சடை கொண்டு என்னை வெருட்டல் வேண்டா!" என்று தருக்குடன் கூறினார்.

10. அது கேட்ட இறைவர், "கற்றும் அறிவில்லாக் கயவனே, மூவுலகமும் போற்றும் உமாதேவியின் கூந்தலைப் பழித்த நீ குட்டநோய் கொண்டு அலைவாயாக!" என்று சினந்து கூறினார். அப்போதுதான் நக்கீரரைப் பற்றியிருந்த 'நான்' என்னும் பிணி விலகிற்று. உடனே அவர் இறைவர் தாள்களில் விழுந்து, "எந்தையீர், கருணையங்கடலே, அறிவின்றி இழைத்த தவற்றை மறந்து, அடியேனை மன்னித்து, தேவரீரது சாபப்பிணி கெடுமாறு அருள்புரிய வேண்டும்," என்று வணங்கினார். பத்தி வலையிற்படுகின்ற பரம்பொருளான சோமசுந்தரக்கடவுள், நக்கீரரின் வேண்டுகோளுக்கு மனமிரங்கி, "நக்கீர, நீ சென்று கயிலையைக் காணின், இக்கொடுநோய் நீங்கும்," என்றருளி மறைந்தார்.

பயிற்சி:

I. விடை எழுதுக:

அ. நக்கீரர் யார்? அவர் காலத்தில் மதுரையை ஆண்ட மன்னர் யார்?

ஆ. பாண்டிய மன்னர் மனத்தில் எழுந்த ஐயம் யாது?

இ. அதனைப் போக்கிக்கொள்ள அவர் செய்தது யாது?

ஈ. தருமி என்பவர் யார்? அவர் பொற்கிழியைப் பெற என்ன செய்தார்?

உ. தருமி பொற்கிழியைப் பெறாமல் திரும்பியதேன்?

ஊ. தருமி முறையிட்டதைக் கேட்ட ஆலவாய் அண்ணல் என்ன செய்தார்?

எ. நக்கீரர் இறைவர் பாட்டிற்கண்ட குற்றம் யாது ?

ஏ. நக்கீரரை 'நான்' என்னும் பிணி பற்றியிருந்ததென்பது எவ்வாறு அறியப்படுகிறது ?

ஐ. அப்பிணி அவரை விட்டு எப்போது அகன்றது ?

II. வாக்கியங்களில் அமைக்க :

நிறுவி, தலைமை தாங்கி, உரையாடிக்கொண்டு, உவகை, மனமிரங்கி, அணுகினர்.

III. எதிர்ப்பதங்கள் எழுதுக :

நறுமணம், இயற்கை, அகன்று, மண்ணுலகம்.

IV. அகராதியைப் பார்த்துப் பொருள் எழுதுக :

நிறுவி, தொண்டாற்றி, ஐயந்திரிபற, வல்லுநர், நிலா-முற்றம், கிழி, யாத்து, வறிது, உவகையுற்று, மட்டிலா, அண்ணலார், நல்லார், விண்ணுலகு, அரம்பையர், அற்றே, மருட்சி, தருக்கு, கயவன், பரம்பொருள்.

8. கலைக்கோவில்

1. பண்டைக் காலத்தில் நமது நாடு எல்லாக் கலைகளிலும் சிறப்புற்று விளங்கியது. அவற்றுள் **ஓவியக்கலை, சிற்பக்கலை, நாட்டியக்கலை,** ஆகிய மூன்றும், நவநாகரிகத்தில் நனியோங்கியுள்ள பிற நாட்டவராலும் பெரிதும் புகழக்கூடிய நிலையில் இக்காலத்திலும் உள்ளன. அயல் நாட்டினின்று நம் நாட்டுக்கு வரும் கலையுணர்ச்சியுள்ள எந்த யாத்திரிகரும் **தாஜ்மஹால், ஹம்பி, அஜந்தா, எல்லோரா, மாமல்லபுரம்** முதலிய கலைக்கோவில்களைக் கண்ணாரக் கண்டு, மனமார மகிழ்ந்து, வாயார வாழ்த்தாமற் போவதில்லை. இத்தகைய கலைக்கோயில்களுள் ஒன்றான **அஜந்தா**வைப் பற்றி இப்பாடத்திற் படிப்போம் :

2. அஜந்தா என்னுமிடம் ஹைதராபாது இராச்சியத்தில் இருக்கிறது. அதற்குச் செல்லவேண்டுமானால், பம்பாயினின்று டில்லிக்குச் செல்லும் புகை வண்டி மார்க்கத்தில் உள்ள **ஜல்கான்** என்னும் புகைவண்டி நிலையத்தினின்று 37 மைல் தூரம் மோட்டார் பஸ்ஸில் போகவேண்டும்.

3. அஜந்தாவில் பிறைச்சந்திரனை யொத்த வடிவமுள்ள மலையிற்குடையப்பட்ட அற்புதமான குகைகள் இருக்கின்றன. இம்மலையோரமாக **வகோரா** என்னும் ஆறு ஓடுகிறது. மலையின்மீது ஏறிக் குகைகளை அடையப் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. அஜந்தா குகைகளிற்காணப்படும் ஓவியங்களும் சிற்பங்களும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை. ஆனால், இத்தகைய கலைக்கோவிலொன்று இந்தியாவிலிருக்கிறதென்பது, உலகத்திற்கே 1819-ஆம் ஆண்டிலேதான் தெரிய வந்தது. இதைப்பற்றிக் கி. பி.7-ஆம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த சீன யாத்திரிகர் குறிப்பிட்டுள்ளார். ஆயினும், இதைப்பற்றி யாரும் சிந்தித்ததாகவே தெரியவில்லை.

4. இக்குகைகளைக் கண்டு பிடித்த பெருமை நமது சென்னை மாகாணத்துக்கே உரியது. சென்னையைச் சார்ந்த

ஓர் ஆங்கிலப் படையினர், காண்டேஷ் மலைப்பிரதேசத்தில் இராணுவப்பயிற்சி செய்துகொண்டிருந்தபோது மலைகளுக்கிடையில் புதர்களால் மறைவுண்டு கிடந்த இக்குகைகளைத் தற்செயலாகக் கண்டனர். இவர்கள் அரசியலாருக்கு இச்செய்தியை அறிவித்த பிறகு, அவர்கள் இதில் நோக்கம் கொண்டு ஆய்ந்து, 1829-ஆம் ஆண்டில் இங்குள்ள ஓவியங்களைப்பற்றிய செய்திகளை வெளியிட்டார்கள். சில ஆண்டுகட்குப் பின்னர், **ஸர் ஜேம்ஸ் பெர்கூஸன்** என்பவர் கலை நுட்பங்களுக்கேற்ப இங்குள்ள சிற்பங்களையும், ஓவியங்களையும் ஆராய்ந்து, ஓர் அரிய நூலை வெளியிட்டார். அதன் பின்னர், இங்குள்ள ஓவியங்களின் நகல்கள் எடுக்கப்பட்டு இலண்டன் மாநகரத்தில் ஒரு காட்சிச்சாலையில் வைக்கப்பட்டன.

5. இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகட்கு முன் இம்மலையில் வாழ்ந்து வந்த பௌத்த துறவிகள் சில கோவில்களையும், விடுதிகளையும் இம்மலையிற்குடைந்துள்ளார்கள். கோவிலுக்குச் **சைத்தியம்** என்றும், விடுதிக்கு **விஹாரம்** என்றும் பெயர்கள் வழங்குகின்றன. இவற்றைப் பலர் பல ஆண்டுகள் முயன்றுஉருவாக்கியிருக்கவேண்டும். அஜந்தாவில் முப்பத்திரண்டு குகைகள் உள்ளன. அவற்றுள் ஐந்துதாம் கோவில்கள் ; அமைப்பில் விஹாரங்களுக்கும் சைத்தியங்களுக்கும் வேறுபாடுகள் உண்டு. ஒவ்வொரு சைத்தியத்தின் முன்னும் ஒரு மண்டபம் இருக்கிறது. அம்மண்டபம் சிற்ப வேலைப்பாடு மிக்க நான்கு தூண்களின்மீது மாடிபோலக் கல்லைக் குடைந்து அமைக்கப்பட்டுள்ளது. அந்த மாடிக்கு மேல் பிறைச்சந்திரன் போன்றமைந்த சாளரம் இருக்கிறது. சைத்தியத்தின் அகத்தும் புறத்தும் பௌத்த சம்பந்தமான தேவதைகளின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

6. சைத்தியத்தின் உட்புகுந்து பார்த்தால் நீளமான கூடமொன்று காட்சியளிக்கிறது. அதன் கோடியின் இடையில் புத்தரின் பல்லோ, சாம்பலோ அடங்கியுள்ள மேடை, பத்தர்கள் சுற்றி வருவதற்குரிய வசதியோடு உயர்ந்து காணப்படுகிறது. இக்கூடத்திற்கு இருமருங்கிலுமுள்ள சுவர்களுக்கு இடையில் வனப்பு மிக்க சிற்பங்கள் அமைக்-

கப்பெற்ற கம்பங்கள் நிற்கின்றன. இத்தகைய சைத்தியங்களுள் மிகப் பெரியது தொண்ணூற்றைந்து அடி நீளமிருக்கிறது.

7. விஹாரம் என்னும் விடுதி ஏறத்தாழச் சதுர வடிவமானது. அதன் மூன்று பக்கங்களிலும் அறைகள் உள்ளன. அவற்றுள் ஒவ்வொன்றிலும் தலை வைத்துப் படுக்கக் கல்லால் செதுக்கப்பட்ட தலையணை காட்சியளிக்கிறது. அந்த அறைகளினுள்ளே காற்றும் வெளிச்சமும் புகுதற்காகச் சாளரம் போன்ற துவாரங்கள் குடையப்பட்டுள்ளன.

8. இனி ஓவியங்களைப்பற்றிக் கவனிப்போம்: அவை எல்லாம் விஹாரங்களிலேயே காணப்படுகின்றன. அவை பொருத்தமான வண்ணங்கள் தீட்டப்பட்டுப் பேரெழிலோடு விளங்குகின்றன. ஆனால், அவை இருட்டிலும், முகட்டிலும் அமைந்துள்ளன. இருளால் சூழப்பெற்றுள்ள அவற்றைக் கண்டு களிக்க, அரசியலார் அதிக ஒளியுள்ள 'ஆர்க் லைட்டு' என்னும் ஒரு வகை விளக்கை ஒவ்வொரு குகையிலும் அமைத்துள்ளனர். அதன் துணைக் கொண்டு பார்த்தால், மூலை முடுக்கில் உள்ள ஓவியத்தையும் நன்கு காண இயலும். ஆனால், அந்த விளக்கை உபயோகிக்க விரும்புபவர் ஐந்து ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும்.

9. இரண்டாயிரமாண்டுகட்கு முன் நம் நாட்டு மக்கள் எங்ஙனம் வாழ்ந்தார்கள் என்பதை அவ்வோவியங்கள் நன்கு விளக்குகின்றன. அவற்றுள் பல புத்தரின் பூர்வப் பிறவியைப் பற்றிய கதைகளை விளக்க அமைந்தவை; மற்றவை, அக்கால வாழ்க்கையைச் சித்தரிப்பவை. அரசர்கள், அரசிகள், சீமான்கள், சீமாட்டிகள், தாதிகள், நடிகர்கள், பாணர்கள், பணியாட்கள், விலங்குகள், பறவைகள், தாவரங்கள் முதலிய பல வகை வாழ்க்கை வருணனைகளை அங்குக் காணலாம். அவையனைத்தும் புத்தத் துறவிகளால் தீட்டப் பெற்றவை. அவர்கள் மாந்தரின் அங்கலட்சணங்களை நன்கு அறிந்தவர்கள் என்பதை அச்சித்திரங்களே விளக்குகின்றன.

10. இரண்டாயிரமாண்டுகட்கு முன் தீட்டப்பெற்ற வண்ணங்கள் இன்றும் புத்தம் புதியவை போலக் காட்சி அளிக்கின்றன. அந்த வண்ணங்களை அவர்கள் எப்பொருள்களினின்றும் செய்தார்கள், எம்முறையில் தயாரித்தார்கள் என்பன இக்காலத்து ஓவியர்கட்கும், இரசாயன நிபுணர்கட்கும், அறிய முடியாத இரகசியங்களாய் இருக்கின்றன.

11. அங்கு வரையப் பெற்றுள்ள பெண்களின் உருவங்கள் வியப்புக்குரியவைகளாயுள்ளன. எத்தனை விதமான தலை-

யலங்காரம்! எத்தனை வகையான மலர் சூட்டல்! எத்தனை வகையான தலை ஆபரணங்கள்! எத்தனை வகையான காதணிகள்! இவற்றையெல்லாம் காண்பார்க்கு இக்காலப் பெண்களின் அலங்காரங்களெல்லாம், இரண்டாயிரமாண்டுகட்கு முன்னரே நம் நாட்டில் வாழ்ந்து வந்த பெண்மணிகளின் சோடனைகளோடு ஒப்புக்கூறவும், உறை போடவும் காணு என்பது புலனுகும்.

12. ஓவியக்கலையின் உன்னத நிலையை அஜந்தாவிலே-தான் காண முடியும் என்பது ஓவிய நிபுணர்களின் ஒரே முக-மான முடிவு. ஆனால், அவற்றை தீட்டியவர் யாவர் என்பதை இன்றளவும் எவரும் அறிய முடியவில்லை. காரணம், அவற்-றைத் தீட்டியவர்கள் தங்கள் பெயர்களை அங்குப் பொறித்து வையாமையே. புகழைப் புறக்கணித்த அவர்களுடைய உத்தமத் தியாகத்தை என்னென்று புகழ்வது!

பயிற்சி :

I. விடை எழுதுக :

அ. 'அஜந்தா' என்பது எங்குளது? அதற்குப் போகும் வழி யாது?

ஆ. அஜந்தாவில் காணப்படுவன யாவை?

இ. 'சைத்தியம்' என்பது என்ன?

ஈ. 'விஹாரம்' என்பது என்ன?

உ. இங்குள்ள ஓவியங்களால் நாம் அறிவது யாது?

II. சொல்லியுள்ளபடி செய்க :

1. விஹாரம், சைத்தியம்—(இவற்றுள் ஒவ்வொன்றைப் பற்றியும் பத்து வரிகளுக்கு மிகாமல் ஒரு குறிப்பு எழுதுக.)
2. இக்குகைகளைக் கண்டுபிடித்த பெருமை சென்னை மாகாணத்துக்கே உரியது. ('சென்னை மாகாணம்' என்று வாக்கியத்தைத் தொடங்குக.)
3. இம்மலையில் வாழ்ந்த பௌத்த துறவிகள் சில கோவில்-களையும், விடுதிகளையும் இம்மலையில் குடைந்துள்ளனர். (வாக்கியத்தைச் 'சில கோவில்களும் விடுதிகளும்' என்பதைக்கொண்டு தொடங்கி எழுதுக.)

III. வாக்கியங்களில் அமைக்க :

சிறப்புற்று, கண்ணார, மனமார, வாயார, பயிற்சி, வனப்பு மிக்க, ஏறத்தாழ, எழில்.

9. புலவர் பெருமிதம்

1. நமது தாய்மொழியாம் தமிழ் மொழியில் வழங்கும் நூல்களுள் மிக்க தொன்மை வாய்ந்தவை சங்க இலக்கியங்களாம். அவை **பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க் கணக்கு** என்பவை. அவற்றை இயற்றிய புலவர் அனைவரும் ஒரே காலத்தவரல்லர்; ஒரே நாட்டினரல்லர்; ஒரே குலத்தவருமல்லர்; ஒரே இனத்தவருமல்லர்; அவர்களுள் ஆடவர் பலர்; பெண்டிர் சிலர். அவரனைவரும் அக்காலத்தில் பேரரசர்களையும் சிற்றரசர்களையும் நாடிச்சென்று, தத்தம் புலமை தோன்றத் தமிழ்ப் பாக்கள் இயற்றி, அவர்களை மகிழ்விப்பர். தமிழ் மொழியின் ஆக்கம் கருதிய அப்புரவலர்கள் தங்களை நாடி வந்த புலவர்கள் மகிழும்படி அவர்களுக்கு பரிசில்களை வழங்கி அனுப்புவார்கள்.

2. இங்ஙனம் வாழ்ந்த புலவர் பெருமக்களுள் பெரும்பான்மையோர் வறுமையுற்று வாடினர் என்று கூறவேண்டுவதின்று. எனினும், அப்புலவர்களின் பண்புகள் நன்கறிந்து போற்றத்தக்கவை. அப்புலவர்கள் வறுமைக்கடலில் ஆழ்ந்து வாட்டமுற்றார்களெனினும், பரிசுக்காகத் தங்கள் புலமையை விற்றார்களில்லை. அவர்கள் தன்மதிப்பு மிக்கவர்கள். **'மதியாதார் வாசல் மிதித்தொருகாற்சென்று மிதியாமை கோடி பெறும்'** என்னும் நல்லுரைக்கிணங்கத் தம்மை மதியாதவர் மன்னரேயாயினும், அவரைப் பொருட்படுத்தமாட்டார்கள்; அவர்கள் அரண்மனைக்குள் அடியெடுத்தும் வைக்கமாட்டார்கள்; அது மட்டுமன்றி, ஒருவன் பேரரசனாயினும், அவன் நீதி நெறியினின்று விலகுவானாயின், அவனை அணுகி அஞ்சாது அறிவுரை கூறும் ஆற்றல் உடையவர்கள். இத்தகைய புலவர் நலன்களுக்கு எடுத்துக்காட்டாக இரண்டு நிகழ்ச்சிகளை நினைவுகூர்வது நலம்:

3. **பெருஞ்சித்திரனார்** என்பவர் ஏறத்தாழ இரண்டாயிரமாண்டுகட்கு முன்பு வாழ்ந்த ஒரு பெரும்புலவர். அவர் வறுமையின் கொடுமைக்கு இலக்காயினர். ஆதலால், தமி-

றின் இனிமையையும் புலவரின் பெருமையையும் நன்குணர்ந்த புரவலர்பாற் சென்று பரிசில் பெறக் கருதினர்.

4. அக்காலத்தில் **அதியமான்** என்ற ஒரு குறுநில மன்னன் இருந்தான். அவன் வரையாது கொடுக்கும் வள்ளல் என்பதைப் புலவர் கேள்வியுற்றார். அவன் **தகடூரில்** ஆட்சி புரிந்து வந்தான். சேலம் ஜில்லாவிலுள்ள தருமபுரியை அடுத்த **அதமன்கோட்டை** என இக்காலத்தில் வழங்கும் பகுதியே அக்காலத்தில் தகடூர் என வழங்கி வந்தது. பெருஞ்சித்திரனர் காடுகளையும் நாடுகளையுங் கடந்து, தகடூரை அடைந்தார்; தம் வரவை அதியமானுக்கு அறிவித்தார்.

5. அதியமான் தமிழ் நாட்டு வள்ளல்களுள் ஒருவன். புலவர் பெருமக்களை நன்கு வரவேற்று ஆதரித்துப் பரிசில் வழங்கும் பண்புடையவன். ஆனல், பெருஞ்சித்திரனர் அவனைக் காணச் சென்ற போது, அவன் ஏதோ அரசியற்காரியத்தில் அதிகம் ஈடுபட்டிருந்தான். ஆதலால், புலவரை நேரிற்காண அவனல் இயலவில்லை; ஆயினும் தன்னை நாடி வந்த புலவரை நெடுநாள் காத்திருக்கும்படி செய்தல் தகாதென்றும், அவரை வாளா அனுப்புதல் தன் கொடைத்திறத்துக்கு இழிவென்றுங் கருதினன். ஆதலால், பொன்னும் மணியும் புலவர் களிக்கும்படி ஏவலாளர் மூலம் அனுப்பி வைத்தான்.

6. அவற்றைக் கண்டார் புலவர். வறுமையால் வாடி நின்ற அவர் உள்ளத்தில் உவகை எழவில்லை. அதற்கு மாருக, வெறுப்புத் தோன்றியது. அவர் ஏவலாளரை நோக்கி, "என் புலமையின் அளவை உங்கள் அரசன் எவ்வாறு கண்டறிந்தான்? என்னைக் காணமலே எனக்கு அனுப்பப்பட்டுள்ள பொருளைப் பெற்றுக்கொள்ள நான் யாசகனே? என் கல்வியின் ஆற்றலையும், புலமையின் திறத்தையும் நேரிற் கண்டறிந்து எனக்கு அளிக்கப்படும் பரிசில் தினையளவாயினும், அதனைப் பனையளவாகக் கொள்ளுவேன்!" என்று கூறி, அவ்விடம் விட்டு அகன்றார். இதனல், பெருஞ்சித்திரனருடைய உள்ளத்தின் உயர்வு தோன்றுகின்றதன்றே!

7. **வெள்ளைக்குடி** என்பது சோழவள நாட்டைச் சேர்ந்த ஓர் ஊர். அங்கு **நாகனர்** என்ற ஒரு தமிழ்ப்புலவர் வாழ்ந்தார். அவர் வேளாண் மரபினர். அவர் கல்வி கேள்விகளில் வல்லுநராயினும், செல்வர்பால் சென்று பாட்டிசைத்துப் பரிசில் பெற விரும்பினாரில்லை; அவர் உத்தமமான உழு-தொழிலை மேற்கொண்டு வாழ்ந்து வந்தார்.

8. அவர் காலத்தில் சோழவள நாட்டைக் **கிள்ளி வளவன்** என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவன் கல்வி நிறைந்தவன்; கவி பாடும் திறம் படைத்தவன். அவன் தன் தோள் வலி-யால் பல சிற்றரசர்களை வென்று, பெரும் புகழுடன் விளங்கி வந்தான். அவனுடைய வெற்றிகளால் அவனுடைய நிதிச்-சாலை நிரம்பியிருந்தது. எனவே, அவன் **கோவூர் கிழார்** போன்ற பெரும்புலவர்களைத் தன் அவையில் இருக்கச் செய்து, அவர்-களோடு அளவளாவிக் காலங்கழிப்பதையே வழக்கமாகக் கொண்டான்.

9. இந்நிலையில் அவன் நாட்டுக்கு உயிர்நாடிகள் போன்ற வாணிகம், உழவு முதலியன வளம் பெருவதற்குரிய எத்தகைய முயற்சியிலும் ஈடுபட்டானில்லை. ஆதலால், அத்தொழில்கள் நாளடைவில் குன்றத் தொடங்கின. அது கண்ட புலவர் மனம் புழுங்கினர்; அரசனைக் கண்டு, தக்க அறிவுரைகளைப் புகட்ட விரும்பினர்; அதற்குத் தக்க வாய்ப்பைத் தாமே உண்டாக்கிக் கொள்ளவும் விரும்பினர்; ஆகவே, தம்முடைய நிலங்கட்குச் செலுத்தவேண்டிய வரிப்பணத்தைச் செலுத்தாமல் நிறுத்திவிட்டார். ஆதலால், அதிகாரிகள் அவரை அரசன்முன் கொண்டுபோய் நிறுத்தி-னர்கள். அவரைக் கண்டபோதே அரசன் அவர் சிறந்த அறிஞர் என்பதையும், அவர் வரிப்பணத்தைச் செலுத்தத் தவறியதற்கு தக்க காரணம் இருக்க வேண்டுமென்பதையும் யூகித்தான்.

10. அரசன் புலவரை நோக்கி, "நீர் வரிப்பணம் செலுத்தாமைக்கு ஏதேனும் காரணம் உண்டோ?" என்று வினவினன். உடனே புலவர், "மூவேந்தருள்ளும் முதன்மை

பெற்று விளங்கும் சோழர் பெருமானே, உமது நாடு காவிரி பாயப்பெற்றது; ஆதலால், வளம் நிறைந்தது; என்றும் விளைவு குன்றாதது; ஆயினும், குடிமக்கள் தங்கள் குறைகளை எடுத்துக்கூற வாய்ப்பளித்து, அவற்றை நீக்க வேண்டுவது உமது கடமையன்றோ? நீர் உம்முடைய பகையரசர்களை வெற்றிகொள்வது எதன் வலிமையால்? உழுது பயிரிடப்படும் நிலங்களின் விளைச்சலாலன்றோ? ஆகவே, உழவருடைய குறைகளைப் போக்கி அவர்களைப் பாதுகாப்பது உமது முதற்கடமையாகும்,'' என்று அச்சம் சிறிதுமின்றி அரசனுக்கு அறிவு புகட்டினார். அரசனும், அவர் உள்ளத்தில் தோன்றிய உண்மையை உறுதியுடன் கூறிய அவருடைய குணநலனுக்காக அவரைப் புகழ்ந்து உபசரித்து அனுப்பினான்.

பயிற்சி:

I. விடை எழுதுக:

அ. 'சங்க இலக்கியங்கள்' என்பவை யாவை?

ஆ. 'பெருஞ்சித்திரனார்' என்பவர் யார்?

இ. 'அதியமான்' என்பவன் யார்? அவன் குணநலன்கள் யாவை?

ஈ. பெருஞ்சித்திரனாரின் உள்ளத்தின் உயர்வு எதனால் அறியப்படுகிறது?

உ. 'நாகனார்' என்பவர் யார்? அவர் எங்கு வாழ்ந்தார்? அவர் அரசனைக் காண என்ன உபாயம் செய்தார்?

ஊ. அவர் கிள்ளிவளவனுக்கு எடுத்துக் கூறிய நல்லுரைகள் யாவை?

II. எதிர்ச்சொற்கள் எழுதுக:

ஆக்கம், ஆழ்ந்த, அணுகி, இழிவு, வெறுப்பு, உத்தமன், நிறைந்தது, வெற்றி.

III. வாக்கியங்களில் அமைக்க :

தொன்மை, ஆக்கம், அறிவுரை, ஆற்றல், கருதினர், வள்ளல், பண்பு, ஏவலாளர்.

IV. கீழே தரப்பட்டுள்ள தலைப்புக்களின் துணையால் சிறியதோரு கட்டுரை வரைக :

1. பெருஞ்சித்திரனாரின் வறுமை
2. அதியமான் கொடைத்திறம்
3. பெருஞ்சித்திரனாரின் பெருமிதம்

V. அகராதியைப் பார்த்துப் போருள் எழுதுக :

பெருமிதம், ஆக்கம், பண்பு, ஆற்றல், எடுத்துக்காட்டு, உவகை, யாசகன், நிதிச்சாலை, அளவளாவி, வாய்ப்பு.

10. எங்கள் இன்பச் செலவு - I

(ஒரு கடிதம்)

சென்னை,
5—7—49

அன்பு நிறைந்த சரவணபவா,

இவண் அனைவரும் நலம். அவண் உள்ளார் நலம் அறிய விரும்புகிறேன். உன் விருப்பத்திற்கிணங்க, கடந்த கோடை விடுமுறைத் தொடக்கத்தில் எங்கள் பள்ளி மாணவர்கள் செய்த உல்லாசப் பிரயாணத்தைக் கீழே விவரிக்கின்றேன்.

ஏப்பிரல் மாதத் தொடக்கத்தில் எங்கள் தலைமை ஆசிரியரிடமிருந்து எங்களுக்கு ஓர் அறிக்கை அனுப்பப்பட்டது; அதில் ஏப்பிரல் மாதம் இருபதாந்தேதி, சென்னைக்குத் தெற்கில் உள்ள **திருப்போரூர், மாமல்லபுரம், திருக்கழுக்குன்றம்** ஆகிய மூன்றிடங்களுக்கும் இன்பச் செலவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதென்பதும், அதிற்கலந்துகொள்ள விரும்புகிறவர் பதினேழாந்தேதிக்கு முன்னரே ஐந்து ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டுமென்பதும் குறிக்கப்பட்டிருந்தன. அச்செய்தியைக் கேட்டவுடனே எங்களுக்குண்டான இன்பத்திற்கு எல்லையில்லை.

ஏப்பிரல் மாதம் 20-ஆம் தேதி மாலை நான்கு மணிக்கு நாங்கள் எங்கள் பள்ளியிற்கூடினோம். மாணவர் நூற்றுப்பதின்மரும் பத்துக் குழுக்களாகப் பிரிக்கப்பட்டோம். ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு தலைவனும், துணைத்தலைவனும் நியமிக்கப்பட்டனர். அவர்களுடைய ஆணைக்குட்பட்டு மற்றவர் நடக்கவேண்டும் என்பது தலைமையாசிரியரின் கண்டிப்பான உத்தரவு. எங்களோடு தலைமையாசிரியருள்ளிட்ட பன்னிரண்டு ஆசிரியர்களும் புறப்பட்டார்கள். அவர்களுள் இருவர் இரண்டு குதிரை வண்டிகளில் அன்றைய இரவுக்கு வேண்டும் உணவு வகைகளையும், தின்பண்டங்களையும், மற்றை நாட்களுக்கு வேண்டும் உணவுப் பொருள்களையும்

ஏற்றிக்கொண்டு முன்னமே புறப்பட்டுச் சென்றுவிட்டார்கள். நாங்கள், சென்னை உயர்நீதி மன்றத்தின் முன் மின்சார வண்டியிலேறி மயிலை சென்றிறங்கினோம்.

நாங்கள் அங்கிருந்து புறப்பட்டு அரை பர்லாங்குத் தூரத்தில் உள்ள **பக்கிங்காம் கால்வாய்ப்** படகுத்துறையை அடைந்தோம். பக்கிங்காம் கால்வாய் சென்னைக்குத் தெற்கில் கிழக்குக் கடற்கரையோரமாக அறுபது மைல் தூரமும், வடக்கே இருநூறு மைல் தூரமும் செல்கின்றது. நாங்கள் படகுத்துறையை அடைந்தவுடனே அங்கு எங்களுக்காகக் காத்துக்கொண்டிருந்த மூன்று சிறு படகுகளில் ஏறி அமர்ந்தோம். படகுகள் புறப்பட்டன. நாங்கள் ஒருவரோடொருவர் எங்கள் மனவெழுச்சி காரணமாகப் பேசியது, சந்தை இரைச்சல் போல ஒலித்தது. ஆனால், சிறிது நேரத்தில் இரைச்சல் குறையத் தொடங்கி, இன்னிசை எழத் தொடங்கியது.

எங்களுள் சிலர் நன்கு பாடத் தெரிந்தவர்; ஹார்மோனியமும் மிருதங்கமும் வாசிக்கத் தெரிந்தவருமிருந்தனர். அவ்விசைக் கருவிகளையுங் கூடக் கொண்டு வந்திருந்தோம். அவை மட்டுமன்றி, கிராமபோனையும் இசைத் தட்டுக்களையுங்கூட நாங்கள் மறக்கவில்லை. படகுகள் ஆமை வேகத்தில் நகர்ந்தன. மாலைச் சூரியன் மறைவதற்குள் அவை சென்னை நகரத்தின் எல்லையைக் கடந்துவிட்டன. கதிரொளி மறைந்து நிலவொளி தோன்றத் தொடங்கியது. எங்களுட் சிலர் தலைவர்களின் ஆணை பெற்றுப் படகின் மேல் தட்டிற்சென்று அமர்ந்தனர். கால்வாயின் இரு புறங்களிலும் மரங்களும், புதர்களும், வயல்களும் காணப்பட்டன; ஊரென்பதே காணப்படவில்லை. தொலையில் மினுக்கு மினுக்கென்று விளக்கொளிகள் தென்பட்டன. அவற்றால் அங்கெல்லாம் கிராமங்கள் உண்டென்பதைப் படகோட்டிகளின் வாயிலாக அறிந்தோம்.

இரவு மணி எட்டாயிற்று; படகுகள் நிறுத்தப்பட்டன. நிறுத்தப்பட்ட இடம் வெண்மணல் நிறைந்து, கடற்கரை

போலக் காட்சியளித்தது. நிலவு பால் போல ஒளி பரப்பிக்கொண்டிருந்தது. படகுகளிலிருந்த **பெட்ரோமாக்ஸ்** விளக்குகளும் வைக்கப்பட்டன. நாங்கள் அனைவரும் படகுகளினின்று இழிந்து, மணலில் இரண்டு வரிசைகளாய் அமர்ந்தோம். ஒவ்வொருவருக்கும் ஓர் இலையில் எலுமிச்சஞ்சாற்றுச் சோறும், மிளகுப் பொங்கலும், இரண்டு வடைகளும் அளிக்கப்பட்டன. அவற்றை உண்ட பிறகு, படகிலேயே அடுப்பு மூட்டித் தயாரிக்கப்பட்ட தேநீர்ப்பானத்தை அருந்தினோம். மீண்டும் எல்லாரும் படகில் ஏறிக்கொண்டோம். காற்று எதிர்த்திசையினின்று வீசியபடியால், படகுகள் பாய்விரித்துச் செல்லவில்லை. முன்புறம் கயிறுகட்டி ஓர் ஆள் இழுக்கவும், பின்புறத்தில் ஒரு நீண்ட கழியை இணைத்து ஓர் ஆள் தள்ளவும் படகு ஆமை செல்வது போல மெல்ல நகர்ந்தது. நாங்கள் பாடிக்கொண்டும், உரையாடிக்கொண்டும் மகிழ்ச்சியாய்க் காலம் கழித்துப் பிறகு தூங்கிவிட்டோம்.

பொழுது புலர்ந்த பொழுது எங்கள் படகுகள் திருப்போரூர்த் துறையில் நிற்கக் கண்டோம். துறைக்கும், முருகன் திருத்தலமாகிய திருப்போரூருக்கும் ஒரு மைல் தூரம் இருக்கும். நாங்கள் அதை நோக்கிப் புறப்பட்டோம். வழியிலேயே காலைக்கடன்களை முடித்துக்கொண்டோம்; திருக்குளத்தில் குளித்தோம்; கோவிலுக்குச் சென்று ஆண்டவனை வணங்கினோம். பிறகு குன்றின்மீதுள்ள கோவிலுக்குச் சென்றோம்; அங்கிருந்து சுற்றுப் புறங்களைக் கண்டு களித்தோம். எங்கள் தரைநூல் ஆசிரியர், அக்குன்றின் உச்சியில் எங்களை நிற்கச் செய்து, சுற்றுப் புறங்களைக் காட்டிக் கழிவெளி, வயல்வெளி, ஏரிகளின் அமைப்பு முதலிய தரைநூல் சம்பந்தமானவற்றை விளக்கினார். பிறகு நாங்கள் குன்றை விட்டு இறங்கிப் படகை நோக்கி நடந்தோம். வழியில் எங்கள் தமிழாசிரியர் திருப்போரூரின் வரலாற்றை விளக்கினார். அங்கு ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகட்குமுன் **சிதம்பர சுவாமிகள்** என்ற ஒரு துறவியார் வந்து தங்கினாராம். அவர் கனவில் ஆண்டவர் தோன்றித் தமது இருப்பிடத்தைக் கூறிவிட்டு மறைந்தாராம். மறுநாட்காலையில் சிதம்-

பர சுவாமிகள், ஊரில் இருந்தவர்களை அழைத்து, ஆண்டவர் இருப்பிடத்தைக் கண்டறிதல் வேண்டும் என்று கூறினாராம். அக்காலத்தில் அங்குப் பனைமரங்கள் அதிகமாய் இருந்தனவாம். ஊரில் இருந்த மக்களும், அவற்றைப் பயன்படுத்திப் பிழைத்த கிராமணி குலத்தவராம். அவர்கள் முனிவரின் சொற்படி அவரால் காட்டப்பட்ட இடத்தை அகழ்ந்து பார்த்துப் பூமியில் முருகப்பிரானுடைய உருவச்சிலை இருக்கக் கண்டு, அதை எடுத்துச் சிறு கோவில் அமைத்து அதில் எழுந்தருளச் செய்தார்களாம். பின்னர்ச் சிதம்பர சுவாமிகளின் முயற்சியால் கோவில் பெரிதாக அமைக்கப்பட்டுச் சிறந்த நிலையை அடைந்ததென்று ஆசிரியர் கூறினர்.

சிதம்பர சுவாமிகள் திருப்போரூர் முருகர்மீது பல அரிய நூல்கள் இயற்றியுள்ளார் என்றும், அவை ஒன்றுகத் தொகுக்கப்பெற்றுத் **திருப்போரூர்ச் சந்நிதி முறை** என்னும் நூலாய்த் திகழ்கின்றன என்றும் ஆசிரியர் கூறினர். இதற்குள்ளாக நாங்கள் படகை அடைந்தோம். அங்குக் காப்பியும் உப்புமாவும் எங்களுக்கு நல்வரவு கூறின.

பயிற்சி:

I. விடை எழுதுக:

அ. மாணவரும் ஆசிரியரும் சென்னையில் எங்குச் சென்று படகேறினர்கள்?

ஆ. படகு செல்லும் கால்வாயின் பெயர் யாது? அது சென்னைக்குத் தெற்கிலும், வடக்கிலும் எவ்வளவு தூரம் செல்கிறது?

இ. மாணவர்களும் ஆசிரியர்களும் திருப்போரூரில் கண்டவை யாவை?

ஈ. திருப்போரூரின் வரலாற்றைப் பற்றி ஒரு சிறு குறிப்பு எழுதுக.

உ. சிதம்பர சுவாமிகள் திருப்போரூர் முருகர் மீது இயற்றிய நூலின் பெயர் என்ன?

II. சொல்லியுள்ளபடி செய்க :

1. எங்கள் தலைமை ஆசிரியரால் எங்களுக்கு ஓர் அறிக்கை அனுப்பப்பட்டது. (செயப்பாட்டு வினையைச் செய்வினை ஆக்குக.)

2. ஊர் என்பதை நாங்கள் காணவில்லை. (செய்வினையைச் செயப்பாட்டு வினையாக்குக.)

3. வழியிலேயே காலைக்கடன்களை முடித்துக்கொண்டோம்; குளத்தில் குளித்தோம்; கோவிலுக்குச் சென்றோம்; ஆண்டவரை வணங்கினோம்; பிறகு குன்றின்மீதுள்ள கோவிலுக்குச் சென்றோம். (இவற்றை ஒரே வாக்கியமாக எழுதுக.)

III. வாக்கியங்களில் அமைக்க :

உல்லாசப் பிரயாணம், விவரிக்கிறேன், இன்பம், குழுக்கள், படகுத்துறை, அருந்து.

11. எங்கள் இன்பச் செலவு - II

காலை 8 மணி இருக்கும். படகுகள் மாமல்லபுரத்தை நோக்கிப் புறப்பட்டன. படகிலேயே மடைத்தொழில் தொடங்கப்பட்டது. பகல் பன்னிரண்டு மணிக்கு மாமல்லபுரத்துப் படகுத்துறையை அடைந்தோம். அதற்குள் உணவு தயாராகிவிட்டது. கால்வாயோரத்தில் சில பூவரச மரங்களின் கீழ் இருந்து, உணவை உண்டோம். பிற்பகல் இரண்டு மணிக்கு ஊரையடைந்து, நாங்கள் கொண்டுசென்ற பொருள்களை ஒரு சத்திரத்தில் வைத்துவிட்டுக் கடற்கரை அருகிலுள்ள கோவிலுக்குச் சென்றோம். அக்கோவிலின் கிழக்குப் பகுதியில் பின்னமடைந்த ஒரு பெரிய இலிங்கமும், மேற்குப் பகுதியில் பள்ளிகொண்ட விஷ்ணுவின் சிலையும் இருக்கின்றன. அக்கோவிலின் கோபுரமும் சிற்பங்களும் பல்லவர் சிற்ப முறையிலேயே அமைந்துள்ளன. அங்குள்ள ஒரு குரங்கின் உருவம் வியக்கத்தக்கது.



மறுநாட்காலையில் ஊருக்குள் இருக்கும் சிற்பங்களைப் பார்த்தோம். அவற்றுள் அருச்சுனன் தவம் முக்கியமானது.

அக்காட்சி செதுக்கப்பட்டுள்ள பாறை இரண்டு பாகங்களை உடையது. மேற்குப் பகுதியிலேதான் தவம் செய்யும் அருச்சுனனைக் காண்கிறோம். தவம் எத்துணை கடுமையானது என்பதை அச்சிற்பம் வெளிப்படுத்துகிறது. அகோர தவத்தின் பயனாக அருச்சுனனது உடல் மெலிந்து, விலா எலும்புகளெல்லாம் நன்கு தெரிகின்றன. அருச்சுனனுடைய கடுந்தவத்துக்கிரங்கிச் சிவபெருமான் **பாசுபதம்** என்னும் பாணத்துடனும், சிவகணங்களுடனும் காட்சியளிக்கிறார்.

அடுத்தபடி மனத்தைக் கொள்ளை கொள்ளும் சிற்பக் காட்சிகள் **மகிஷ மண்டபத்தில்** உள்ளன. அம்மண்டபத்தில்

ஒரு சுவரில் **மகிஷாசுர மர்த்தனியின்** போர்க்கோலமும், அதன் எதிர்ப்புறச் சுவரில் பாம்பணையிற் பள்ளி கொண்டுள்ள திருமாலின் திருக்கோலமும் காட்சியளிக்கின்றன. மகிஷாசுர மர்த்தனியின் சிலை உலகிலேயே சிறந்த சிற்பங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. அச்சிற்பம் உயிருள்ளது போலக் காணப்படுகிறது. அம்மையின் போர்க்கோலத்தையும், அதற்குரிய பாவத்தையும், அழகுபடச் செதுக்கியுள்ளார் சிற்பி. அம்பி-

கையின் முகத்தில் சினத்தைக் காண்கிறோம்.' ஆனந்த நித்திரை புரியும் ஐயன் முகத்தில் சாந்தம் ததும்புகிறது.

மகிஷ மண்டபத்தை அடுத்து மற்றொரு மண்டபம் இருக்கிறது. அதற்கு **வராக மண்டபம்** என்பது பெயர். அதில் திருமால் வராக அவதாரம் எடுத்துப் பூதேவியை மீட்டு வந்த காட்சியும், அவர் திரிவிக்கிரம அவதாரமெடுத்து உலகை ஓரடியால் அளந்த காட்சியும் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர, அம்மண்டபத்தில் பல சிலைகள் உள்ளன. அவற்றுள் ஒன்று, **சிம்ம விஷ்ணு** என்னும் பல்லவ மன்னன் உருவமென்றும், மற்றொன்று, முதலாவது **மகேந்திர வர்மர்** உருவமென்றும் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். அவ்விருவரும் பல்லவ குலத்தைச் சேர்ந்த மன்னர்கள் என்பதை நீ அறிவாய் அல்லவா ? இத்தகைய சிற்பங்கள் அங்கு மேலும் பல உண்டு. அவற்றையெல்லாம் பார்த்து முடிவதற்குள் மணி பன்னிரண்டாயிற்று. வெயில் மிகக் கடுமையாய் இருந்தது. அங்குக் கிடைத்த வெள்ளரிக்காய்கள் அத்தனையும் நாங்களே வாங்கித் தின்று, தாகத்தைத் தணித்துக்கொண்டு, எங்கள் விடுதியை அடைந்தோம்.

விடுதியின் அருகில் உள்ள ஒரு குளத்தில் அனைவரும் குளித்தோம் ; பிறகு வடை பாயசத்துடன் உணவு உட்கொண்டோம் ; சிறிது நேரம் களைப்பாறினோம் ; மீண்டும் மூன்று மணிக்குப் புறப்பட்டோம் ; ஊருக்குத் தெற்கே ஒரு மைல் தூரத்தில் உள்ள கற்பாறைகளில் குடைந்தெடுக்கப் பெற்ற இரதங்களைக் காணச் சென்றோம். அவை **பாண்டவ ரதங்கள்** என்று பாமரர்களால் வழங்கப்படுகின்றன. ஆதலால், ஒவ்வொரு தேருக்கும் பாண்டவர்களுள் ஒருவர் பெயர் வழங்கப்பட்டுள்ளது. அவை முற்றிலும் செதுக்கி முடிக்கப்படவில்லை. அவற்றுள் மிகுந்த வேலைப்பாடுள்ளது தருமர் ரதம். அதன் உச்சியில் புராண சம்பந்தமான சிற்பங்கள் உள்ளன. அதன் தென்புறத்தில் உள்ள ஒரு சிலை **நரசிம்ம வர்ம பல்லவ**ருடையது என்று கூறப்படுகிறது. அந்த ரதங்கள் தொடங்கப் பெற்ற பிறகு ஒரு நூற்றாண்டு வரையில் பல்லவ மன்னர்களின் ஆட்சி நிலைபெற்றிருந்தும், அந்த ரதங்கள் முற்றிலும் பூர்த்தி-

யடையவில்லை ; அவை போன்ற வேறு பல ரதங்களும் முற்றுப் பெறவில்லை. இதற்குக் காரணம் யாதென்பது நிச்சயிக்கப்படவில்லை. அந்த ரதங்களின் அருகில் ஒரே கல்லால் செதுக்கப்பட்ட ஒரு யானையின் உருவம் உள்ளது. அதை தூரத்திலிருந்து பார்த்தால், உயிர் உள்ள யானை என்றே எவரும் ஏமாறுவர். அவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு எங்கள் விடுதிக்கு வர மாலை ஐந்து மணியாகிவிட்டது. வந்தவுடனே பஜ்ஜியும் தேநீரும் உட்கொண்டோம். அதற்குள் திருக்கழுக்குன்றத்துக்கு எங்களை கொண்டு செல்ல வேண்டிய மோட்டார் பஸ்கள் வந்துவிட்டன.

சமையற்காரர் உட்பட நாங்கள் நூற்றிருபது பேருக்கு மேலிருந்தோம். மூன்று மோட்டார்களுக்குச் சொல்லி இருந்தும், இரண்டே வந்தன. அம்மோட்டார் ஓட்டிகள் மிக நல்லவர்கள். அவர்கள் எங்கள் அத்தனை பேரையும் எங்கள் மூட்டை முடிச்சுகளுடன் மூச்சுத் திணறும்படி இரண்டு வண்டிகளிலும் அடைத்துக்கொண்டு புறப்பட்டார்கள். ஒரு மணி நேரத்துக்குள்ளேயே திருக்கழுக்குன்றத்தை அடைந்துவிட்டோம். அங்கு மலையடிவாரத்தில் உள்ள மிகப் பெரிய சத்திரம் நாங்கள் தங்க அமர்த்தப்பட்டிருந்தது. அதன்முன் எங்கள் மோட்டார்கள் வந்து நின்ற போதுதான் ஆண்டவருடைய அருளின் திறம் இன்னதென்று நாங்கள் அறிந்து அவரை மனமார நினைத்து, வாயார வாழ்த்தினோம். அவர் அருள் இல்லாவிடில் அறுபது ஆட்களையும் அவர்களுடைய மூட்டைகளையும் ஏற்றிக்கொண்டு பழுதுபடாமல் அவ்வண்டிகள் வந்து சேர்ந்திருக்க முடியுமா? மோட்டாரை விட்டிறங்கியபோது நாங்கள் அனைவரும் களைப்புற்றிருந்தபடியால் எங்கள் விடுதியின் திண்ணைகளிற் படுத்துவிட்டோம். அப்போது மணி ஏழுதான். படுத்தவர்களுள் பலர் அயர்ந்து உறங்கி விட்டனர். இரவு 9 மணிக்குள் எப்படித்தான் சமையல் முடிந்ததோ ! எங்களை எழுப்பிச் சோறு படைத்தார்கள். உருளைக்கிழங்கு வறுவலும் மிளகு ரசமும் அயர்ந்திருந்த எங்களுக்கு ஆனந்தத்தை ஊட்டின. முன்னரே தூங்கிவிட்டபடியால், சாப்பிட்ட பின் தூக்கம் வரவில்லை. பாட்டுக் கச்சேரி

தொடங்கிற்று! இனிமையாகப் பாடக்கூடிய சிலர் எங்களுள் இருந்தபடியால், அவ்வூரார் பாட்டுக்கேட்கத் திரண்டு வந்துவிட்டனர். சத்திரத்தின் எதிரில் தெருவில் அமைதியாய் அமர்ந்து பாட்டைக் கேட்டு இன்பத்தில் திளைத்தனர். பாட்டுக் கச்சேரி முடிந்து, நாங்கள் படுப்பதற்குப் பன்னிரண்டு மணிக்கு மேலாயிற்று.

நாங்கள் அதிகாலையில் எழுந்தோம். ஊர்ப்புறத்தே சென்று காலைக்கடன்களை முடித்துக்கொண்டு, அங்குள்ள **சங்கு தீர்த்தம்** என்னும் குளத்திற்குக் குளிக்கச் சென்றோம்.

அக்குளம் மிகப் பெரியது. அதன் நான்கு புறங்களில் கற்படிகள் உள்ளன; நடுவில் அழகிய மண்டபம் காட்சியளிக்கிறது; அக்குளத்தில் பன்னிரண்டு ஆண்டுக்கொரு முறை பேராரவாரத்தோடு சங்கு பிறக்குமாம்! அதனால் அதற்குச் **சங்கு தீர்த்தம்** என்னும் பெயர் வழங்குகிறது. ஆசிரியர்களும் குழுத்தலைவர்களும் அதிக விழிப்புடன் இருந்து எங்களைக் குளிக்கச் செய்து கரையேற்றினார்கள். காலை எட்டு மணிக்குப் பொங்கலும் காப்பியும் அளிக்கப்பட்டன. ஒரு மணி நேரம் எங்கள் விருப்பம் போல ஊரைச் சுற்றிப் பார்த்துவிட்டுச் சத்திரத்தை

அடைய வேண்டுமென உத்தரவு பிறந்தது. அங்ஙனமே சுற்றிவிட்டு வந்தோம்.

சரியாக ஒன்பதரை மணிக்கு மலையேறத் தொடங்கினோம். படிகள் நன்கு அமைக்கப்பட்டுள்ளன. ஆயினும், சிற்சில இடங்களில் மலை செங்குத்தாயிருப்பதால், ஏறுவது எளிதாய் இல்லை. அப்போது எங்கட்கு இமயமலை ஏற்றத்தில் ஈடுபட்டவர்கள் எத்துணை துன்பத்துக்குட்பட்டிருப்பார்கள் என்னும் எண்ணம் உதித்தது. பத்தரை மணிக்கெல்லாம் உச்சியை அடைந்தோம். அதன் கிழக்குப் பகுதியில் சற்று தூரத்தில் ஒரு பாறை இருக்கிறது. சரியாக பதினொரு மணிக்கு

ஒரு பண்டாரம், ஒரு தட்டில் இரண்டுருண்டைச் சர்க்கரைப் பொங்கலையும், இரண்டு கிண்ணங்களில் நெய்யையும் எடுத்துக்கொண்டு சென்று, பாறையின்மீது நீரைத் தெளித்து அங்கு அமர்ந்தார். சிறிது நேரத்திற்குள் இரண்டு கழுகுகள் அப்பாறையின்மீது வந்து உட்கார்ந்தன. பண்டாரம் தட்டிலிருந்த பொருள்களை அவற்றின் முன் வைத்தார். அவை அமைதியாய் உண்டுவிட்டுச் சென்றன. மிச்சமிருந்ததை

பண்டாரம் கொண்டுவந்து விற்கத் தொடங்கினர். எங்களுள் யாரும் அதை வாங்கவில்லை. ஆனால், அங்கு அப்பட்சி தரிசனத்துக்காக வந்திருந்த மற்றவர் அப்பிரசாதத்தை மேல் விழுந்து வாங்கிக் கொண்டனர்.

பிறகு எங்கள் தமிழாசிரியர் திருக்கழுக்குன்றத்தின் மகிமையைப்பற்றிக் கூறினர்; அது தேவாரம் பெற்ற ஸ்தலம் என விளக்கினர். அந்தக் கழுகுகள் சாபமுற்ற இரண்டு முனிவர்கள் என்றும் கூறினர். அதன் பின்னர், தரை-நூலாசிரியர் அம்மலையின் உச்சியிலின்று சுற்றுப் புறங்களைக் காட்டி ஏரிகளின் தோற்றம் முதலியவற்றை விளக்கினர். பின்னர் மலையின்மீதுள்ள **வேதகிரீசர்** ஆலயம் என்னும் சிவாலயம் சென்று, இறை வணக்கம் செய்துவிட்டு இறங்-கினேம்.

பகல் ஒரு மணிக்கெல்லாம் உணவை முடித்தோம். இரண்டு மணிக்கு மூன்று மோட்டார் பஸ்கள் எங்களை ஏற்றிக்கொண்டு வந்து செங்கற்பட்டில் இறக்கின. அங்-கிருந்து புகை வண்டியேறி, மாலை ஆறு மணிக்குச் சென்னையை அடைந்தோம். இந்த உல்லாசப் பிரயாணம் எங்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. படகு, மோட்டார், புகை வண்டி ஆகிய மூன்று வகை வாகனங்களிற் சென்று சரித்திரப் பிரசித்திபெற்றதும், சிற்பக்கலையின் பிறப்-பிடமாயுள்ளதுமான ஓரிடத்தையும், ஒரு முருகன் கோவில், ஒரு சிவன் கோவில் ஆகிய இரண்டு மலைக்கோவில்களையும், இடையிற் பல சிற்றூர்களையும் காணும் வாய்ப்பினை அளித்த அந்த இன்பச் செலவு, மாணவர்களும் ஆசிரியர்களும் கட்டுப்-பாடின்றி அன்புடன் பழகுவதற்கு அரியதொரு சந்தர்ப்பத்-தையும் அளித்தது.

இந்த ஆண்டில் வரலாற்றுப் புகழ் பெற்ற ஹம்பிக்-குச் செல்ல முடிவு செய்துள்ளோம். அங்குச் சென்ற பின் அதனையும் விவரிப்பேன்.

அன்புள்ள
கந்தசாமி

பயிற்சி :

I. விடை எழுதுக :

அ. மாமல்லபுரம் கடற்கரைக் கோவிலின் சிறப்பு யாது?

ஆ. ஊருக்குள் இருக்கும் சிற்பங்களுள் முக்கியமானவை எவை? அவற்றைப் பற்றிய சிறப்புக்கள் யாவை?

இ. 'பாண்டவ ரதங்கள்' என்பவை யாவை? அவற்றுள் சிறந்தது எது?

ஈ. மாமல்லபுரத்தில் காணப்படும் பல்லவ மன்னர்களின் உருவச் சிலைகள் எவை?

உ. திருக்கழுக்குன்றம் செல்பவர் காணக் கூடியவை யாவை?

ஊ. உல்லாசப் பிரயாணத்தால் ஏற்படும் நன்மைகள் யாவை?

II. கீழே தரப்பட்டுள்ள குறிப்புக்களைக் கொண்டு சிறியதொரு கட்டுரை வரைக :

1. திருப்போரூரில் கண்ட காட்சி
2. மாமல்லபுரத்துச் சிற்பங்கள்
3. திருக்கழுக்குன்றத்துப் பட்சி தரிசனம்

III. எதிர்ப்பதங்கள் எழுதுக :

தொடங்கு, அவசியம், மெலிந்து, சண்டை, அழகுபட, வெயில்.

IV. வாக்கியங்களில் அமைக்க :

மோட்டார் ஓட்டி, அமர்த்தப்பட்டது, தொடங்கிற்று.

12. ஒரு விநோதப் பாட்டு

1. ‘ தமிழ்ப் புலவர் ’ என்னும் தொடருக்கு ‘ வறுமை ’ என்பது பொருள் என்ருர் ஒருவர், வேடிக்கையாக! ஆராய்ந்து பார்த்தால், அது உண்மை என்றே புலப்படுகிறது. பண்டு முதல் இன்றளவும் தமிழ்ப் புலவர்களின் வரலாறுகளைப் படித்தால், அவர்கள் எல்லோரையுமே வறுமை என்னும் பிணி வாட்டி வந்துள்ளது என்பது வெள்ளிடை மலையாகும். ஏதோ இங்குமங்குமாகக் **கம்பர், ஒட்டக்கூத்தர்** என்பவரைப் போலச் சில தமிழ்ப் புலவர்கள் கல்விச் செல்வத்தோடு பொருட் செல்வமும் பெற்றிருந்தார்களெனில், அதை விதி விலக்காகவே கொள்ள வேண்டும்.

2. இங்ஙனம் வறுமையில் உழன்ற புலவர்களுள் ஒருவர், **இராமசந்திரக் கவிராயர்** என்பவர். அவர் தமிழில் வல்லுநர் ; எத்தகைய பொருளையும் எளிதில் அமைத்து இனியபாடல்களை இயற்ற வல்லவர் ; பேச்சுத் திறமை நிரம்பப் படைத்தவர். அவர் பேச்சுக்கள் நகைச்சுவை மிக்கவையாய் இருக்கும். அவர் இயற்றிய பாட்டுக்களுட்சிலவும் அங்ஙனமே இருக்கக் காணலாம்.

3. ஒரு நாள் மாலை நேரத்தில் புலவர் நெடுந்தொலையி-லிருந்தோர் ஊருக்குப் போய்த் திரும்பித் தம்மூருக்கு வந்து-கொண்டிருந்தார். அப்போது புலவருடைய நண்பரும், அவர் ஊரைச் சேர்ந்தவருமாகிய ஒருவர் அவரை இடைவழியிற் கண்டார். புலவர் நெடுந்தூரம் நடந்து வந்துகொண்டிருந்த-படியால், மிகவும் களைப்புற்றிருந்தார். மனச்சோர்வு காரண-மாக அவருடைய முகமும் சோர்வுற்றிருந்தது. அது கண்ட நண்பர், ‘ அண்ணா, வணக்கம் ! ’ என்ருர்.

புலவர் : வணக்கம் !

நண்பர் . அண்ணா, நெடுந்தூரம் போய் வருகின்ருற்போலத் தோற்றுகிறது ! யாராவது பிரபுவைக் காணச் சென்றிருந்தீரோ ?

புல : ஆம்.

நண் : அங்ஙனமாயின், பரிசில் ஏதுமின்றி வருகின்றீரே ! ஏன் ?

புல : ஏனு ! சொல்கிறேன் ; கேள் : நான் பரிசில் கேட்கச் சென்றவன் ஓர் உலுத்தன். முற்பிறப்பிற் செய்த நல்வினைப் பயனுக, இப்பிறப்பில் அவன் திரண்ட செல்வத்தைப் பெற்றுள்ளான். அதனைப் பிறர்க்குக்கொடுத்து உதவாமலும், தானும் அதனுல் இன்புருமலும், அதைப் பூதம் காப்பது போலக் காத்துக்கொண்டிருக்கிருன். அத்தகைய உலோபியை வாயார வாழ்த்தினேன் ! எழுத்தே அறியாத அவனைக் ' கல்விக் களஞ்சியமே,' என்றேன் ; மாடுகளுக்கு மேய்ச்சலிடமாயுள்ள காட்டையும்விடாமல் திருத்தித்தன் நிலத்தின் அளவைப் பெருக்கிக்கொள்ளும் அவனை, ' நாடாளும் நல்ல அரசனே,' என்று புகழ்ந்தேன் ; நற்குணம் ஒன்றேனும் இல்லாத அவனை, ' உயர் குணங்களின் உறைவிடமே,' என்றுரைத்தேன் ; அண்டையூரிற் சண்டை நடந்தால் அடுப்பறையில் மறைந்துகொள்ளும் கோழையாகிய அவனைப் ' போரில் புலி போன்றவனே,' எனப் புகன்றேன். சுருங்கித் திரைந்த அவன் தோள்களை, ' மற்போருக்குரிய புயங்கள் ' எனப் புனைந்துரைத்தேன் ; ஒருவருக்கும் ஒரு காசும் நன்கொடையாகக் கொடுத்தறியாத கைகளையுடைய அவனை, ' வரையாது வழங்கும் வள்ளலே,' என்று கூறினேன். இவையனைத்தையும் அவன் இன்முகத்தோடு கேட்டுக்கொண்டிருந்தான். எனது வாழ்த்துரை முடிந்தது. அவ்வளவுதான் ! அவன் முகத்தைப் பார்க்க வேண்டுமே !

நண் : முகம் என்னுயிற்று !

புல : என்னுயிற்று ! நூறு கோணலாகச் சுளித்துக்கொண்டது ! புருவம் நெற்றியிலேற, கண்கள் சிவப்பச் சினங்கொண்டெழுந்தான். உடனே யான் துணுக்குற்றுச் சற்றுச் சேய்மையிற் சென்றேன்.

நண் : பிறகு என்னுயிற்று?

புல : என்னுயிற்ரு? இடியிடித்தாற்போலக் கனன்று பேசத் தொடங்கினுன். அதைக் கேட்டு நானே ஆச்சரியமுற்றேன். ஒன்றுக்கும் பற்ருத ஒருவனைப் பலபடப் புகழ்ந்து பரிசில் பெறத்தக்க ஆற்றல் மிக்க புலவனுகிய யானும் வாய்திறந்து மறு-வார்த்தை கூறவொட்டாமல் மடக்கிய அவன் பேச்-சுத் திறத்தை என்னென்று கூறுவது!

நண் : ஒன்றுக்கும் உதவாத அவன் அப்படிப் பிரமாத-மாகப் பேசியதுதான் யாதோ? கூறுங்கள்; கேட்-போம்.

புல : கூறுகிறேன்; கேள்; "புலவரே, நீர் என்னைப் பித்-தன் என்று நினைத்தீர் போலும்! நீர் என்னைப்பற்றி ஏதேதோ பிதற்றினீரே! அவற்றில் ஒன்றேனும் உண்மையா என்று சிறிது சிந்தித்துப் பாரும்! இல்லாத செய்திகளையெல்லாம் அடுக்கியடுக்கி நீர் என்னைப்பற்றிக் கூறினுல், அவற்றைக் கேட்டு ஆனந்தமடையும் மடமை என்னிடம் இல்லை. நான் எப்பொழுதும் உண்மையை மதிப்பேனேயன்றிப் பொய்யை மதிப்பதில்லை. என்னைப்பற்றி இல்லாதன-வாகிய எத்தனையோ செய்திகளை நீர் எடுத்துரைத்தீர். ஆதலால், உமக்கு ஒன்றும் இல்லை. போம்," என்று கூறினுன். யானும் அத்தகைய அறிவற்ற உலோபி-யைப் பாடியது குற்றந்தான் என்பதை உணர்ந்து கொண்டேன்.

நண் : அண்ணு, நன்று, நன்று! இந்த நிகழ்ச்சி உலகத்தவர் அறிய வேண்டுவதொன்று. ஆதலின், இதனையே பொருளாக அமைத்து, ஒரு செய்யுளை இயற்றினுல், உங்கள் மனமும் ஆறுதலடையும்; உலோபிகளைப் பாடக்கூடாதென்பதற்கு அஃதோர் எடுத்துக்காட்-டாகவும் இருக்கும்.

புல: நீ கூறுவது முற்றிலும் உண்மையே. உனது விருப்பப்படியே ஒரு செய்யுள் கூறுகிறேன்; கேள்:

கல்லாத ஒருவனைநான் கற்றாய் என்றேன்;
காடெறியும் மறவனைநா டாள்வாய் என்றேன்;
பொல்லாத ஒருவனைநான் நல்லாய் என்றேன்;
போர்முகத்தை யறியானைப் புலியேறு என்றேன்;
மல்லாரும் புயமென்றேன் சூம்பல் தோளை;
வழங்காத கையனையான் வள்ளல் என்றேன்;
இல்லாது சொன்னேனுக்(கு) 'இல்லை' என்றான்;
யானுமென்றன் குற்றத்தால் ஏகின் றேனே!

நண்: அண்ணா, இப்பாட்டு எவ்வளவு அழகாயிருக்கிறது! எவ்வளவு இனிமையாயிருக்கிறது! பாட்டென்றால் இதுவன்றோ பாட்டு! இத்தகைய நும் பாடலைக் கேட்டு நுமக்குப் பரிசில் வழங்காது அனுப்பினவன் மனிதரோடு வைத்து எண்ணத் தக்கவனல்லன். வாரும்; போவோம்.

பயிற்சி:

I. விடை எழுதுக:

அ. இராமசந்திரக் கவிராயரைப் பற்றி நீ அறிந்தவை யாவை?

ஆ. அவர் ஏன் பரிசில் பெறாமல் திரும்பினார்?

இ. அவர் கூறிய பாட்டின் கருத்தைச் சுருக்கமாக எழுதுக.

II. எதிர்ப்பதங்கள் எழுதுக:

எளிது, நிரம்ப, சோர்வு, உலுத்தன், காடு, நற்குணம், கோழை.

III. வாக்கியங்களில் அமைக்க:

புலப்படுகிறது, வெள்ளிடைமலை, விதி விலக்கு, உழன்ற, உலுத்தன், உறைவிடம்.

IV. நீ இத்தகைய விநோதப் பாட்டு ஏதேனும் படித்திருக்கிறாயா? படித்திருந்தால், ஒரு பாட்டை எழுதுக.

13. பஞ்சதந்திரம் - சந்தி விக்கிரகம்*



1. மலையாளக் கரையை அடுத்த மரங்கள் செறிந்த காடொன்றில் பல யானைகள் இன்புற்று வாழ்ந்திருந்தன. அவற்றின் அரசுக்கு '**சதுரதந்தன்**' என்பது பெயர். ஒரு ஆண்டில் மழை வளம் குன்றியபடியால், அக்காட்டிலிருந்த நீர்நிலைகளெல்லாம் வறண்டன. ஆதலால் யானைகள் நீரின்றித் தவிக்கலாயின. அது கண்ட யானையரசு, தன்னுடைய ஒற்ற யானைகளை எல்லாத் திசைகளிலும் சென்று நீர்நிலைகள் இருக்குமிடத்தைக் கண்டறிந்து வரும்படி அனுப்பியது.

2. அவ்யானைகள் சென்று, வெகுதூரத்தில் இருந்த **சந்திரசரசு** என்னும் பெயருடைய தடாகத்தைக் கண்டு வந்து, தங்கள் அரசுக்குத் தெரிவித்தன. உடனே யானைகளெல்லாம் அங்குச் சென்றன. ஏற்கெனவே அத்தடாகத்தின் அருகில்

---

* "மெத்தவும் பகைத்துள்ளாரை விரும்பி நட்பாக்கிய பின்னர்ச் சத்துரு நாசம் பண்ணல் சந்தி விக்கிரகம்."

வசித்து வந்த **சிலீமுகன்** என்னும் முயலரசு, யானைகளின் வருகையைக் கண்டு அஞ்சித் தனது மந்திரியாகிய **விசயன்** என்னும் முயலை அழைத்து, 'மதி மிக்க மந்திரியாரே, நாம் இதுகாறும் இச்சுனையின் அருகில் இனிது வாழ்ந்திருந்தோம்! இப்போது, இத்தும்பிகள் இங்கு வந்து சேர்ந்தபடியால், நாம் இனி இங்கிருத்தல் தகாது. இந்த அடவியை விட்டு அகல்வோமெனின், நீர் கிடைக்கக்கூடிய இடம் எதுவுமில்லை. ஆதலால், நாம் இங்கேயே தங்கியிருக்கவும், இங்கு வந்து குடியேறிய வேழங்கள் வனத்தைவிட்டு வெளியேறவும் தக்க சூழ்ச்சியைக் கண்டு கூறவேண்டுவது உமது கடமையாகும்,' என்று கூறிற்று.

3. முயலரசு கூறியதைக் கேட்ட விசயன், "அரசே, இந்த யானைகளை இங்கிருந்து விரட்டுவது அரிய செயலன்று. அடியேனுக்கு ஆணையிட்டால், அரை நொடியில் இவ்வாரணங்களை இங்கிருந்து வெளியேற்றுகிறேன், பாரும்," என்று பகர்ந்தது. அது கேட்ட சிலீமுகன் மனம் மகிழ்ந்து, "அறிவிற்சிறந்த அமைச்சரே, அங்ஙனமே நீர் சென்று அவ்வரிய காரியத்தை முடித்துவிட்டு வாரும்," என்று கூறி விசயனை அனுப்பியது.

4. வேந்தரால் ஏவப்பட்ட விசயன், விரைவாய்ச் சென்று சந்திரசரசின் அருகிலிருந்த ஒரு குன்றின்மீது ஏறி, யானைகளின் வரவை எதிர்நோக்கியிருந்தது. யானைகள், சதுரதந்தன் முன்னும், மற்றவை பின்னுமாகத் தானிருந்த குன்றின் அருகே வந்தவுடனே, விசயன் யானையரசை நோக்கி, 'ஐயா, கசராசரே, நீர் நலமோ?' என்று வினவியது. அது கேட்ட களிற்றரசு வியப்புற்று, 'நீர் யார்?' எனக் கேட்டது.

5. 'ஐயா, யான் சந்திரரால் ஏவப் பெற்ற தூதன். என் பெயர் விசயன். சந்திரர் தம் பெயரால் இத்தடாகத்தை உண்டாக்கியுள்ளார்; தாமும், தம் தேவிமாரும், இராக்காலங்களில் இங்கு வந்து இதில் விளையாடிச் செல்வது வழக்கம். பகற்காலங்களில் என்னை இதற்குக் காவலனாக அமர்த்தியுள்ளார். இச்சுனையில் தேவர்களும் இறங்குதல் கூடாது. நீரும் உம் இனத்தவரும் இச்சுனையில் இறங்கியது கண்டு, சின-

முற்று உங்களை உடனே இவ்விடத்தினின்று அகற்றுமாறு, அவர் என்னை ஏவினர்,' என்று முயலமைச்சுக் கூறியது.

6. அது கேட்ட யானையரசு, நடுக்கமுற்று, 'ஐயா, தூதரே, உம் அரசரை எமக்குக் காட்டும். யாங்கள் அறியாமையாற் செய்த இக்குற்றத்துக்கு அவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, நாங்கள் உடனே சென்று விடுகிறோம்,' என்றது. தன் கருத்து வெற்றியடையுமெனக் கருதிய விசயன், 'நல்லது! இன்றிரவு உமக்கு அவரைக் காட்டுவேன்,' என்று கூறிற்று; அங்ஙனமே, அன்றிரவு சந்திரனுடைய சாயையும், உடுக்களின் சாயைகளையும் தடாகத்திற் காட்டி, 'இதோ! எங்கள் மன்னரும் தேவியரும் சுனையில் குளிப்பதைப் பாரும்,' என்று முயலமைச்சு யானையரசுக்குக் கூறி நின்றது. அக்காட்சியைக் கண்ணுற்ற களிறு, முயல் கூறியது முற்றிலும் உண்மையெனக்கொண்டு, மதியின் சாயைக்கு மண்டியிட்டு வணக்கம் செய்து, 'ஐயனே, அடியேங்கள் அறியாமற் செய்த பிழையைப் பொறுத்து மன்னித்தருள வேண்டும்!'' என்று கூறி எழுந்து, அக்கானகத்தை விட்டுத் தன் பரிவாரங்களோடு அகன்றது.

7. விசயனது மதி வன்மையைப் புகழ்ந்து முயல்கள் அங்கு மகிழ்வுற்றிருந்தன. இக்கதையால் '**புத்திமானே பலவான்**,' என்னும் முதுமொழியின் உண்மை நன்கு புலப்படுகின்றதன்றோ!

பயிற்சி:

I. விடை எழுதுக:

அ. சதுரதந்தனும் அதன் இனமும் ஏன் வேறு காட்டுக்குச் சென்றன?

ஆ. அங்கு வசித்த சிலீமுகன், யானைகளை ஏன் அங்கிருந்து விரட்ட விரும்பியது?

இ. யானைகளைக் காட்டினின்று துரத்த விசயன் செய்த தந்திரம் யாது?

II. கீழே தரப்பட்டுள்ள குறிப்புக்களின் உதவியால் ஒரு சிறு கட்டுரை வரைக :

1. காட்டில் மழையின்மை 2. யானைகள் சந்திரசரசை அடைதல் 3. விசயனது தந்திரம்.

III. சொல்லியுள்ளபடி செய்க :

1. மரங்கள் செறிந்த காடு ஒன்றில் பல யானைகள் இன்புற்று வாழ்ந்திருந்தன. (வாக்கியத்தின் முதற்சொல்லும் இறுதிச் சொல்லும் தவிர மற்ற சொற்களுக்குப் பதில் பொருள் மாறாதபடி வேறு சொற்களை அமைக்க.)

2. யானை அரசு தூதர்களை அனுப்பியது. நீர் நிலைகளைத் தேடச் சென்ற யானைகள் சதுரதந்தனுக்குச் சந்திர சரசைப்பற்றி அறிவித்தன. (இவ்வாக்கியங்களில் உள்ள செய்வினைகளை செயப்பாட்டு வினைகளாக மாற்றுக.)

3. அக்காட்சியைக் கண்ட களிறு, முயல் கூறியது முற்றிலும் உண்மையெனக் கொண்டு, மதியின் சாயைக்கு மண்டியிட்டு வணக்கம் செய்துவிட்டு, அக்கானகத்தை விட்டு அகன்றது. (இந்த வாக்கியத்தை நான்கு சிறு வாக்கியங்களாக எழுதுக.)

IV. வாக்கியங்களில் அமைக்க :

செறிந்த, இன்புற்று, ஒற்றர்கள், அடவி, சூழ்ச்சி, கடமை, வியப்பு.

V. இப்பாடத்தில் யானை, காடு என்னும் பொருள்களில் வந்துள்ள சொற்களை எடுத்தெழுதுக.

VI. அகராதி பார்த்து பொருள் எழுதுக :

நீர்நிலை, மதி, தும்பி, வேழங்கள், சூழ்ச்சி, வாரணங்கள், களிறு, அகற்று, சாயை, உடுக்கள்.

14. தென்முனை கண்ட தீரர்

1. நில உருண்டையின் வட, தென்முனைகளை ஆராய்ந்து அறியப் பலர் முயன்றனர். **ரோவால்ட் அமண்சென்** என்பவர் அவர்களுள் ஒருவர். அவர் **நார்வே** நாட்டினர். அவர் சிறந்த மாலுமி ; அஞ்சா நெஞ்சம் படைத்தவர் ; உலையா ஊக்க-முள்ளவர் ; எத்தகைய இடுக்கண் நேரிடினும் அதனை எள்ளி குறுநகை கொள்ளும் வழக்கமுடையவர் ; அவர் வட, தென் முனைகளைக் கண்டு ஆராய விரும்பினர். அன்றியும், ஐரோப்பாவிலிருந்து வடமேற்குத் திசையிற்சென்று, ஆசியாவை அடைய வேண்டுமென்பதும் அவரது பேராவல்.

2. அமண்சென் முதலிற் சில கலங்களிற் பணியாற்றி அனுபவமும் புகழும் பெற்ருர் ; ஆதலால் தென்முனையை ஆராய்வதற்குப் புறப்பட்ட **பெல்ஜிகல்** என்ற கப்பலில் தலைவராய் நியமிக்கப் பெற்ருர். அவர் தீரம் மிக்க தம்முடைய துணைவர்களுடன் கலத்தைச் செலுத்திக்கொண்டு **தென் விக்டோரியாலந்**தை அடைந்த போது, அக்கலம் உறை-பனியிற்சிக்குண்டது. மாலுமிகளுள் சிலரைக் **கடல் நோய்** பற்றியது. சிலர் தம் மனநிலையிழந்து, பயத்தால் பீடிக்கப்-பட்டனர். ஆனல், அமண்சென் நம்பிக்கை இழக்கவில்லை. நெடுநாட்கள் சேகரித்து வைக்கப்பட்ட உணவைக் கைவிட்-டுப் புதிதாய் தயாரித்த உணவை உண்டால் கடல் நோய் தீரும் என்பதை அவர் அறிவார். ஆதலால், அளவற்ற துன்பங்களுக்கிடையே, அவர் தம் கலத்தை விட்டுத் தொலை-யிற்சென்று, பறவைகளையும் மீன்களையும் பற்றிக்கொண்டு வந்து, அவற்றை சமைக்கச் செய்து, நோயுற்றவர்கட்கு அளித்து வந்தார். அதனுல் மாலுமிகள் நோய் நீங்கப்

பெற்றார்கள். பின்னர், பனிப்படலம் கரைந்து, கலத்தைச் செலுத்தக்கூடிய நிலை தோன்றிய போது, அமண்சென் தம் நாடு திரும்பினார்.

3. சின்னாட்களுக்குப் பிறகு, தீரம் மிக்க அறுவரைத் தமக்குத் துணையாகக் கொண்டு, அமண்சென் ஒரு மீன்-கலத்திலேறி, வடமுனை நோக்கிப் புறப்பட்டார்; தம் கலத்தை மெல்ல மெல்லச் செலுத்திப் **பீல் சௌண்டு** என்னுமிடத்தை அடைந்தார். அதற்கப்பால், அவர்களுக்கு முன் வேறெவரும் சென்றதில்லையாதலால், வழிப்படத்தின் உதவியின்றி, தட்டித்-தடுமாறிக் கலத்தைச் செலுத்திக்கொண்டு, வழிப்படமொன்-றையும் தயாரித்துக்கொண்டே சென்றார் அமண்சென். ஒரு நாள் கடும்புயல் வீசத் தொடங்கியது. கலம் கட்டுக்கு மீறிச் செல்லலாயிற்று. பேரலையொன்றால் தாக்கப்பட்டுக் கலத்தின் துடுப்பு அதன் அச்சை விட்டு அகன்றது. கலமும் ஒரு பாறையை அணுகியது. அரைக்கணத்தில் தங்கள் ஆயுள் முடிந்துவிடும் என்று எண்ணினார்கள்; அமண்செனும் அவர் நண்பர்களும்.

4. ஆனால் ஆண்டவரது அருள் திறத்தை என்-னென்று புகழ்வது! மற்றொரு பெருந்திரை மறு கணத்தில், வழி தப்பிப் பாறையில் மோதவிருந்த கலத்தை அதன் வழியிற்சேர்த்தது; மற்றுமொரு பேரலை, அச்சை விட்-டகன்ற துடுப்பை மீண்டும் தன்னிலையடையச் செய்தது. அனைவரும் அகம் மிக மகிழ்ந்து, ஆண்டவரைத் துதித்தனர். அமண்சென் மிகுந்த விழிப்புடன் கலத்தை மெல்லச் செலுத்தி, இக்காலத்தில் '**வில்லியம் அரசர் தீவு**' என வழங்கும் தீவை அடைந்தார். கலம் ஏற்றதோர் இடத்தில் நிறுத்தப்பட்டது. அமண்செனும் நண்பர்களும் தீவிற்சென்று, தங்குமிடங்களை அமைத்தார்கள். அப்போதே அங்குக் குளிர் காலம் தொடங்கி விட்டபடியால், அவர்கள் அங்கேயே தங்க நேரிட்டது. அமண்சென் அங்கோர் ஆய்கூடத்தை ஏற்படுத்தினார். அதற்கு வேண்டிய '**மாக்னெட்டிக்கு நீடில்**' என்று கூறப்படும் **இழுதிறன் ஊசிகளையும்**, அவற்றை அமைத்தற்கான சலவைக் கற்களையும்,

வெப்ப தட்பங்கள் அவற்றைத் தாக்காமல் மூடுவதற்கான செப்பாணிகள் அறைந்து ஆக்கப்பெற்ற பெட்டிகளையும் அமண்சென் தம்முடன் கொண்டு சென்றிருந்தார்.

5. அமண்சென் சில உண்மைகளைத் தம் ஆராய்ச்சியால் அறிந்தார். நில உருண்டையின் வடமுனையில் இழுதிறன் உள்ளது என்பது நாம் அறிந்துள்ள உண்மை. ஆதலாற்றான் இழுதிறன் ஊசி எப்போதும் தென் வடலாகவே நிற்கிறது. ஆனால், இந்த ஊசி குறிக்கும் வடதிசையானது வடமுனை வான்மீன் உள்ள திசைக்குச் சற்று மேற்கிலோ அல்லது கிழக்கிலோ உள்ளது. இவ்வூசி, சில தருணங்களில் முன் காட்டிய திசையைக் குறிக்காமல் சிறிது மாறுபடுவதும் உண்டு. ஆதலால், இழுதிறமுள்ள இடம் வடமுனையில் இடம் மாறி வருகின்றது போலும் என அவர் அறிந்தார்.

6. இங்ஙனம் அமண்சென் தம் ஆராய்ச்சியை நடத்திக்-கொண்டு பல மாதங்கள் அத்தீவிலேயே தங்கியிருந்தார். அக்காலத்தில் அவர்கள் சுற்றுப்புற இடங்களுக்குச் சென்று, துருவக் கரடிகளையும், கலைமான்களையும் வேட்டையாடிக் கொண்டு வருவார்கள். ஒரு நாள் அவர்கள் எதிர்பாராமற்-சில மக்களைக் கண்டார்கள். அம்மக்களே அப்பனிப் பிர-தேசத்தில் வாழும் **எஸ்கிமோக்கள்.** அவர்கள் வாழ்க்கையைப் பற்றி நீ நன்கு அறிவாயன்றோ ?

7. கோடை காலம் தொடங்கியவுடனே, அமண்செனும் நண்பர்களும் மேலும் வடக்கு நோக்கிச் சென்றார்கள். செல்-லும்போது அவர்கள் திமிங்கில வேட்டையாடுபவரின் கலங்-களைக் கண்டார்கள். அப்போதுதான், வட அமெரிக்காவின் வடக்கில் உள்ள **அலாஸ்கா**வுக்கு வடக்கே தாங்கள் வந்திருந்-ததை அமண்சென் அறிந்து, ஆனந்தம் அடைந்தார். அவர் சென்ற வழியே அவர் கண்டறிய ஆவல் கொண்டிருந்த வட-மேற்கு வழியாய் அமைந்தது.

8. ஆசியாவுக்கு வடமேற்கு வழி கண்ட அமண்சென், அகமகிழ்ச்சியுற்றுத் தம் நாட்டுக்குத் திரும்பினார். நார்வே

நாட்டினர் அவர் அடைந்த வெற்றியைத் தம்முடையதாகவே கருதி மகிழ்வுற்றனர்.

9. சில மாதங்களுக்குப் பிறகு, அமண்சென் நில உருண்டையின் தென்முனையைச் சூழ்ந்துள்ள **அண்டார்ட்டிகாவை** ஆராய முற்பட்டார். அவர் 1910-ஆம் ஆண்டில் தென்முனை நோக்கிப் புறப்பட்டார். அப்போது **ஸ்காட்டு** என்னும் ஆங்கிலேயரும் அண்டார்ட்டிகாவை ஆராய முனைந்திருந்தார் என்பதை அறிந்த அமண்சென், அவருக்குத் தம் முயற்சியைப் பற்றி ஒரு கடிதம் எழுதிவிட்டுத் தம் பயணத்தை மேற்கொண்டார். 1911-ஆம் ஆண்டில் நில உருண்டையின் தென்முனையில் அடி வைக்கும் பேறு, அமண்செனுக்குக் கிட்டியது. அவருக்கு முன் செல்ல விரும்பிய ஸ்காட்டு, எதிர்பாராத இடையூறுகளால் அவ்வாறு செய்ய முடியவில்லை. அமண்சென் தாம் மேற்கொண்ட முயற்சியில் வெற்றிபெற்றுத் தாய் நாடு திரும்பியபோது, அவர் புகழ் உலக முழுவதும் பரவியது.

10. தாய் நாடு திரும்பிய அமண்சென், சின்னாட்களில் வானூர்தியிற்சென்று வட முனைப் பகுதிகளை ஆராய்ந்துவிட்டுத் திரும்பினார். ஆகவே, நிலவுருண்டையின் வட தென் முனைகளைக் கண்டதன்றி, ஆசியாவுக்கு வடமேற்கு வழியையும் கண்ட அமண்சென், உலக பெருமக்கள் வரலாற்றில் இடம் பெற்றுத் திகழ்கின்றார்.

பயிற்சி:

I. விடை எழுதுக:

அ. **அமண்சென் என்பவர் யார்? அவரது ஆவல் யாது?**

ஆ. **அவர் செய்த முதற்பிரயாணம் எது?**

இ. **தென் விக்டோரியாலந்தில் தம்முடைய மாலுமிகளுக்கு உண்டான கடல் நோயை அவர் எவ்வாறு நீக்கினார்?**

ஈ. **வடமுனை நோக்கிச் சென்றபோது அமண்செனுக்கு ஏற்பட்ட இன்னல்கள் யாவை?**

உ. அமண்சனும் அவர் நண்பர்களும் வில்லியம் அரசர் தீவில் என்ன ஆராய்ச்சி நடத்தினார்கள்?

ஊ. வடமுனையை ஆராயச் சென்ற அமண்சென், எம்மார்க்கத்தை, எப்படிக் கண்டறிந்தார்?

எ. அமண்சென் கண்டறிந்த பிற இடங்கள் யாவை?

II. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொன்றையும் பற்றிக் குறிப்பெழுதுக:

1. அமண்செனின் வடமுனை ஆராய்ச்சி
2. அவரது தென்முனை ஆராய்ச்சி
3. இழுதிறன் பற்றிய அவரது ஆராய்ச்சி

III. வாக்கியங்களில் அமைக்க:

அஞ்சா நெஞ்சம், உலையா ஊக்கம், ஆவல், மனநிலை, பனிப்படலம்.

IV. சொல்லியுள்ளபடி செய்க:

1. ரோவால்ட் அமண்சென் அவர்களுள் ஒருவர்.
அவர் நார்வே நாட்டினர்.
அவர் சிறந்த மாலுமி.
அவர் அஞ்சா நெஞ்சம் படைத்தவர்.
அவர் உலையா ஊக்கம் உள்ளவர்.

(இவற்றை ஒரே வாக்கியமாக எழுதுக.)

2. அவர் 'பெல்ஜிகல்' என்னும் கப்பலின் தலைவராக்கப்பட்டார். (செயப்பாட்டு வினையைச் செய்வினையாக மாற்றி வாக்கியத்தை அமைக்க.)

3. அவர் மனநிலை இழந்து தடுமாற்றமுற்றார். (தடித்த எழுத்தில் உள்ள தொடருக்குப் பதில் வேறு தொடர் எழுதுக.)

V. அகராதியைப் பார்த்துப் பொருள் எழுதுக:

உலையா, ஊக்கம், இடுக்கண், குறுநகை, கலம், பனிப்படலம், அருள், திணறு, ஆய்கூடம், இழுதிறன், உடுக்கள், வடமுனை, வடமீன்.

15. சண்டை நல்லதா, — — சமாதானம் நல்லதா ?

1. பண்டைக் காலத்தில் வட இந்தியாவிற் பல ஆரிய அரசுகள் தோன்றின என்பது வரலாற்று நூல் கூறும் உண்மை. அவற்றுள் குரு குலத்து ஆரியரால் நிறுவப்பெற்ற அரசு குரு நாடு என்னும் பெயர் பெற்றது. **அத்தினபுரத்தைத்** தலைநகராகக் கொண்டு குரு நாட்டை மாட்சியுற ஆட்சிபுரிந்த மன்னர்களுள் **திருதராட்டிரன், பாண்டு** என்பவர்கள் பிரசித்தி பெற்றவர்கள். அவர்களுள் முன்னவன் அண்ணன்; பின்னவன் தம்பி. முன்னவனுக்குத் **துரியோதனன்** முதலிய நூற்றுவர் மைந்தர் பிறந்தனர். அவர்கள் **கௌரவர்கள்** என்று வழங்கப் பெற்றார்கள். பாண்டுவுக்குத் **தருமன், பீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன்** என்னும் ஐவர் புதல்வர் தோன்றினர். அவர்கள் **பாண்டவர்** என்று வழங்கப்பட்டார்கள்.

2. அவர்கள் நூற்றைவர்க்கும் போர்க் கல்வியைக் கற்பித்து வந்தார், **துரோணசாரியார்** என்ற வில்லாசிரியர். துரியோதனனால் பெரிதும் விரும்பப் பெற்றவனான **கர்ணன்** என்பவனும் அவர்களுடன் இருந்து வித்தைப் பயின்று வந்தான்.

3. ஒரு நாள் அருச்சுனன் உள்ளத்தில் "சண்டை நல்லதா, சமாதானம் நல்லதா?" என்ற ஐயம் எழுந்தது. அவன் உடனே அருகில் இருந்த கர்ணனை நோக்கி, "கர்ண, சண்டை நல்லதா, சமாதானம் நல்லதா?" என்று கேட்டான். அது கேட்ட கர்ணன், அருச்சுனனிடம் பகை கொண்டிருந்தவனாதலால், அவனை இகழ்தற்கேற்ற வாய்ப்புத் தனக்குக் கிடைத்ததென மகிழ்ந்து, "அருச்சுன, சமாதானந்தான் நல்லது," என்று விடை கூறினான். அருச்சுனன், "காரணம் யாது?" என்று வினவினான். "காரணம் கூறுகிறேன்; கேள்:

குறிப்பு: இது திரு சி. சுப்பிரமணிய பாரதியாரின் கட்டுரை யொன்றைத் தழுவி எழுதப்பட்டது.

சண்டை நேர்ந்தால், நான் உன்னை நன்கு புடைப்பேன். அதனால் உனக்குத் துன்பம் நேரிடும். நானோ, உயிர்கள்-பால் அருள் மிக்கவன். ஆதலால், உன் துன்பத்தைக் கண்டு என் மனமும் துன்பப்படும்,'' என்று கூறினான் கர்ணன். அது கேட்டு சீற்றமடைந்த கிரீடி, "அடே கர்ணா, நம் இருவரைக் குறித்ததன்று நான் கேட்ட கேள்வி. பொதுவாக உலகத்துக்கு எது நல்லது என்று கேட்டேன்,'' என்றான். கர்ணன், "அருச்சுனா, எனக்கு உலக விவகாரங்களில் அத்-துணை ஆர்வம் இல்லை,'' என்று கூறிவிட்டு, அவனை விட்-டகன்றான்.

4. பிறகு அருச்சுனன், தன் ஐயத்தை நீக்கிக்கொள்ளக் கருதித் துரோணரிடம் சென்று, அவரை வணங்கித் தன் சந்தேகத்தைத் தெரிவித்தான். துரோணர், "சண்டைதான் மிகவும் நல்லது. ஏன் எனில், சண்டையிற் வெற்றி பெற்றால், பொன், பொருள், நாடு, புகழ் முதலிய அனைத்தும் கிடைக்-கும். சமாதானத்தில் இவையனைத்தும் கிடைப்பது சந்தே-கம்,'' என்று விடையிறுத்தார்.

5. ஆசிரியரின் கூற்று அருச்சுனனுக்குச் சரியென்று தோன்றவில்லை. ஆதலால், அவன் தன் பாட்டனாரான பீஷ்மரிடம் சென்று, தன் ஐயத்தை விளக்குமாறு கேட்டான். அது கேட்ட பீஷ்மர் சிறிது திகைத்தார். பிறகு தனஞ்சய-னைப் பார்த்து, "அருச்சுனா, சண்டையை மேற்கொண்டா-லும் சமாதானத்தை மேற்கொண்டாலும் தருமமே வெற்றி அடையும். மாந்தரனைவரும் ஆண்டவர் மக்கள். ஆண்ட-வரோ, அன்பு வடிவானவர். அவர் அருளை அடைவதற்கு அன்புடைமையே சிறந்த வழி; அன்புடைமைக்குச் சண்டை முரணானது; சமாதானமே அன்பின் அறிகுறி. ஆதலால, அருச்சுனா, சமாதானமே சாலச் சிறந்தது,'' என்று கூறி முடித்தார்.

6. சில நாட்களுக்குப் பிறகு, **வேத வியாசர்** என்ற முனிவர் அத்தினபுரத்திற்கு வந்தார். காண்டீபன் அவரை வணங்கி, "பெரியீர், சண்டை நல்லதா, சமாதானம் நல்லதா?''

என்று கேட்டான். "தருணத்துக்குத் தக்கபடி மேற்கொண்டால், இரண்டும் நல்லனவே," என்று வியாச முனிவர் பதிலளித்தார்.

7. பல ஆண்டுகட்குப் பின், பாண்டவர் பன்னிரண்டாண்டு காட்டில் தங்கியும் ஓராண்டு கரந்துறைந்தும் மீண்ட போது, அவர்கள் தங்கள் நாட்டைப் பெறுவதற்கான வழிகளை ஆராயக் கண்ணபிரானாரின் துணையை நாடினார்கள். அப்போது அருச்சுனன் அவரை நோக்கி, "ஐயனே, சண்டை நல்லதா, சமாதானம் நல்லதா?" என்று கேட்டான்.

8. உடனே கண்ணபிரானார், "அப்பா அருச்சுனா, காலமறிந்து மேற்கொள்ளப்படின், இரண்டும் நல்லனவே. ஆனால், இப்போதைக்குச் சமாதானமே நல்லது. ஆதலாலே தான் யான் சமாதானம் பேசுவதற்குத் துரியோதனன் பக்கல் போகிறேன்," என்று கூறி, அருச்சுனன் கொண்டிருந்த அரிய ஐயத்தை அகற்றினார்.

பயிற்சி :

I. விடை எழுதுக:

அ. கௌரவர் யாவர்? பாண்டவர் யாவர்?

ஆ. கர்ணன் யார்?

இ. அருச்சுனன் உள்ளத்தில் தோன்றிய ஐயம் யாது?

ஈ. அந்த ஐயத்துக்குக் கர்ணன் கூறிய விடை யாது?

உ. அருச்சுனன் சந்தேகத்துக்குத் துரோணர் கூறிய விடை யாது?

ஊ. பீஷ்மர் அருச்சுனனுக்குக் கூறியது யாது?

எ. வேத வியாசர் கூறியது யாது?

ஏ. அருச்சுனன் சந்தேகத்துக்குக் கண்ணபிரானார் கூறிய மறுமொழி யாது?

ஐ. 'சமாதானம்' என்னும் பொருள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

ஒ. 'சண்டை நல்லதா, சமாதானம் நல்லதா?' என்னும் வினவுக்கு உனது விடை யாது?

II. வாக்கியத்தில் அமைக்க:

நிறுவப் பெற்றது, உள்ளம், வாய்ப்பு, அருள், புடைத்-தான், முரணனது, சால.

III. எதிர்ப்பதங்கள் எழுதுக:

பண்டைக்காலம், முன்னவன், பகை, துன்பம், முரண், நல்லன, மேற்கொண்டால்.

IV. அகராதியைப் பார்த்துப் பொருள் எழுதுக:

வரலாற்று நூல், பிரசித்தி பெற்றவர், உள்ளம், இகழ்-வதற்கு, வாய்ப்பு, அருள், விடையிறுத்தார், கூற்று, முரண், மேற்கொண்டால், அகற்றினர்.

16. இளவரசர் துறவு

(நாடகக் காட்சி)

களம் :	வஞ்சிமாநகரத்தில் சேர மன்னன் கொலு-மண்டபம்
காலம் :	முற்பகல்
பாத்திரங்கள் :	இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், அவன் மூத்த மகன் செங்குட்டுவன், இளைய மைந்தர் இளங்கோ, மந்திரிகள், பிரதானிகள், சோதிடர்

[இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்னும் சேர மன்னன் சிங்காதனத்தில் அமர்ந்திருக்கிறான். அவன் வலப் பக்கம் செங்குட்டுவனும் இடப் பக்கம் இளங்கோவும் பீடங்களில் இருக்கின்றார்கள். மந்திரிகளும், பிரதானிகளும் தங்கள் பீடங்களில் இருக்கின்றார்கள்.]

இமயவரம்பன் : *அறிவு சான்ற அமைச்சர்களே, வெற்றி மிக்க வீரர்களே, சின்னாட்களாக எம் சிந்தையிற் சில எண்ணங்கள் தோன்றி எம்மை இன்புறச் செய்கின்றன. அவற்றைக் கூறப் பெரிதும் விழைகின்றோம்.*

அமைச்சர் : *அவை யாவையோ? வெளியிட்டால் யாங்களும் கேட்டு இன்புறுவோமன்றோ?*

இமயவரம்பன் : *அங்ஙனமே கூறுவோம் : ஆண்டவன் அருள் வலியாலும், அமைச்சரின் அறிவுத்திறனாலும், படைத்-தலைவரின் தோள் பலத்தாலும் யாம் அரியணையில் அமர்ந்த நாள் தொடங்கி இதுகாறும் எமக்கு வெற்றி-மேல் வெற்றி கிடைத்து வருகின்றன ; கடம்ப அரசர்-களைக் கண்ணிமைப் போதில் போரிற் புறங்கண்டோம் ; தமிழ் நாடு முழுவதும் அடிப்படுத்தி ஆட்சி பூண்டோம்; வடநாட்டின்கண்ணும் எமது புகழைப் பரப்பினோம் ;*

இமயத்தில் எமது விற்கொடியைப் பொறித்தோம்; போர்களில் வெற்றியையும், புகழின் எல்லையையும் கண்டு களித்தோம். இனி யாம் எய்தி மகிழத் தக்கது, இவ்வுலகத்தின்கண் யாதொன்றுமில்லை; ஆதலின், அந்தமில் இன்பத்தை அடைய முயல்வதே எமது குறிக்கோளாயிற்று. இதனை உங்கட்குக் கூறி, மேல் ஆகவேண்டுவதைப்பற்றி ஆலோசிப்பதே எமது கருத்து.

ஓர் அமைச்சர் : மன்னர் மன்னரே, நுமது கூற்றுச் சாலச் சிறந்ததே! அருள், வலி, ஆண்மை, கல்வி என்னுங் குண நலன்களோடு திகழும் நும் மூத்த மைந்தர் செங்குட்டுவர்க்கு இளவரசுப் பட்டம் ஈந்த நாள் முதல், பொன் மலர் நாற்றமும் பெற்றாற்போல, நமது நாடு எல்லாத் துறைகளிலும் மேன்மேலும் முன்னேறி வருகின்றது. அன்றியும், கல்வி, அறிவு, ஒழுக்கம் முதலியவைகளிற் சிறந்து விளங்கும் நும் இளைய மைந்தர் இளங்கோ, '**பெருநம்பி**' என்னும் பதவியை வகிக்கத் தொடங்கிய நாள் முதல் அவரே அமைச்சர் குழுவிற்குத் தலைமை தாங்கி அரசியற்காரியங்கள் அனைத்தையும் ஆழ்ந்த அனுபவமுள்ள எங்களைக் காட்டிலும் இங்கிதமாகக் கவனித்து வருகின்றார். ஆதலின், அரசர்க்கரசே, நம் நாட்டு அரசியலைப்பற்றி எட்டுணையும் உமக்குக் கவலை வேண்டுவதின்று. எனினும், அரசியல் தேரை மேலும் சில ஆண்டுகள் நீரே செலுத்துவதை நும்முடைய புதல்வர்களும், நாங்களும் விரும்புகிறோம்.

[வாயிற்காவலன் வந்து அரசனை வணங்குகிறான்.]

இமயவரம்பன் : காவலோய், ஏதேனும் விசேஷம் உண்டோ?

காவலன் : மன்னர்க்கு மன்னரே, வணக்கம்! சோழ நாட்டினின்றும் ஒரு சோதிடர் வந்துள்ளார்; தேவரீரைக் காண விரும்புகிறார்.

இமயவரம்பன் : நல்லது; வரட்டும்.

[காவலன் போகின்றான். சோதிடர் அரசன் முன் வருகின்றார்.]

சோதிடர் : திக்கெல்லாம் புகழும் சேர மகிபரே, நுமக்கு மங்களமுண்டாகட்டும்!

இமயவரம்பன் : ஐயா, வாரும்: (ஒரு பீடத்தைக் காட்டி) இதில் இரும். நீவிர் சோதிடம் வல்லவர் என்பதை வாயிற்காவலனால் அறிந்தோம். உண்மைதானே ?

சோதிடர் : சேரர் பெருமானே, ஆம். நான் ஒரு சோதிடனே ; கோட்சாரம் எதுவும் குறிக்காமலேயே, ஒருவருடைய உடல் அமைப்பைக்கண்டு அவருடைய எதிர்கால நிகழ்ச்சிகளைக் கூறவல்லேன்.

இமயவரம்பன் : அப்படியா! இது யாம் கேட்டறியாத விந்தை. நன்று! நன்று! நாம் இந்த அரச பாரத்தை இன்னும் எத்தனை நாள் சுமந்திருக்கவேண்டும் என்பதை உம்மால் கூறமுடியுமா ?

சோதிடர் :—வானவர் குலத்து மகிபரே, அங்ஙனமே கூறுகின்றேன். (சிறிது தாமதிக்கிறார்.)

இமயவரம்பன் : சோதிடரே, என்ன யோசிக்கின்றீர் ? உண்மையைக் கூறத் தயங்குவானேன் ? சாஸ்திர விஷயத்தில் எதற்கும் அஞ்சவேண்டுவதின்று. உண்மையை மறைக்காமல் வெளியிடும். மனக் கலக்கம் எட்டுணையும் வேண்டா.

சோதிடர் : மன்னர்பிரானாகிய உம்முடைய உறுப்பிலக்கணத்தை நுணுகி நோக்குங்கால், இறைவன் இன்னருளைப் பெறுதற்கு நீங்கள் நெடுங்காலம் காத்திருக்க வேண்டுவதில்லை.

இமயவரம்பன் : சோதிடரே, இதனைக் கூறுதற்கா இவ்வளவு அச்சம்! இச்செய்தியை யான் இன்புடன் வரவேற்கிறேன். நீர் வருமுன் இதுபற்றியே நாங்கள் பேசிக்கொண்டிருந்தோம். இஃது இருக்கட்டும். (மூத்த மைந்தனைச் சுட்டி) இதோ அமர்ந்திருக்கும் இவன் எம் மூத்த மைந்தன்.

செங்குட்டுவன் என்பது இவன் பெயர். (இளைய மைந்தரைச் சுட்டி) இதோ இருக்கும் இவன் எம் இரண்டாம் புதல்வன். இளங்கோ என்பது இவன் பெயர். இவர்களைப்பற்றி நீர் என்ன கூறுகின்றீர்?

சோதிடர் : (அவ்விருவரையும் மாறி மாறிப் பார்த்த பின்) சேர நாட்டதிபரே, இந்த இருவருள் அந்தமில் இன்பம் அளிக்கவல்ல அரசை அடையப் போகிறவர் மூத்தவரல்லர்; இளையவரே.

[மன்னன் வியப்படைகின்றான்; அவையிலுள்ள அனைவரும் ஆச்சரியமுறுகின்றனர். செங்குட்டுவன் முகத்திற்கோபக்குறி தோன்றுகிறது. மன்னனையும், சோதிடரையும், இளங்கோவையும் மாறி மாறிப் பார்க்கின்றான். இவற்றைக் கவனித்த இளங்கோ தமது பீடத்தினின்று எழுந்து நிற்கின்றார்.]

இளங்கோ : சோதிடரே, நீர் உமது கலையில் வல்லுநராய் இருக்கலாம். ஆயினும், காலத்தையும், நாட்டுப் பழக்க வழக்கங்களையும் துணைக்கொண்டு உண்மையை ஆராய்ந்து கூறவேண்டும். மூத்தவன் இருக்க இளையவன் அரியணையில் அமர்வது இந்நாட்டு வழக்கமன்று. முன்னோருடைய நெறியினின்று விலகுவது சேரநாட்டில் எஞ்ஞான்றுமில்லை. தருமத்துக்கு மிஞ்சிய சாஸ்திரம் ஏது? உமது சோதிடம் பொய்த்தது என்பதை அறிய நீர் பலநாள் காத்திருக்க வேண்டா. சில நிமிடங்களுக்குள் கண் கூடாகக் காண்பீர். உமது கூற்று என் தந்தையாருக்கு மனக் கலக்கத்தையும், என் தமையனுருக்குச் சினத்தையும், சபையார்க்கு அச்சத்தையும் விளைவித்துள்ளது. அவற்றை இதோ ஒருநொடியிற் போக்குவேன்! என் உறுதி மொழியை எல்லாருங் கேளுங்கள்; எல்லாம் வல்ல இறைவன்மீது ஆணை! தரும தேவதை இதற்குச் சாட்சி! என் தந்தையார் இதனைக்கேட்டு ஆறுதல் அடையட்டும்; என் தமையனுர் அகம் மகிழட்டும். அவையோர் கேட்டு என்னை ஆசீர்வதிக்கட்டும். நான் இன்றே-இப்பொழுதே - துறவு பூண்கின்றேன்! இது வரையில் இவ்வரண்மனை எனது இருப்பிடமாய் இருந்தது. இனிக்

குணவாயிலில் உள்ள [கோவிலே எனது இருப்பிடமா-யிருக்கும். இஃது உறுதி! முக்காலும் உறுதி! சோதி-

டரே, நீர் கூறியது உண்மை. இதுவரையில் யான் யுவ-ராஜனாய் இருந்தேன்; இனித் தவராஜனாவேன். உங்கள் அனைவர்க்கும் என் வணக்கம்! இதோ செல்கின்றேன்.
[சபையை விட்டு வெளியே போகின்றார்.]

[திரை]

பயிற்சி:

I. இக்காட்சியில் அடங்கிய கதையை உரை நடையில் எழுதுக.

II. இப்புத்தகத்தில் 13-ஆம் பாடத்தில் உள்ள கதையை நாடகக் காட்சியாக எழுதுக.

III. அகராதியைப் பார்த்துப் பொருள் எழுதுக:

சான்ற, விழைகின்றேன், அரியணை, புறங்கண்டோம், பொறித்தோம், அந்தமில் இன்பம், குறிக்கோள், பெரு-நம்பி, எட்டுணை, மங்களம், கோட்சாரம், மகிபர், உறுப்-பிலக்கணம், எஞ்ஞான்றும்.

17. தலையாலங்கானத்துப் போர்

1. தஞ்சை ஜில்லாவில் உள்ள **திருவாரூர்** என்னும் சிவ-தலத்துக்கு அண்மையில் மற்றொரு சிவதலம் இருக்கிறது. **தலை-யாலங்காடு** என்பது அதற்கு இக்காலத்தில் வழங்கும் பெயர். அஃது ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் **தலையா-லங்கானம்** என வழங்கப்பட்டு வந்தது. அங்கு **நெடுஞ்செழியன்** என்ற பாண்டிய மன்னன், சேர, சோழ மன்னர்களையும், அவர்களுக்குத் துணையாய் வந்த ஐவர் சிற்றரசரையும் போரில் வென்று புகழை நிறுவினன். அப்போர் பண்டைக் காலத்-தில் தமிழ் நாட்டில் நடைபெற்ற மிகப் பெரிய போர்களுள் ஒன்றாகக் கருதப்படுவது. அதன் வரலாற்றை அறிய நீ விரும்புகிறாய் அல்லவா?

2. நம் தமிழ் நாடு வடக்கில் **நெடியோன் குன்றம்** என வழங்கும் **திருப்பதி மலை**யையும், தெற்கில் **குமரி முனை**யையும், கிழக்கிலும் மேற்கிலும் கடல்களையும் எல்லைகளாகக் கொண்-டிருந்தது என்பதை நீ அறிவாய். இதனைப் பாரதியாரவர்கள்,

> **'நீலத்தி ரைக்கட லோரத்திலே — நின்று**
> **நித்தந் தவஞ்செய் குமரியெல்லை — வட**
> **மாலவன் குன்றம் இவற்றிடையே — புகழ்**
> **மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு,''**

என்று எழிலுறக் கூறியுள்ளார். இதன்கண் பண்டைக் காலத்-தில் மூன்று பேரரசுகளும், சில சிற்றரசுகளும் விளங்கின. பேரரசுகள் மூன்றும் சேர, சோழ, பாண்டியர் என்ற மும்முடி வேந்தர்களின் ஆட்சியிலிருந்தன. சிற்றரசுகளை ஆண்டவர்-களுள் சிலர், இப்பேரரசர்கட்கு அடங்கியும், மற்றையோர் சுதந்தரமாகவும் வாழ்ந்து வந்தனர். இம்மும்முடி வேந்தர் அடிக்கடி தம்முள் மாறுபட்டுப் போர் புரிந்த நிகழ்ச்சிகள் பல, சங்க இலக்கியங்களிலும், தமிழ் நாட்டு வரலாற்றிலும் இடம் பெற்றுள்ளன. தலையாலங்கானத்துப் போர் அவற்-றுள் ஒன்றாம்.

3. தம் குண நலன்களாலும், போர்த்திறத்தாலும் புகழைப் பரப்பிய பாண்டிய மன்னருள் **நெடுஞ்செழியன்** என்பான் ஒருவன். அவன் ஏறத்தாழ எண்ணூறு ஆண்டுகட்கு முன்னர் **மதுரையம்பதியைத்** தலைநகராய்க் கொண்டு பாண்டி நாட்டை ஆண்டு வந்தான். இளைஞனாயிருந்தபோதே அரியணையிலமரும் வாய்ப்பு அவனுக்குக் கிட்டியது. ஆயினும், அவ்விளம்பருவத்திலேயே அளப்பரிய ஆட்சித் திறம் படைத்திருந்த அவன் சீரிய முறையில் செங்கோல் நடத்தி வந்தான். குடிகளின் நன்மையும் முன்னேற்றமுமே அவனுடைய குறிக்கோள். பயிர்த்தொழிலும், கைத்தொழிலும், வாணிகமும் அவன் ஆட்சியில் நலமுற்றுத் திகழ்ந்தன. அன்றியும், செழியர்பிரான் செந்தமிழ்ப் பாக்கள் இயற்றவல்ல பெரும்புலவனாய் விளங்கினான். தமிழ்ப் புலவர்களையும், கூத்தர், பாணர், விறலியர் முதலிய பரிசிலர்களையும் இன்முகத்துடன் வரவேற்று, அவர்கள் அகமகிழப் பரிசில்கள் வழங்கும் பான்மையும் அவனிடமிருந்தது. இக்காரணங்களால் அவனுடைய புகழ் தமிழ் நாடெங்கும் பரவியது. அது கண்டு அழுக்காறுற்ற மற்றப் பேரரசர்களும் சிற்றரசர்களும் அவனுடன் பொருது, அவனைப் புறங்காட்டச் செய்து, அவனது புகழை மங்கச் செய்ய விரும்பினார்கள்.

4. இத்தகைய புன்தொழில் புரிய முற்பட்டவன் **யானைக் கட் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை** என்பான். அவன் சேர நாட்டின் ஒரு பகுதியை ஆட்சி புரிந்து வந்தான். அவன் பெரும்படை ஒன்றைத் திரட்டிச் சென்று பாண்டி நாட்டைத் தாக்கினான். ஆயினும், மனவலியும், தோள்வலியும் மிக்க பாண்டிய மன்னன், அவனை எளிதிற் புறங்கண்டான். அதனால், அவன் புகழ் மேலும் ஓங்கியது. அது, சேர சோழர்களின் பொறாமைக் கனலில் நெய் சொரிந்ததுபோல ஆயிற்று.

5. சோழனும், சேரனும் நெடுஞ்செழியனை எவ்வாற்றானும் அழிக்கவேண்டும் என்னும் முடிவுக்கு வந்தனர்; தத்தம் படைகளைத் திரட்டினர். அவர்களுக்கு உதவியாக **எழினி, எருமையூரன், இளங்கோவேண்மான், திதியன், பொருநன்** ஆகிய

ஐவர் சிற்றரசரும் தத்தம் படையோடு கிளம்பினர். எழுவர் படைகளும் ஒன்று திரண்டு பாண்டி நாட்டை நோக்கிச் சென்றன. பெருங்கடல் பொங்கி எழுந்ததுபோல முழங்கிக்கொண்டு சென்ற அக்கூட்டுப் படையில் இடம்பெற்றிருந்த எண்ணற்ற தேர்களையும், யானைகளையும், குதிரைகளையும், கணக்கற்ற காலாட்களையுங் கண்டார் அனைவரும் அச்சமுற்றனர். 'இத்துணைப் பெரும்படையை எங்ஙனம் எதிர்த்து நிற்பான் நெடுஞ்செழியன்!' என்றனர் பலர். 'அங்ஙனம் கூறுவது கூடாது. பாண்டியன் படைப் பலம் மிக்கவன்; இளைஞனயினும், ஏறு போலப் போர் புரிய வல்லவன்; இதற்குமுன் எத்தனையோ போர்களில் அவன் ஆற்றலை நாம் கண்டுள்ளோம். இப்போரிலும் அவன் வெற்றி பெற்ருல் அதில் வியப்பொன்றுமில்லை,' என்றனர் சிலர்.

6. இங்ஙனம் இருவர் பேரரசரும் ஐவர் சிற்றரசரும் தன்மீது போருக்கெழுந்த செய்தியை ஒற்றர் வாயிலாயறிந்த நெடுஞ்செழியனுக்கு சினம் மூண்டது. அவன் தன் படைத் தலைவரை விளித்து, "நம்முடைய நால்வகைப் படைகளை இன்றே திரட்டுங்கள். பகைவர் எம்மைப் பால்மணம் மாருப் பாலன் என்றும், எமக்குப் போர்ப் பயிற்சி சிறிதும் இல்லையென்றும், தங்கள் பெரும்படையினை இமைப்போதுகூட எதிர்த்து நிற்கும் ஆற்றல் எம்படைக்கு இல்லையென்றும், பலவாருக இகழ்ந்து கூறியதாக நம் ஒற்றர் மூலம் அறிந்தோம். பால் மணம் மாருப் பாலன் பாண்டியன் நெடுஞ்செழியனின் படைப் பயிற்சியை அம்முது பெருவீரர்கள் கண்டு களிக்கட்டும்! எம்மை வலுவில் வம்புக்கிழுத்துப் போர்புரிய வரும் அப்பகைவர்களை யாம் தோல்வியுறச் செய்யாவிடில் எம்மைக் 'குடிகளை வருத்திய கொடுங்கோல் மன்னன்' என்று உலகம் இகழட்டும்! **மாங்குடி மருதனர்** போன்ற பெரும்புலவர்கள் எம்மைப் பாடாமற் போகட்டும்!" என்று வஞ்சினங் கூறினன்.

7. அரசனது ஆணைப்படி அன்றே படை திரட்டப்பட்டது. மறுநாட் காலையில் பாண்டி நாட்டுச் சேனை மதுரையம்பதிக்குப் புறத்தே நின்று பகைவர் சேனைக்கு நல்வரவு

கூறியது. இரு பெரும்படைகளும் கடலோடு கடல் மோது-வது போலக் கடும்போர் புரிந்தன. தேரைத் தேர் கிட்டியது. யானையோடு யானை முட்டியது. குதிரையைக் குதிரை தாக்கி-யது. வீரர் வீரரை எதிர்த்தனர். இதனால் எழுந்த தூசுப்-படலம் வானளாவி மேகமெனத் திகழ்ந்தது. இரு படைகளி-லும் முரசங்கள் ஆர்ப்பரித்தன. சங்க நாதம் எழுந்தது. மேகங்கள் முழங்குவது போலப் பேரொலி பிறந்தது; வாளி-யோடு வாளியும், ஈட்டியோடு ஈட்டியும், வாளோடு வாளும் தாக்கியும், தடுத்தும், ஈர்த்தும், கோர்த்தும் நின்ற நிலை, மேக முழக்கத்தோடு மின்னலும் மின்னுவதுபோலத் தோன்றியது.

8. பாண்டி நாட்டுச் சேனையின் பல முனைகளிலும் நெடுஞ்செழியன் தோன்றித் தன் வீரர்களை ஊக்கிக்கொண்டே இருந்தமையால், அவ்வீரர்கள் சிறிதும் சோர்வின்றிப் போர் புரிந்தார்கள். போர் மேலும் மேலும் கடுமையுற்றபோது, எழுவர் படை சோர்வடையத் தொடங்கியதுமன்றி, வீரர் தொகையும் சுருங்கத் தொடங்கியது. அதனைக் கண்ணுற்ற பாண்டி நாட்டு வீரர்கள் வெற்றியின் வாயிலைக் கிட்டிவிட்-டதை உணர்ந்தார்கள்; மேலும் உக்கிரமாகப் போர் புரிந்-தார்கள். அவர்கள் தாக்குதலை எதிர்த்து நிற்க மாட்டாமல், எழுவர் படையும் எடுத்தன ஓட்டம்! ஆனால், செழியர்பிரான் அவர்களை விட்டானில்லை. அவர்களைத் துரத்திச் சென்று **தலையாலங்கான**த்தில் முற்றிலும் முறியடித்து, வெற்றி பூண்-டான். அன்று முதல் அவனுக்குத் **தலையாலங்கானத்துச் செரு-வென்ற நெடுஞ்செழியன்** என்னும் விருதுப் பெயர் வழங்குவ-தாயிற்று. அழுக்காற்றால் அவனை எதிர்த்த அரசர் எழுவரும் அவமானமுற்று அகன்றனர்.

பயிற்சி :

I. விடை எழுதுக :

அ. தலையாலங்கானம் எங்குள்ளது? அது எதனாற் பிரசித்தி பெற்றது?

ஆ. நெடுஞ்செழியன் புகழ் தமிழ் நாடெங்கும் பரவக் காரணம் யாது?

இ. பாண்டியன்மீது சேரனும் சோழனும் கொண்டிருந்த பொறாமை அதிகரிக்கக் காரணம் யாது?

ஈ. தலையாலங்கானத்திற் போர் புரிந்தவர் யாவர்? அப்போரின் முடிவு யாது?

II. சொல்லியுள்ளபடி செய்க:

(கோடிட்ட இடங்களை அடுக்குச் சொற்களால் நிரப்புக.)

1. தேர்கள்——வென்று சென்றன.

2. குதிரைகள்——வென்று ஓடின.

3. வாள்கள்——வென்று மின்னின.

(வாக்கியத்தைச் செயப்பாட்டு வினை அமைத்து எழுதுக.)

4. நெடுஞ்செழியன் பாண்டிநாட்டை ஆண்டுவந்தான்.

(இத்தொடர்களைப் பிரித்தெழுதுக.)

5. எழிலுற, பேரரசு, நலமுற்று, நாடெங்கும், சிற்றரசர்.

III. வாக்கியங்களில் அமைக்க:

மாறுபட்டு, நிகழ்ச்சி, சிறிய முறை, திகழ்ந்தது, இன்முகம், புறங்கண்டான், ஆற்றல்.

IV. அகராதியைப் பார்த்துப் பொருள் எழுதுக:

அண்மை, நிறுவினன், எழிலுற, மாறுபட்டு, சிறிய, அழுக்காறுற்ற, பொருது, புன்தொழில், ஏறு, ஒற்றர், வஞ்சினம்.

18. நிதி நிலையங்கள்

1. '**பொருளிலார்க்கு இன்பமில்லை**,' என்பது நாம் அறிந்த உண்மை. ஆதலால், பொருள் ஈட்டும் முயற்சியை மேற்கொள்ளாதவர் எவருமிலர். அம்முயற்சியில் வெற்றி பெறுதவரும் இலர்; ஆனால், தாம் ஈட்டும் பொருள் குடும்பச் செலவுக்கே போதாமல் துன்புறுவர் பலர். குடும்பத்துக்குப் போதுமான பொருள் ஈட்டுபவர் சிலர். தம் தேவைக்கு அதிகமாக ஈட்டுபவர் வெகு சிலரே. இவர்களே பொருளைச் சேமித்து வைக்கும் வாய்ப்புள்ளவர். தாம் சேமிக்கும் பொருளை வீட்டில் வைத்து, அதற்குக் காவல் புரிவது துன்பமேயன்றி நன்மை பயவாது. '**புண்ணிய வசத்தினல் செல்வமது வரவேண்டும்**,' என்னும் முன்னோர் வாக்கிற்கிணங்கச் சிலர் முற்பிறப்பின் புண்ணியத்தால் தம் மூதாதையர்மூலம் ஏராளமான பொருளைப் பெறுவதும் உண்டு. அவர்கள் அப்பொருளை எங்கு வைத்து காப்பது? அன்றியும், அப்பொருள் வீட்டில் இருந்தால், அதனால் வருமானமேதும் வாராதன்றோ? வருமானத்தைக் கருதி வட்டிக்குப் பணம் கொடுத்தால், சில சமயங்களில் முதலுக்கே மோசம் ஏற்படுவதும் உண்டு. ஆனால், பணக்காரர்கள் அதிக வட்டிக்கு ஆசைப்பட்டு மோசம் போகாமல், தங்கள் பணத்தைக் குறைந்த வட்டிக்கு வாய்மையும், நேர்மையும் பொறுப்பும், செல்வமும் படைத்த சிலரால் நிறுவப்பட்டிருக்கும் பாதுகாப்பான இடத்தில் வைப்பு வைக்கின்றார்கள். இங்ஙனம் பல செல்வந்தர்கள் பாதுகாப்பைக் கருதிக் குறைந்த வட்டிக்குக் கொடுக்கும் பணத்தை, அதனை ஏற்றுக்கொள்பவர், தேவைப்படுபவர்களுக்குத் தக்க பொறுப்பின்மீது கடனாகக் கொடுப்பர். இங்ஙனம் குறைந்த வட்டிக்குப் பணத்தைப் பெற்று, அதைவிடச் சிறிது அதிக வட்டிக்குப் பணத்தைக் கொடுக்கும் நிலையங்களே **நிதி நிலையங்களாம்**. இவை ஆங்கிலத்தில் **பாங்குகள்** எனப்படும்.

2. இத்தகைய நிதி நிலையங்கள் எங்ஙனம் நடைபெறுகின்றன என்பதைப்பற்றிக் கவனிப்போம்: வாய்மையும்,

நேர்மையும், பொறுப்பும் வாய்ந்த செல்வந்தர் சிலர் தமது முதற்பணத்தோடு, பாதுகாப்புக்காகப் பணக்காரர்கள் வட்டிக்குத் தரும் பணத்தையும் சேர்த்து, மூல தனமாக வைத்து, நிதி நிலையங்களை நிறுவுகின்றார்கள் என்றோம். இவர்களே, அவற்றின் **நிர்வாகிகள்**[1] ஆவார்கள். ஆனால், இவர்கள் அனைவரும் இருந்து நிதி நிலையத்தை நடத்துவதில்லை. தங்களுள் மிக்க நேர்மை வாய்ந்த ஒருவரை, நிர்வாகப்பொறுப்பை ஏற்று நிதி நிலையத்தை நடத்த ஏற்படுத்துவர். அவர் **நடைமுறை நிர்வாகி**[2] அல்லது **மானேஜிங் டைரெக்டர்** என்று வழங்கப்படுபவர். அவருக்குக் கீழ்ப் பல அலுவலாளர் இருப்பர்.

3. நிதி நிலையங்களிற் பலவகை உண்டு. **வாணிகத்துறை நிதி நிலையங்கள்**[3], **கூட்டுறவு நிதி நிலையங்கள்**[4], **நாணயமாற்று நிதி நிலையங்கள்**[5] என்பன அவற்றுள் சில. இவற்றுள் நம் நாட்டில் அதிகமாக உள்ளவை வாணிகத்துறை நிதி நிலையங்களே. அவைகளைப்பற்றி மட்டும் படிப்போம்: அவை நம்மவர் நடத்தும் அயல் நாட்டு வாணிகத்துக்கு எவ்விதம் உதவிபுரிகின்றன என்பதை ஓர் உதாரணத்தால் அறியலாம். ஒரு வணிகர் அயல் நாட்டிலிருந்து, ஒரு மோட்டார் ஏழாயிர ரூபாய் வீதம், பத்து மோட்டார் வருவிக்கிறார். அவற்றிற்கு முன் பணமாகத் தம்மிடமிருந்த இருபதாயிரத்தைச் செலுத்திவிடுகிறார். எஞ்சிய ஐம்பதாயிரத்தைத் தாம் கணக்கு வைத்திருக்கும் நிதி நிலையம் செலுத்துமென்று அறிவிக்கிறார். மோட்டார்கள் வந்து சேர்ந்த உடனே அவர் கணக்கு வைத்திருக்கும் நிதி நிலையம் பணத்தைச் செலுத்திவிட்டு, மோட்டார்களை இறக்கிக்கொள்ளும். அவைகளை வருவித்தவர், நிதி நிலையத்தோடு தாம் செய்துகொண்டுள்ள ஏற்பாட்டின்படி, ஒரு குறித்த கால தவணைக்குள் பணத்தைச் செலுத்திவிடுவார். இம்முறையிலே தான் நிதி நிலையங்கள் அயல் நாட்டு வாணிகத்துக்கு உதவிபுரிகின்றன. அன்றியும், வாணிகத்துறை நிதிநிலையங்கள், வீடுகள், நிலங்கள், பொன்னணிகள் முதலிய தக்க பொறுப்புக்களின்மீது குறைந்த வட்டிக்குக் கடன் கொடுப்பதும் உண்டு.

---

1. Directors 2. Managing Director 3. Commercial Banks 4. Co-operative Banks 5. Exchange Banks

4. இனி, நிதி நிலையங்களில் பொருள் வைக்கும் முறையைப்பற்றியும், வாங்கும் முறையைப்பற்றியும் கவனிப்-



போம்: பொதுவாகப் **பொருள் வைப்பு**[1] மூன்று வகைப்படும். அவை **நிரந்தர வைப்பு**[2], **நடப்பு வைப்பு**[3], **சேம வைப்பு**[4] என்பன. ஒருவர் தம் பொருளை ஒரு குறித்த கால அளவுக்குள் திருப்பி வாங்காமல் வைப்பது நிரந்தர வைப்பாகும். இந்தத் தொகைக்குச் சிறிது அதிக வட்டி கிடைக்கும். நடப்பு வைப்பு என்பதும், ஒருவர் தம்மிடமுள்ள பணத்தை வைப்பாக்கித் தமக்கு வேண்டியபோதெல்லாம் அதினின்றும் பொருளைத் **திருப்பிப் பெறல்**[5], பொருள் கிடைத்தபோதெல்லாம் மீண்டும் மீண்டும் வைப்பாக்கல் ஆகிய முறைகளை உடையது. சேம வைப்பென்பது, பெரும்பணக்காரர் அல்லாத சொற்ப வருவாய் உள்ளவர்கள் மிச்சப்படுத்தி வைப்பாக்குவதாகும்.

5. இனி நிதி நிலையங்களில் தமது பொருளை வைப்புச் செய்ய விரும்புபவரும், வைப்பினின்று பொருளைத் திருப்பிப் பெறுபவரும் மேற்கொள்ள வேண்டிய விதிகளைப்பற்றிக்

1. Deposit 2. Fixed Deposit 3. Current Deposit
4. Savings Deposit 5. Withdrawal

கவனிப்போம்: நிரந்தர வைப்பாகப் பணம் வைக்க விரும்பு-பவர், நிதி நிலயத்துக்குச் சென்று, விஷயத்தைக் கூறினால், அவரிடம் ஒரு **வைப்பு நமூனு**[1] கொடுக்கப்படும். அதிற்கோரப்-பட்டுள்ள விவரங்களைப் பூர்த்தி செய்து, அதையும் வைப்புக்-குரிய தொகையையும் கொடுத்தால், நிதி நிலயத்தார் அவற்றைப் பெற்றுக்கொண்டு, பெற்றுக்கொண்ட தொகை-யையும், அதற்கு வட்டி விகிதமும், அதைத் திரும்பிப் பெற வேண்டிய காலமும், வைப்பு வைத்தவர் பெயரும் குறிக்கப்-பட்ட தாளொன்றைத் தருவர். அதுவே வைப்பு வைக்கப்-பெற்ற பொருளுக்குப் பொறுப்பு. ஆதலால், அதை சாக்-கிரதையாக வைத்துக்கொள்ள வேண்டும்.

6. நடப்பு வைப்புக்கு மேற்கொள்ள வேண்டிய முறை வேறு. வைப்பு வைக்க விரும்புபவர் நிதி நிலயம் சென்று தம் விருப்பத்தைத் தெரிவித்தால், அவர்களுக்கு விண்ணப்பத்-தாள் ஒன்று தரப்படும். அதில் வேண்டப் பெறும் விவரங்-களைப் பூர்த்தி செய்து, மாதிரிக் கையெழுத்துக்கள் மூன்றிட்டு, அத்தாளோடு வைப்பு வைக்க விரும்பும் தொகையைச் செலுத்தவேண்டும். அவற்றைப் பெற்றுக்கொண்டு நிதி நிலயத்தார் ஒரு **பாஸ் புக்**[2]கையும், ஒரு **செக் புக்**[3]கையும் தரு-வார்கள். பாஸ் புக்கில் வைப்பு வைத்தவர் பெயர், விலாசம், வைக்கப்பட்ட தொகை முதலிய விவரங்கள் குறிக்கப்பட்-டிருக்கும். செக் புக்கு எதற்கு உபயோகம்? ஒருவர் தம்-முடைய வைப்பினின்று பணம் வாபஸ் பெறவேண்டுமானால், செக்குப் புத்தகத்தில் ஒரு தாளில் தேதி, தம் பெயர், வேண்டும் தொகை ஆகியவற்றைக் குறித்துக் கையொப்பமிட்டு, நடப்பு வைப்புக் கணக்கரிடம் கொடுக்கவேண்டும். அவர் அதைப் பெற்றுக்கொண்டு ஏதேனும் ஓர் எண் குறித்த ஒரு பித்தளைப் பில்லையைத் தருவார். அதை வைத்துக்கொண்டு சிறிது நேரம் காத்திருந்தால், பொருளைத் திருப்பித்தரும் கணக்கர் ஒவ்வோர் எண்ணைக் கூறிக் கூப்பிடுவார். தமது எண் குறிப்பிடப்படும் போது, பில்லையைக் கொடுத்தால், பொருள் தரப்படும். ஒருவர் நடப்பு வைப்பிலிருந்து யாருக்காவது பணம் தர

1. Remittance Chalan 2. Pass Book 3. Cheque Book

வேண்டுமானால், செக்குத் தாளில் அவர் பெயரையும், அவருக்குத் தரவேண்டிய தொகையையும் குறித்துத் தம் கையொப்பமிட்டுக் கொடுத்தால், பணம் பெறவேண்டுபவர் அதை நிதி நிலையத்திற் கொடுத்துப் பணத்தைப் பெற்றுக் கொள்வார். சேம வைப்பினின்று பணம் திருப்பிப்பெறும் முறையும் இதுவே. ஆனால், அங்குச் செக்கு இல்லை. '**வாபஸ் நமூனு**'[1]-வில் தேதியும், தொகையும் எழுதிக் கையொப்பமிட்டுத் தர வேண்டும். இம்முறையில் பொருளை வைப்பு வைத்தவர் மட்டுமே பெற முடியும். நிதி நிலையங்களின் மற்றுமுள்ள நடைமுறைகளைப்பற்றி நீங்கள் மேல் வகுப்புக்களில் அறிந்து கொள்ளலாம்.

பயற்சி :

I. **விடை எழுதுக :**

அ. நிதி நிலையம் என்பது யாது ?

ஆ. நிதி நிலையத்தின் தலைமை அதிகாரி யார் ? அவர் யாரால் ஏற்படுத்தப்படுவார் ?

இ. நிதி நிலையங்கள் எத்தனை வகைப்படும் ?

ஈ. வாணிகத்துறை நிதி நிலையங்கள் எவ்வாறு நடைபெறுகின்றன ?

உ. நிதி நிலையங்களில் பொருள் வைப்பு முறை எத்தனை வகைப்படும் ? ஒவ்வொன்றையும் விவரித்தெழுதுக.

ஊ. நடப்பு வைப்புக்கு மேற்கொள்ள வேண்டிய முறை யாது ?

II. உன் வகுப்பில் சேமிப்பு நிதி நிலையம் இருக்கிறதா ? அது எவ்வாறு நடைபெறுகிறது ? ஏற்கெனவே நிதி நிலையம் இல்லையெனில், ஒன்றைத் தொடங்குக.

---

1. Withdrawal Form

செய்யுட்பகுதி

I. கடவுள் வணக்கம்

வழுங்குகின் றுய்க்குன் அருளா ரமுதத்தை
வாரிக்கொண்டு
விழுங்குகின் றேன்விக்கி னேன்வினை யேனென்
விதியின்மையால்
தழுங்கருந் தேனன்ன தண்ணீர் பருகத்தந்து
உய்யக்கொள்ளாய்
அழுங்குகின் றேனுடை யாயடி யேனுன்
அடைக்கலமே. 1

—மாணிக்கவாசகர்

அன்பே தகளியா, ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா,—நன்புருகி
ஞானச் சுடர்விளக்(கு) ஏற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்! 2

—பூதத்தாழ்வார்

என்பே விறகா யிறைச்சி யறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி யகங்குழை வார்க்கன்றி
என்பொன் மணியினை யெய்தவொண் ணாதே. 3

—திருமூலர்

II. நீதி:

1. சதகச் செய்யுள்

உடன்பிறந்தார் ஒற்றுமை

கூடப் பிறந்தவர்க் கெய்துயர் தமதுதுயர்
கொள்சுகம் தம்சுகமெனக்
கொண்டுதாம் தேடுபொருள் அவர்தேடு பொருளவர்
[கொள்
கோதில்புகழ் தம்புகழெனத்

தேடுற்ற அவர்நிந்தை தம்நிந்தை தம்தவம்
தீதிலவர் தவமாமெனச்
சீவனென் றுடல்வே றிவர்க்கென்ன ஐந்தலைச்
சீறரவ மணிவாய்தொறும்

கூடுற்ற இறையெடுத் தோருடல் நிறைத்திடும்
கொள்கைபோல் பிரிவின்றியே
கூடிவாழ் பவர்தம்மை யேசகோ தரரெனக்
கூறுவது வேதருமமாம்

ஆடிச் சிவந்தசெந் தாமரைப் பாதனே!
அண்ணலெமத ருமைமதவேள்
அனுதினமும் மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளி சுரதேவனே! 1

அறப்பளீசுர சதகம்] [அம்பலவாணக் கவிராயர்

செல்வச் சிறப்பு

பொருளுள்ள பேர்களுக் கருளுண்டு ; புகழுண்டு ;
புண்யவச மிக்கவுண்டு ;
பூதலத் தவரெலாம் கண்டவுட னேதொழுது
பூபதிகு பேரனென்பார் ;

திருகொன் றிலாதமதி யுண்டு ;திற னுண்டு ; மெய்த்
தேசிகர்தம் அருளுமுண்டு ;
திங்கியற் றினுநன்மை யென்பார்கள் ; பெருமையும்,
திரமொரு வீரமுண்டாம் ;

அருளுண்டு ; பந்துஜன வுறவுண்டு ; நண்பினர்கள்
ஆனர்க ளுண்டு ; நிதமும்
அவர்முகந் தன்னிலழ குண்டு ; கலை யுண்டு ; நல்
லானந்த பூர்த்தியுண்டு ;

கருணைசெய் தன்பர்கட் கழியாத நிதியுதவு
கற்பக விராசமேவுங்
கங்கைபுனை யீசனே ! மங்கைமகிழ் நேசனே !
கயிலையங் கிரிவாசனே ! 2

கயிலாசநாதர் சதகம்] **[சிதம்பரம் பிள்ளை**

சிறுமையாற்பெருமை

சேற்றிற் பிறந்திடுங் கமலமலர் கடவுளது
திருமுடியின் மேலிருக்கும்;
திகழ்ச்சிப்பி யுடலிற் சனித்தமுத் தரசரது
தேகத்தின் மேலிருக்கும்;

போற்றியிடு பூச்சியின் வாயினால் பட்டென்று
பூசைக்கு நேசமாகும்;
புகலரிய வண்டெச்சி லானதேன் தேவர்கொள்
புனிதஅபி டேகமாகும்;

சாற்றிய புலாலொடு பிறந்தகோ ரோசனை
சவாதுபுழு கனைவர்க்குமாம்;
சாதியி னத்திற் பிறக்கினும் கற்றோர்கள்
சபையின்மேல் வட்டமன்றோ?

மாற்றிச் சுரத்தினை விபூதியா லுடல்குளிர
வைத்தமெய்ஞ் ஞானமுதலே!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேசனே! 3

குமரேச சதகம்] [குருபாத தாசர்

சகோதரர் ஒருமை

தனதுபட் டந்தனைத் தம்பியர்க் கீயெனத்
 தந்துமகி ழுந்தமையனும் ;
தமையனுர் வருமளவு மாவிரதமாகவே
 தபசுபுரி யுந்தம்பியும் ;

கனசுவைப் பாலீந்த தாய்தனைப்போலவே
 கருணைசெய் திடுமதனியும் ;
காணுமுன் றந்தைபோற் றிருவடிகள் பணியுங்
 கனிட்டனுடை மனையாட்டியும் ;

தினந்தினம் பரிவாகி அம்மையே யென்றுபேர்
 செப்புங் கொழுந்தனும்
சேர்ந்துவாழ் கின்றபேர் திரேதா யுகந்தனிற்
 தசரதகு மாரர்கண்டாய் !

வனசமலர் கமழ்கின்ற வாவிசூழ் களமூரின்
 மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே !
 வரதவேங் கட்ராயனே ! 4

தருமம் தலை காக்கும்

அருமைசெறி பாண்டவர்கள் பங்காளி
செய்கொடுமை யாற்கா டாண்டும்,
உரிமையுடன் தருமர்செய்த நன்றியினால்
திரும்பவும்வந் துலகை ஆண்டார் ;
பருவரைவில் லாவளைத்த செயங்கொண்டா
ரே ! எவரும் பண்பாய்ச் செய்த
தருமமே தலைகாக்கும் ; அதர்மம்அழித்
திடுமெனவும் சாற்று வாரே. 5

உழவர் சிறப்பு

உழுதிளையான் குடிமாறர் முளைவாரி
அனம்அன்பர்க் குதவிப் பாரில்
வழுவாத கீர்த்தியுடன் ஒருநாளும்
கேடில்லா வாழ்வு பெற்றார் ;
மழுவேந்துங் கரதலத்தார் செயங்கொண்டார்
வளநாட்டில் மறைகள் ஓதித்
தொழுவார்எல் லாம்உழுவார் தலைக்கடையில்
என்றுலகம் சொல்லு மாதோ. 6

தேவர்க்கோப்பாவார்

முன்னொருசோ ழன்புதல்வன் தேர்க்காலில்
ஆன்கன்று முடியக் கண்டே,
பின்னதற்கீ டாய்த்தனது பிள்ளையைத்தேர்க்
காலில்இட்டுப் பெருமை சேர்ந்தான் ;
தென்னேம நகரினில்வாழ் சௌந்தரநா
யகிமகிழ்ந்த செயங்கொண் டாரே !
தன்னுயிர்போல் மன்னுயிரை எண்ணுவர்தே
வர்முனிவர் தமக்கொப் பாரே. 7

2. இன்னா நாற்பது

கொடுங்கோல் மறமன்னர் கீழ்வாழ்த லின்னா ;
நெடுநீர் புணையின்றி நீந்துத லின்னா ;
கடுமொழி யாளர் தொடர்பின்னா ; இன்னா
தடுமாறி வாழ்த லுயிர்க்கு. 1

எருதி லுழவர்க்குப் போகிர மின்னா ;
கருவிகள் மாறிப் புறங்கொடுத்த லின்னா ;
திருவுடை யாரைச் செறலின்னா ; இன்னா
பெருவலியார்க் கின்னா செயல். 2

ஆற்ற லிலாதான் பிடித்த படையின்னா ;
நாற்ற மிலாத மலரி னழகின்னா ;
தேற்ற மிலாதான் துணிவின்னா ; ஆங்கின்னா
மாற்ற மறியா னுரை. 3

உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்பின்னா ;
நண்ணாப் பகைவர் புணர்ச்சி நனியின்னா ;
கண்ணி லொருவன் வனப்பின்னா ; ஆங்கின்னா
எண்ணிலான் செய்யுங் கணக்கு. 4

பெரியாரோ டியாத்த தொடர்விடுத லின்னா ;
' அரியவை செய்தும் ' எனவுரைத்த லின்னா ;
பரியார்க்குத் தாமுற்ற கூற்றின்னா ; இன்னா
பெரியார்க்குத் தீய செயல். 5

—கபிலர்

3. இனியவை நாற்பது

கொல்லாமை முன்இனிது ; கோல்கோடி மாராயம்
செய்யாமை முன்இனிது ; செங்கோல னுகுதல்
எய்துந் திறத்தால் இனிதென்ப ; யார்மாட்டும்
பொல்லாங் குரையாமை நன்கு. 1

கற்ருர்முன் கல்வி யுரைத்தல் மிகவினிதே ;
மிக்காரைச் சேர்தல் மிகமாண முன்னினிதே ;
எட்டுணை யானு மிரவாது தானீதல்
எத்துணையு மாற்ற வினிது. 2

மன்றின் முதுமக்கள் வாழும் பதியினிதே ;
தந்திரத்தின் வாழுந் தவசிகள் மாண்பினிதே ;
எஞ்சா விழுச்சி ரிருமுது மக்களைக்
கண்டெழுதல் காலை யினிது. 3

ஆற்றுந் துணையா லறஞ்செய்கை முன்னினிதே ;
பாற்பட்டார் கூறும் பயமொழி மாண்பினிதே ;
வாய்ப்புடைய ராகி வலவைக ளல்லாரைக்
காப்படையக் கோட லினிது. 4

சலவரைச் சாரா விடுத லினிதே ;
புலவர்தம் வாய்மொழி போற்ற லினிதே ;
மலர்தலை ஞாலத்து மன்னுயிர்க் கெல்லாந்
தகுதியால் வாழ்த லினிது. 5

—பூதஞ்சேந்தனர்

4. திரிகடுகம்

ஆசை பிறன்கட் படுதலும் பாசம்
பசிப்ப மடியைக் கொள லுங்—கதித்தொருவன்
கல்லானென் றெள்ளப் படுதலும் இம்மூன்றும்
எல்லார்க்கு மின்னா தன. 1

வெல்வது வேண்டி வெகுண்டுரைக்கும் நோன்பிலியும்
இல்லது காமுற் றிருப்பானுங்—கல்வி
செவிக்குற்றம் பார்த்திருப் பானுமிம் மூவர்
உமிக்குற்றிக் கைவருந்து வார். 2

ஆற்றுனை யாற்றென் றலைப்பானு மன்பின்றி
ஏற்றார்க் கியைவ கரப்பானுங்—கூற்றம்
வரவுண்மை சிந்தியா தானுமிம் மூவர்
நிரயத்துச் சென்றுவீழ் வார். 3

வைததனை யின்சொல்லாக் கொள்வானும் நெய்பெய்த
சோறென்று கூழை மதிப்பானும்—ஊறிய
கைப்பதனைக் கட்டியென் றுண்பானும் இம்மூவர்
மெய்ப்பொருள் கண்டுவாழ் வார். 4

கிளைஞர்க் குதவாதான் செல்வமும் பைங்கூழ்
விளைவின்கட் போற்று னுழவும்—இளையனாய்க்
கள்ளுண்டு வாழ்வான் குடிமையும் இம்மூன்றும்
உள்ளன போலக் கெடும். 5

—நல்லாதனார்

III. கதைச் செய்யுள் :

1. புத்தரும் தீண்டாமையும்

புண்ணிய மூர்த்தி புத்தமா முனிவன்
உண்மையை உணர்ந்திவ் வுலகினி லென்றும்
அழியா இன்பம் அடையும் அவாவினால்
மன்னர் வாழ்வையும் மறுத்தவ னாகித்
தந்தையை மறந்து தனயனைத் துறந்து
மங்கை யசோதை மதிமுகம் நீத்து
நள்ளிர வதனில் நன்னகர் நீங்கி
உண்ணும் உணவும் உறக்கமு மின்றி
இரவும் பகலும் இடைவிடா தெங்கும்
நடந்து மெலிந்து நலிவுற் றொருநாள்
வேனில் வெயிலில் வெந்தரி கானில்
கைகால் தளர்ந்து கண்களும் மூடி
மூச்சும் அடங்கி முகமும் வெளிறி
உயிரும் உடலும் ஊசலாட
விஞ்சிய மயக்கால் விழுந்துகிடந்தனன். 1

ஆடுகள் மேய்த்துவரும்—ஒருவன்
ஆயர் குலச்சிறுவன்
வாடிக் கிடந்தவனைச்—செல்லும்
வழியின் மீதுகண்டான் ; 2

வையகம் வாழ்ந்திடவே—பிறந்த
மாதவச் செல்வன்முகம்
வெய்யிலில் வெந்திடாமல்—தழைகள்
வெட்டி அருகில்நட்டான். 3

'தெய்வ குலத்தினை—எளியோன்
தீண்டலு மாகாதினிச்
செய்வதும் யா'தெனவே—சிறிது
சிந்தை தயங்கிநின்றான். 4

உள்ளந் தெளிந்துடனே—வெள்ளா
டொன்றை அழைத்துவந்து
வள்ளல் மயக்கொழிய—மடியை
வாயிற் கறந்துவிட்டான். 5

நட்ட தழைகளெல்லாம்—வளர்ந்து
நாற்புற மும்கவிந்து
கட்டிய மாளிகைபோல்—வனத்தில்
காட்சி யளித்ததம்மா. 6

பூவொடு காய்கனியும்—தளிரும்
பொலிந்து நிரம்பியங்கே
மேவு பலமணிகள்—இழைத்த
விதானமும் ஆனதம்மா. 7

ஐயனை இவ்வுலகங்—காணற்
கரியவோர் தெய்வமெனக்
கைகள் தொழுதுநின்றான்—சிறுவன்
கலங்கமில் லாவுளத்தான். 8

நிலத்திற் கிடந்தஐயன்—மெல்ல
நிமிர்ந்து தலைதூக்கிக்
'கலத்தினி லேகொஞ்சம்—பாலைக்
கறந்து தருவாய்,' என்றான். 9

'ஐயையோ! ஆகா'தென்றான்—சிறுவன்
'ஐயனே! நானுமுனைக்
கையினால் தீண்டவொண்ணா—இடையனோர்
காட்டு மனிதன்,' என்றான். 10

உலகம் புகழ்பெரியான்—இந்த
உரையினைக் கேட்டங்காள்
அலகில் கருணையினால்—சொன்ன
அமுத மொழியிதுவாம்: 11

'இடர்வ ரும்போதும்—உள்ளம்
இரங்கி டும்போதும்
உடன்பி றந்தவர்போல்—மாந்தர்
உறவு கொள்வரப்பா! 12

'ஓடும் உதிரத்தில்—வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும்—சாதி
தெரிவ துண்டோஅப்பா? 13

'எவரு டம்பினிலும்—சிவப்பே
இரத்த நிறமப்பா!
எவர்வி ழிநீர்க்கும்—உவர்ப்பே
இயற்கைக் குணமப்பா! 14

'நெற்றியி னில்நீறும்—மார்பில்
நீண்ட பூணூலும்
பெற்றிவ் வுலகுதனில்—எவரும்
பிறந்த துண்டோஅப்பா! 15

'பிறப்பி னாலெவர்க்கும்—உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில்—நல்ல
செய்கை வேண்டுமப்பா! 16

'நன்மை செய்பவரே—உலகம்
நாடும் மேற்குலத்தார்;
தின்மை செய்பவரே—அண்டித்
தீண்ட வொண்ணாதார்.' 17

நிலத்து யர்ஞானி—இவை
நிகழ்த்தி, 'என்தம்பி!
கலத்தி லேகொஞ்சம்—பாலைக்
கறந்து தா', என்றான். 18

ஆயர் சிறுவனும்—கலத்தில்
அளித்த பாலையுண்டு
தாயி னும்இனியன்—கொண்ட
தளர்ச்சி நீங்கினனே. 19

—திரு. கவிமணி சி. தேசிகவிநாயகம் பிள்ளை

2. அந்தணனும் வஞ்சகரும்

'அக்கதை தெரியச்சொல்'லென் றறைதலும்அமைச்சன்கூறும்:
"மிக்கதோர் வேள்விக் காக வேதியன் வேற்றார் சென்று
தக்கநல் லாடு கொண்டு தனதுதோள் மீது தாங்கித்
தொக்கவுள் மகிழ்வின் மீண்டு தொல்பதிக் கேகும்போது, 1

"வஞ்சகர் மூவ ரந்த மறையவ னுட்டை வெளவ
நெஞ்சினில் நினைந்தே யந்தநெறியிடை யொருவன் முன்போய்ச்
'செஞ்சுடர்த்தீவளர்க்குஞ் செல்வ! நீ நாயைத்தோள் கொண்(டு)
அஞ்சுத லின்றிச் செல்ல லாகாத'தென்று கூற, 2

"துட்டனை நோக்கி, 'யாகப் பசுவினைச் சுணங்க னென்றாய்!
கெட்டனை யோகண்?' என்று கிளத்தியே மறையோன் செல்ல,
இட்டனே போலி ரண்டா மிழிஞனங் கெய்தி, 'மேலோய்!
விட்டுயிர் போன கன்றை மேற்கொளல் தகா'தென் றோத, 3

"பழுதறு மறையோ னந்தப் படியவன் தனையும் வைது
வழிதனி லேக மூன்றும் வஞ்சன்வந்து, 'அந்த ணாள!
எழுதரு நூல்க ளெல்லா மிழிந்தசண் டாள மென்னும்
கழுதையைச் சுமந்துசெல்லுங் காரியந் தகுமோ!' என்றான். 4

"நாடியே மறையோன், 'இந்த நரர்கள்வெவ் வேறு கூறக்
கூடிய வுருவெவ் வேறு கொண்டுதோன் றிடுத லா்லே
ஆடிராட் சதப்பி றப்போ!' என்னுமை யத்தால் விட்டான்;
நீடிய வஞ்சர் கொண்டார்," எனவுரை நிகழ்த்திற் றன்றே. 5

பஞ்சதந்திரப் பாடல்] [வீரமார்த்தாண்ட தேவர்

IV. வருணனை :

1. பொருநையாறு

[சிந்து]

உதைத்து விசைகொண் டெதிர்த்துக் கடலின்
உதரங் கீறி யதிருமீர்
உதய வரைக்கும் பொதிகை வரைக்கும்
ஒத்துப் போம்படி முற்றும்போய்ப்

பதைத்து நெளியும் துதிக்கை மூக்கன்
பண்ணைச் சாளை எண்ணைமீன்
பசலி திருக்கை கசலி கெளுத்தி
பண்ணுக் கும்பழம் பாசின்மீன்

வதைக்கும் மகரங் குதிக்குஞ் சள்ளை
மத்தி யுல்லம் பொத்திமீன்
மடந்தை கடந்தை சம்பான் நொறுக்கி
மலங்கும் பஞ்சலை கருங்கண்ணி

புதைத்து மணலில் ஒதுக்கிக் கடலில்
போக்கி அழகர் கருணைபோல்
பொறுநை யாறு பெருகி வரக்
புதுமை பாரும் பள்ளீரே!

—முக்கூடற்பள்ளு

2. மலை

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்;
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்;
தேனருவித் திரையெழும்பி வானின்வழி யொழுகும்;
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுக்கும். 1

முழங்குதிரைப் புனலருவி கழங்கெனமுத் தாடும்;
முற்றமெங்கும் பரந்துபெண்கள் சிற்றிலைக்கொண்
டோடும்;
செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப்பந் தடிக்கும்;
தேனலர்சண் பகவாசம் வானுலகில் வெடிக்கும். 2

வேடுவர்கள் தினைவிதைக்கச் சாடுபுனந் தோறும்
விந்தையகில் குங்குமமும் சந்தனமும் நாறும்;
காடுதொறு மோடிவரை யாடுகுதி பாயும்;
காகமணு காமலையில் மேகநிரை சாயும். 3

செல்லினங்கள் முழவுகொட்ட மயிலினங்க ளாடும்
திரிகூட மலையெங்கள் செல்வமலை யம்மே! 4

—திரிகூட ராசப்பக் கவிராயர்

3. மின்னல்

மேகத் திரையைப் பிளந்து
விரைகின்றாய் மின்னலே ! — ஒரு
மோகன மின்சாரம் காட்டி
மறைகின்றாய் மின்னலே ! 1

வெளிச்சங் காட்டி இருட்டை
விரட்டுவாய் மின்னலே ! — உடன்
பளிச்சென் றென்கண் பறித்துக்கொண்
டேகுவாய் மின்னலே ! 2

நில்லுநீ நில்லெனக் கெஞ்சிடு
வேனுன்னை மின்னலே ! — இங்கு
நில்லா வுலகியல் வாழ்வெனச்
செல்லுவாய் மின்னலே ! 3

காண வுன்னையென் கண்ணைத்
திறக்கு முன் மின்னலே ! — நீ
நாணிக் கோணி நடித்தெங்குச்
செல்கின்றாய் மின்னலே ! 4

சிற்றிடை துவள்ச் செங்கால்
வீசுவாய் மின்னலே ! — உன்னைப்
பற்றிக்கொள் வேனென்றே பயந்து
ஓடினாய் மின்னலே ! 5

தடதட வென்றிடி முரச
மார்த்திட மின்னலே ! — நீ
நடன மாடு நயமென்ன
சொல்லுவேன் மின்னலே ! 6

"மன்னுல கிலேவந் தென்னை
அணை," என்பேன் மின்னலே !— "அடா
என்னைப் போலத்தான் இவ்வுடல்
வாழ்" வென்பாய் மின்னலே ! 7

ஞான வேட்கைகொண் டேயுன்னை
நச்சுவேன் மின்னலே ! — அது
மோனம் என்று மொழியொன்
றெழுதுவாய் மின்னலே ! 8

—ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

V. பல்சுவை :

1. பாரத மாதா திருப்பள்ளியெழுச்சி

புள்ளினம் ஆர்த்தன ; ஆர்த்தன முரசம் ;
பொங்கிய தெங்குஞ் சுதந்தர நாதம் ;
வெள்ளிய சங்கம் முழங்கின கேளாய் !
வீதியெ லாமணு குற்றனர் மாதர் ;
தெள்ளிய அந்தணர் வேதமும் நின்றன்
சீர்த்திரு நாமமும் ஓதிநிற் கின்றார் ;
அள்ளிய தெள்ளமு தன்னையெம் அன்னை !
ஆருயி ரே!பள்ளி யெழுந்தரு ளாயே ! 1

—பாரதியார்

2. வேண்டுதல்

எங்குநிறை அன்பறிவே! எண்ணுமனம் வேண்டும் ;
எவ்வுயிர்க்கும் எஞ்ஞான்றும் இனிமைசெயல் வேண்டும்;
பொங்கியற்கை வழிநின்று புவி இயங்கல் வேண்டும் ;
பொய்சூது பகைசூழ்ச்சி பொருந்தாமை வேண்டும் ;
மங்கையர்கள் உரிமையுடன் வாழ்வுபெறல் வேண்டும் ;
மக்களெலாம் பொதுவென்னும் மதிவளரல் வேண்டும் ;
தங்குயர் தாழ்வென்னுந் தளையறுதல் வேண்டும் ;
சமதர்மச் சன்மார்க்கத் தாண்ட வம்வேண் டுவனே. 2

திரு. வி. க.

VI. தனிப் பாடல்கள் :

முருகக் கடவுள்

அப்பன் இரந்துண்ணி ; ஆத்தாள் மலைநீலி ;
ஒப்பரிய மாமன் உறிதிருடி ;—சப்பைக்கால்
அண்ணன் பெருவயிறன் ; ஆறுமுகத் தானுக்கிங்(கு)
எண்ணும் பெருமை இவை ! 1

—காளமேகப் புலவர்

புலவர் பெருமை

மன்னவனும் நீயோ ? வளநாடும் உன்னதோ ?
உன்னையறிந் தோதமிழை ஓதினேன் ?—என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ ? உண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு ? 2

—கம்பர்

கல்விக்கு ஓரெல்லையில்லை

கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவென்(று)
உற்ற கலைமடந்தை யோதுகிறாள்;—மெத்த
வெறும்பந் தயங்கூற வேண்டா புலவீர் !
எறும்புந்தன் கையால்எண் சாண். 3

—ஔவையார்

மூர்க்கர் நல்வழி பெறார்

பொல்லாத மூர்க்கருக் கெத்தனை
தான்புத்தி போதிக்கினும்
நல்லார்க்குண் டான குணம்வரு
மோ? நடுச் சாமத்திலே
சல்லாப் புடவை குளிர்தாங்கு
மோ? பெருஞ் சந்தையினில்
செல்லாப் பணம்செல்லு மோ? தில்லை
வாழுஞ் சிதம்பரனே!

—படிக்காசுத் தம்பிரான்

VII. திருக்குறள்

வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல. 1

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். 2

அறத்தான் வருவதே இன்பம் ; மற்றெல்லாம்
புறத்த புகழும் இல. 3

அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை ; அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று. 4

மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் ; மற்றுஅவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு. 5

அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று. 6

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு. 7

சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும். 8

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. 9

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு. 10

உலகத்தொடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார். 11

ஒறுத்தாரை ஒன்றாக வையாரே ; வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து. 12

அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார்
வழுக்கியும் கேடீன் பது. 13

கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்னின்று பின்நோக்காச் சொல். 14

நயனில சொல்லினுஞ் சொல்லுக ; சான்றோர்
பயனில சொல்லாமை நன்று. 15

இலன்என்று தீயவை செய்யற்க ; செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து. 16

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு. 17

இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகம் காணும் அளவு. 18

தோன்றின் புகழொடு தோன்றுக ; அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று. 19

அருட்செல்வம் செல்வத்துள் செல்வம்; பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள. 20

களவினான் ஆகிய ஆக்கம் அளவிறந்து
ஆவது போலக் கெடும். 21

தன்நெஞ் சறிவது பொய்யற்க ; பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும். 22

சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று. 23

தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க்கு இன்னா செயல். 24

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை. 25

தலைப்பட்டார் தீரத் துறந்தார் ; மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர். 26

உறங்குவது போலும் சாக்காடு ; உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு. 27

கண்ணுடையர் என்பவர் கற்றோர் ; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். 28

உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர். 29

கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின். 30

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். 31

அறிவுடையார் ஆவ தறிவார் ; அறிவிலார்
அஃதறி கல்லா தவர். 32

தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்ற மாகும் இறைக்கு ? 33

அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல். 34

மனந்தூய்மை செய்வினைத் தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும். 35

செய்தக்க அல்ல செயக்கெடும் ; செய்தக்க
செய்யாமை யானும் கெடும். 36

காலம் கருதி இருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர். 37

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல். 38

வினைக்குரிமை நாடிய பின்றை அவனை
அதற்குரிய னாகச் செயல். 39

காக்கை கரவா கரைந்துண்ணும் ; ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள. 40

புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் ; செய்யாது
இகழ்ந்தார்க்கு எழுமையும் இல். 41

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் ; மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து. 42

தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். 43

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து. 44

உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து. 45

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம். 46

கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார். 47

இல்லாரை எல்லாரும் எள்ளுவர் ; செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு. 48

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. 49

அற்றால் அளவறிந்து உண்க ; அஃதுஉடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு. 50

அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர். 51

தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை. 52

பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல். 53

குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும். 54

ஏரினும் நன்றால் எருஇடுதல் ; கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு. 55

செய்யுட்பகுதி

குறிப்புரை

சதகச் செய்யுள் :

செய்யுள்

1 எய்துதுயர் - அடையும் துன்பம்; கோதுஇல் - குற்றமற்ற; நிந்தை - தூஷணை; சீறரவம் - சீறுகின்ற பாம்பு; மதவேள் - பாட்டுடைத் தலைவர்; சதுரகிரி - சேலம் ஜில்லாவில் உள்ள ஒரு சிவஸ்தலம்; அறப்பளீசுரன் என்பது அத்தலத்தில் எழுந்தருளி யுள்ள சிவபெருமானுடைய பெயர்.

2. அருள் - ஆண்டவனது அருள்; புகழ் - கீர்த்தி; பூதலத்தவர் - உலகத்தவர்; திருகு - குற்றம்; தேசிகர் - குரு; ஆனந்த பூர்த்தி - மகிழ்ச்சி நிறைவு; அழியாத நிதி - அழியாச் செல்வமாகிய மோட்சம்.

3. கமல மலர் - தாமரை மலர்; திகழ் - விளங்குகின்ற; பூச்சி - (இங்குப்) பட்டுப் புழு; புனித - தூய; அபிடேகம் - அபிடேகப் பொருள்; அதாவது, தலைமுழுக்குக்குரிய பொருள்; புலால் - மாமிசம்; கோரோசனை, சவாது, புழுகு - நறுமணப் பொருள் கள்; ஈனம் - தாழ்வு; மாற்றிச் சாத்தினை விபூதியால் குளிர வைத்த - திருநீற்றைத் தடவி வெம்மையால் துன்புற்ற கூன்பாண் டியனுடைய உடலைக் குளிரும்படி செய்த; மெய்ஞ்ஞான முதல் - உயர்ஞானத் தலைவரான ஞானசம்பந்தர்; புல்வயல் - புதுக் கோட்டையில் உள்ள முருகன் தலம்.

4. ஈ யென - 'கொடு' என்று சொல்ல; தந்து மகிழும் தமையன் - கொடுத்துச் சந்தோஷிக்கும் அண்ணன்; அதாவது, இராமன்; தபசு புரியுந் தம்பி - பரதன்; கருணை செய் மதனி - சீதை; வனச மலர் - தாமரை மலர்; வாவி - குளம்.

5. செறி - நிறைந்த; நன்றி - நற்செயல்; பருவரை - பெரிய மலை; பண்பாய் - நல்ல வகையாய்; சாற்றுவார் - கூறுவார்.

6. இளையான்குடி மாறர் - அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர்; முளை - நெல்முளை; பார் - பூமி; வழுவாத - குற்றமற்ற;

கோடில்லா வாழ்வு - முடிவில்லா வாழ்வு ; அதாவது, மோட்சம் ; மழு - சிவபெருமான் கையில் விளங்கும் அக்கினி ; கரதலம் - கையாகிய இடம் ; மறை - வேதம்.

7. சோழன் - இங்கு, மனுநீதிகண்ட சோழன் ; அச்சோழன் புதல்வன் - வீதிவிடங்கன் ; ஆன்கன்று - பசுங்கன்று ; முடியக் கண்டு - இறக்கக் கண்டு ; மன்னுயிர் - பிற உயிர்.

இன்னா நாற்பது

செய்யுள்

1. மற மன்னர் - கொடிய அரசர் ; இன்னா - கொடியது ; புணை - தெப்பம் ; கடுமொழி - வன்மொழி ; தொடர்பு - சேர்க்கை.

2. கருவிகள் - ஆயுதங்கள் ; புறம் கொடுத்தல் - தோல்வியடைதல் ; திருவுடையார் - செல்வர் ; செறல் - பகைத்தல்.

3. ஆற்றல் - தோள்வலி ; படை - ஆயுதம் ; நாற்றம் - நறுமணம் ; தேற்றம் - தெளிவு ; மாற்றல் - சொல்.

4. பொருள் வைப்பு - பொருளைச் சேமித்து வைத்தல் ; நண்ணா - விரும்பி யடையாத ; புணர்ச்சி - நட்பு ; நனி - அதிகம் ; வனப்பு - அழகு ; எண்ணிலான் - எண்ணறிவு இல்லாதவன்.

5. யாத்த - கட்டுப்பட்ட ; பரியார் - பரிவில்லாதவர்.

இனியவை நாற்பது

செய்யுள்

1. கோல் கோடி - செங்கோல் வளைந்து ; மாராயம் - வேந்தன் செய் சிறப்பு, நற்செய்தி ; எய்தும் திறத்தால் - அடையும் வகையால் ; யார் மாட்டும் - எவரிடத்தும்.

2. மிக்கார் - (நற்குண நற்செய்கைகளில்) தன்னைவிடச் சிறந்தவர் ; மாண - பெருமை பொருந்த ; எட்டுணையானும் - எவ்வகையாலும் ; இரவாது - பிச்சை யெடாமல் ; ஆற்ற - மிகுதியாக.

3. மன்று - சபை ; தந்திரம் - கல்வி ; மாண்பு - பெருமை ; எஞ்சா - குறையாத ; விழுச்சீர் - மிகுந்த பெருமை ; இரு முது மக்கள் - தாய் தந்தையர்.

4. ஆற்றுந்துணை - முடிந்த வரையில்; பாற்பட்டார் - (நம்மிடம்) அன்புள்ளவர்; பய மொழி - பயன் தரத்தக்க நற்புத்தி; வலவைகள் - கீழ்மக்கள்; கோடல் - கொள்ளுதல்.

5. சலவர் - பகைவர்; சாரா விடுதல் - சேராதிருத்தல்; மலர்தலை - அகன்ற இடம்; ஞாலம் - உலகம்; மன்னுயிர் - பொருந்திய மக்கள்.

திரிகடுகம்

செய்யுள்

1. பாசம் - ஆசை; மடி - சோம்பல்; கதித்து - கோபித்து; எள்ளப்படுதல் - இகழப்படுதல்; இன்னாதன - துன்பத்தைத் தருவன.

2. நோன்பிலி - கீழ்மகன்; காமுற்று - ஆசைகொண்டு.

3. ஆற்றானை - செய்யும் வலியற்றவனை; அலைப்பான் - துன்புறுத்துகிறவன்; இயைவ - தன்னிடமுள்ள பொருள்; கரப்பான் - ஒளிப்பவன்; கூற்றம் - இயமன்; நரயம் - நரகம்.

4. கைப்பு - கசப்பு; கட்டி - வெல்லக்கட்டி.

5. கிளைஞர் - சுற்றத்தார்; பைங்கூழ் - பசுமையான பயிர்.

புத்தரும் தீண்டாமையும்

செய்யுள்

1. அழியா இன்பம் - மோட்சம்; அவா - ஆசை; மன்னர் வாழ்வு - அரச பதவி; மறுத்தவனாகி - வெறுத்து; தனயன் - மகன்; யசோதை - புத்தரின் மனைவி; மதிமுகம் - சந்திரன் போன்ற முகம்; நீத்து - துறந்து; நள்ளிரவு - நடுஇரவு; நலிவுற்று - துன்புற்று; வேனில் - கோடை; கான் - காடு; வெளிறி - வெளுப்படைந்து; விஞ்சிய - மிகுந்த; மயக்கால் - மயக்கத்தால்.

2. ஆயர்குலம் - இடையர்குலம்.

3. வையகம் - உலகம்; மாதவம் - பெரிய தவம்.

4. தெய்வகுலம் - உயர்குலம்; சிந்தை - மனம்; தயங்கி - தடுமாறி.

5. உள்ளம் - மனம்; வள்ளல் - அளவின்றி கொடுப்பவன்; மடி - பால்மடி.

6. கவிந்து - படர்ந்து; மாளிகை - வீடு.

7. பொலிந்து - விளங்கி; மணிகள் - நவரத்தினங்கள்; விதானம் - விமானம்.

8. களங்கமில்லா - மாசற்ற, கபடற்ற; உளத்தான் - மனத்தை யுடையவன்.

9. கலம் - மண்பாத்திரம்.

10. தீண்டவொண்ணுத - தொடத்தகாத.

11. உரை - சொல்; அருகில் கருணை - குறைவற்ற கருணை; அமுத மொழி - அமுதம் போன்ற நன்மொழி.

12. இடர் - துன்பம்; உள்ளம் இரங்கிடும் - மன இரக்கம் கொள்ளும்.

13. உதிரம் - இரத்தம்.

14. உவர்ப்பு - உப்புச்சுவை.

15. நீறு - விபூதி.

17. மேற்குலம் - உயர்ந்தசாதி, தின்மை - தீமை; அண்டி - நெருங்கி.

18. நிகழ்த்தி - கூறி.

அந்தணனும் வஞ்சகரும்

செய்யுள்

1. அறைதல் - சொல்லுதல்; அமைச்சன் - மந்திரி; வேள்வி - யாகம்; வேதியன் - பிராமணன்; தொக்க - நிறைந்த; உள் மகிழ்வு - மனமகிழ்ச்சி; தொல்பதி - பழமையான ஊர்.

2. மறையவன் - பிராமணன்; வெளவ - கவர; நெறியிடை - வழியில்; செஞ்சுடர்த்தி - சிவந்த நெருப்பினை மூட்டிச் செய்யும் யாகம்.

3. யாகப்பசு - யாகத்தில் அவிசாகப் பலியிடும் பிராணி; சுணங்கன் - நாய்; கிளத்தி - கூறி; இட்டனேபோல் - நன்

பன் போல: இழிஞன் - வஞ்சகன்; அங்கெய்தி - அங் கடைந்து.

4. பழுதறு - குற்றமற்ற; வைது - வசை கூறி; அந்தணாள - பிராமணனே; எழுதரு நூல் - வேதம்; சண்டாளம் - பாதகம்.

5. நரர்கள் - மனிதர்கள்; ஐயம் - சந்தேகம்; உரை நிகழ்த்திற்று - கூறியது.

பொருநையாறு

உதைத்து - தாக்கி; விசைகொண்டு - வேகமுற்று; உதரம் கீறி - வயிற்றைக் கிழித்து; உதைய வரை - (சூரியன்) உதிக்கும் மலை; பொதிகை வரை - பொதியமலை; துதிக்கை மூக்கன், பண்ணைச்சாளை, பசலி, திருக்கை, கசலி, கெளுத்தி மகரம், சன்னை, மத்தி, உல்லம், பொத்தி, மடந்தை, கடந்தை, சம்பான், பஞ்சலை, கருங்கண்ணி என்பன மீன்களின் பெயர்கள்; அழகர் - அழகர் மலையில் வீற்றிருக்கும் விஷ்ணுவின் பெயர்; பொருநை - தாம்பிரபரணி நதி; பள்ளீரே - உழவர்களே.

மலை

செய்யுள்

1. மந்தி - பெண் குரங்கு; தேனருவி - திருக்குற்றாலமலையிற் பாயும் ஓர் அருவின் பெயர்; திரை - அலை; வான் - ஆகாயம்; செங்கதிரோன் - சிவந்த கிரணங்களை உடைய சூரியன்; பரிக்கால் - குதிரையின் கால்கள்; தேர்க்கால் - தேர்ச்சக்கரம்.

2. முழங்கு திரை - சப்திக்கும் அலைகள்; புனல் - நீர்; கழங்கு - அம்மனைக்காய்; முற்றம் - வீட்டின் முன்புறம்; சிற்றில் - சிறு வீடு; தேமா - இனிமையுள்ள மாம்பழம்; வானுலகு - தேவலோகம்.

3. சாடு - கொத்துகின்ற; புனம் - வயல்; நாறும் - நாற்றம் வீசும்; வரையாடு - மலையோடு; மேக நிரை - மேகங்களின் வரிசை.

4. சொல்லினங்கள் - இடியின் கூட்டம்; முழுவு - மத்தளம்; திரிகூட மலை - திருக்குற்றால மலை.

மின்னல்

செய்யுள்

1. திரை - திரைத் துணி ; மோகனம் - அழகு.

2. விரட்டுவாய் - துரத்துவாய்; கண் பறித்து - கண்ணைப் பிடுங்கி.

3. உலகியல் - உலகின் தன்மை.

4. நாணி - வெட்கி ; நடித்து - நடனமாடி.

5. சிற்றிடை - மெல்லிய இடுப்பு ; துவள - வளைந்து வருந்த ; செங்கால் - சிவந்த கோடு ; வீசுவாய் - தோற்றுவிப்பாய்.

6. முரசு - முரச வாத்தியம் ; ஆர்த்திட - ஒலிக்க.

7. மன்னுலகு - நிலைபெற்ற உலகம் ; அணை - சேர்.

8. வேட்கை - ஆசை ; நச்சுவேன் - விரும்புவேன் ; மோனம் - மௌனம், அதாவது சொல்லக் கூடாதது.

பாரத மாதா திருப்பள்ளியெழுச்சி

புள்ளினம் - பறவைக் கூட்டம் ; ஆர்த்தன - ஒலி யெழுப்புகின்றன ; நாதம் - இசையொலி ; வெள்ளிய சங்கம் - வெண்மையான சங்கு ; அணுகுற்றனர் - நிறைந்தனர் ; சீர் - சிறப்பு.

வேண்டுதல்

எஞ்ஞான்றும் - எப்பொழுதும் ; பொங்கு - அதிகரிக்கின்ற ; புவி - உலகம் ; இயங்க - நடைபெற ; சூழ்ச்சி - வஞ்சனை ; மதி - புத்தி ; தளை - கட்டுப்பாடு ; தாண்டவம் - நடனம்.

தனிப்பாடல்கள்

1. இரந்துண்ணி - பிச்சையெடுத்து உண்பவன் ; மலைநீலி - மலை வாழ் குறத்தி.

3. கலை மடந்தை - சரசுவதி ; ஓதுகிறாள் - கல்வி கற்கின்றாள்.

4. நடுச்சாமம் - நடு இரவு ; சல்லாப் புடவை - மிக மெல்லிய புடவை ; தில்லை - சிதம்பரம்.

திருக்குறள்

1. இலான் - இல்லாதவனாகிய கடவுள், அடிசேர்ந்தார்க்கு - திருவடிகளைச் சேர்ந்தவர்களுக்கு, யாண்டும் - எவ்விடத்திலும், இடும்பை - துன்பம்.

2. நிறைமொழி - பயன்படும் சொற்கள், மறை - வேதம்.

3. புறத்த - துன்பம் தருபவை.

4. இல்வாழ்க்கை - குடும்ப வாழ்க்கை, அஃதும் - துறவு வாழ்க்கையும், பழிப்பது இல்லாயின் - குறை சொல்லும்படி இல்லாமல் இருந்தால்.

6. அன்பகத்தில்லா - உள்ளன்பில்லாத, வன்பாற்கண் - மரங்கள் அதிகம் வளராத பாலை நிலத்தில், வற்றல் - உலர்ந்த, தளிர்த்தற்று - தளிர் விடுவதற்குச் சமம்.

7. செல்விருந்து - சற்று முன் வந்த ஒரு விருந்தாளியை, ஓம்பி - உபசரித்து, வானத்தவர் - விண்ணுலகத்தவர்.

8. சிறுமையுள் நீங்கிய - அற்பத்தனத்திலிருந்து நீங்கிய, மறுமையும் இம்மையும் - மறு பிறவியிலும் இப்பிறவியிலும்.

9. காலத்தினால் - தக்க (ஆபத்துக்) காலத்தில், ஞாலம் - உலகம், மாணப்பெரிது - மிகப்பெரிது.

10. உள்ளாறும் - உள்ளேயே (தேகத்தினுள்) ஆறிவிடும், வடு - காயம்.

11. ஒட்ட - நெருங்க, ஒழுகல் - பழகுதல்.

12. ஒறுத்தார் - தீங்கு செய்பவரை தண்டிப்பவர், ஒன்றாக - ஒரு பொருளாக, வையார் - மதிக்கமாட்டார்கள், வைப்பர் - மதிப்பார்கள்.

13. அழுக்காறு - பொறாமை, சாலும் - போதும், ஒன்னார் - பகைவர். வழுக்கியும் - தீங்கு செய்யத்தவறினாலும், கேடீன்பது - கேடு விளைவிப்பது.

14. கண் நின்று - எதிரில் நின்று, கண்ணறச் சொல்லினும் - பார்க்காததுபோலக் கடுமையாகக் கண்டித்தாலும், முன்னின்று - எதிரில் நின்று, பின்னோக்கா - பிறகு நடப்பதை யோசியாத.

15. நயனில - நியாயமல்லாதவற்றை, சான்றோர் - பெரியோர்.

16. இலன் என்று - கையில் பொருள் இல்லாதவன் என்று, பெயர்த்து - மீண்டும்.

17. தாளாற்றி - பெருமுயற்சிசெய்து, வேளாண்மை - உதவி.

18. இன்னது - துன்பம் தருவது, இரக்கப்படுதல் - யாசிக்கப்படுதல், இரந்தவர் - யாசித்தவர், இன்முகம் - மகிழ்ந்த முகம்.

19. தோன்றின் - உலகில் பிறந்தால்.

20. அருட்செல்வம் - அருள் நிறைந்த தன்மை, பூரியார் - கீழ்மக்கள்.

21. ஆக்கம் - செல்வம், அளவிறந்து - அளவில்லாமல்.

22. பொய்யற்க - மறைத்துப் பேசாமல் இருக்கக் கடவன், சுடும் - உறுத்தும்.

23. நிலத்தறைந்தான் - கோபத்தில் நிலத்தை ஓங்கி அறைந்தவன், கை பிழையாதற்று - கையானது தப்பாமற் காயமடைந்ததை யொக்கும்.

24. இன்னமை - தீமை விளைவிப்பவை, என்கொலோ - எக்காரணத் தாலோ, மன்னுயிர்க்கு - பிற உயிர்களுக்கு.

26. தலைப்பட்டார் - உயர்வடைந்தார், தீரத்துறந்தார் - முற்றும் துறந்தவர்.

27. சாக்காடு - இறப்பு.

29. உடையார் - செல்வமுள்ளவர், ஏக்கற்றும் - தாழ்ந்து நின்றும், கடையரே - இழிவானவரே.

30. நனி - மிக.

31. எனைத்தானும் - எவ்வளவு சிறிதாயினும், ஆன்ற - சிறந்த.

32. ஆவது - பின் நடக்கப்போவது, அறிகல்லாதார் - முன் தெரிந்து நடக்க முடியாதவர்.

33. இறைக்கு - அரசனுக்கு.

34. பேணி - போற்றி, தமராக - உறவினராக.

35. அவா வரும் - பற்றி வரும்.

36. செய்தக்க அல்ல - செய்யத் தகாதவற்றை.

37. காலம் கருதி - தகுந்த காலத்தை எதிர் பார்த்து, கலங்காது - தளராது.

38. மிகை நாடி - மிகுதியாகக் காணப்படுபவற்றை ஆராய்ந்து, கொளல் - தீர்மானிக்க.

39. வினைக்குரிமை நாடிய பின்றை - ஒரு தொழிலை நடத்தத் தகுதி உள்ளவனா என்பதை ஆராய்ந்த பின்.

40. கரவா - மறைக்காமல், கரைந்து - கூவி அழைத்து, அன்ன நீரார்க்கே - அப்படிப்பட்ட தன்மையுடையவர்களுக்கே.

41. செய்யாது இகழ்ந்தார்க்கு - செய்யத் தவறியவர்களுக்கு, எழுமையும் - ஏழு பிறவிகளிலும்.

42. உள்ளுவது - எண்ணுவது, தள்ளினும் - நிறைவேறாவிடினும், தள்ளாமை நீர்த்து - நிறைவேறியது போல்வது.

43. தெய்வத்தான் - ஊழ்வினை காரணமாக, மெய் - உடல், கூலி - பயன்.

44. பிறிதோர் - வேறொரு, இன்மை - இல்லாமையை.

45. உருவு - உருவம், எள்ளாமை - இகழாமை, உருள் - உருண்டு செல்லும்.

46. பளிங்கு - கண்ணாடி, கடுத்தது - மிகுந்துள்ளது.

47. செல - (மனத்தில்) பதியுமாறு.

48. எள்ளுவர் - இகழுவர்.

49. உடுக்கை - உடுத்துள்ள ஆடை, இடுக்கண் - துன்பம், களைவது - போக்குவது.

50. அற்றால் - (முன் உண்ட) உணவு செரித்தால், நெடிது உய்க்குமாறு - நீண்ட காலம் வாழும் வழியாகும்.

51. அடுக்கிய கோடி - குவிந்த செல்வம், குடிப்பிறந்தார் - உயர்குடியில் பிறந்தார், குன்றுவ - இழிவானவற்றை.

52. இழிந்த - உதிர்ந்த, அனையர் - போன்றவர்.

53. ஆற்றுவார் - செய்துமுடிப்பார், ஆற்றின் - உரிய நன்னெறியில்.

54. குடிசெய்வல் - என் குடியை உயர்த்துவேன்,
ஒருவற்கு - ஒருவனுக்கு, மடிதற்று - ஆடையை இறுகக்கட்டி, முந்துறும் - முன் வந்து நிற்கும்.

55. ஏரினும் - ஏரைக்கொண்டு உழுவதைவிட, கட்ட பின் - களை எடுத்த பின், நீரினும் - தண்ணீர் பாய்ச்சுவதைவிட, காப்பு - காவல் செய்வது.

CONNEMARA PUBLIC LIBRARY
31 MAY 1956
MADRAS

அகராதி

அ - ஆ

அகம் மகிழ - மனம் சந்தோஷிக்க
அகற்றினார் - நீக்கினார்
அகற்று - நீக்கு
அணுகி - நெருங்கி
அணுத்திரள் - நுண்ணிய பொருள்களின் கூட்டம்
அண்ணலார் - பெருமையில் சிறந்தவர்
அண்மை - சமீபம்
அந்தமில் இன்பம் - முடிவில்லா சுகம்
அமரச் செய்து - உட்காரச்செய்து
அமைச்சர் - மந்திரிகள்
அரம்பையர் - தெய்வப் பெண்கள்
அரியணை - சிம்மாசனம்
அருள் - கருணை
அழுக்காறுற்று - பொறாமை கொண்டு
அளவளாவி - சம்பாஷித்து
அற்றே - அத்தன்மையதே
ஆக்கம் - உண்டுபண்ணுதல்
ஆய்கூடம் - ஆராய்ச்சிச்சாலை
ஆய்ந்தாரில்லை - யோசித்தாரில்லை
ஆரோக்கியம் - தேகசுகம்
ஆற்றல் - வன்மை ; திறமை

இ

இகழ்வதற்கு - பரிகசிப்பதற்கு
இடுக்கண் - துன்பம்
இடையறா முயற்சி - நீங்காத ஊக்கம்
இயக்கம் - இயங்குகை
இலக்கியம் - இலக்கணம் அமைந்த நூல்
இழுதிறன் - இழுக்கும் சக்தி
இறுதி - முடிவு
இறைச்சி - மாமிசம்

உ

உடுக்கள் - விண் மீன்கள்
உலையா ஊக்கம் - இடையறா முயற்சி
உவகை - சந்தோஷம்
உவகையுற்று - மகிழ்ச்சியுற்று
உவமை - ஒப்பு
உழிஞை - கொற்றான் என்னும் ஒருவகைச்செடி
உள்ளம் - மனம்
உறுப்பிலக்கணம் - உடலின் அவயவங்களின் இலட்சணம்

எ - ஏ

எஞ்ஞான்றும் - எப்போதும்
எடுத்துக்காட்டு - உதாரணம்
எட்டுணை - எவ்வளவு
எத்துணை முக்கியம் - எவ்வளவு அவசியம்
எழிலுற - அழகு பொருந்த
ஏறு - காளை

ஐ - ஒ

ஐயந்திரிபுற - சந்தேகமும் மயக்கமும் நீங்கும்படி
ஒற்றர் - தூதுவர்

க

கயவன் - கீழ்மகன்
கருதலாம் - எண்ணலாம்
கவரி - சாமரை
களிறு - ஆண் யானை
கறவை - பாற்பசு

கா - கி

காவியம் - காப்பியம்
கிழி - பணமுடிச்சு

கு - கூ

குறிக்கோள் - உயர்ந்த இலட்சியம்
குறுநகை - புன்சிரிப்பு
கூற்று - இயமன்
குற்றொலி - குறுகிய ஓசை

ச - சா

சமயம் - தருணம்
சாமரை - கவரி
சாயை - நிழல்

சான்ற - நிறைந்த
சான்று - உதாரணம்

சி - சீ

சிறுர் - சிறுவர்
சீரிய - மிகச்சிறந்த

சூ - சொ

சூழ்ச்சி - சதியாலோசனை
சொற்பொழிவு - பெரும் பேச்சு; பிரசங்கம்

த - தி

தன்நலம் - சுயநலம்
தருக்கு - கர்வம்
திணறு - மூச்சுத்திணறுதல்

து - தொ

தும்பி - யானை
தொடக்கப்பள்ளி - ஆரம்பப் பள்ளி
தொண்டாற்றி - கடனாற்றி; பணி செய்து
தொண்டு கிழவர் - மிக்க வயோதிகர்
தொழுவம் - கொட்டகை

ந - நா

நல்குவம் - கொடுப்போம்
நல்லார் - மேல் மக்கள்
நாமகள் - சரசுவதி

நி - நீ

நிகழ்ச்சி - சம்பவம்
நிநிச்சாலை - பொக்கிஷ இடம்
நிலாமுற்றம் - மொட்டை மாடி
நிறுவி - ஸ்தாபித்து
நிறுவினர் - ஸ்தாபித்தார்
நிறையுள்ள - மாட்சிமையுள்ள

ப - பா

பண்பு - குணம்
பாம்படித்தல் - சமப்படுத்தல்
பாம்பொருள் - மேலான வஸ்து (கடவுள்)
பனிப்படலம் - பனித்தொகுதி
பாரபட்சம் - ஓரவஞ்சனை

மு - மூ

முரண் - மாறுபட்ட
மூலதனம் - முதல் பணம்

மே - மோ

மேற்கொண்டால் - கைக்கொண்டால்
மோழைமாடு - மொட்டை மாடு

யா - வ

யாசகன் - இரந்து உண்பவன்
யாத்து - இயற்றி
வஞ்சினம் - சபதம்
வடமீன் - துருவ நட்சத்திரம் (அருந்ததி)
வடமுனை-வடகோடி; வடதுருவம்
வரலாறு - சரித்திரம்
வரலாற்று நூல் - சரித்திரம்
வருணனை - புனைந்துரை
வல்லுநர் - வன்மை மிக்கவர்
வழக்கறிஞர் - வக்கீல்
வழுவாதவர் - தவறுதவர்
வறிது - வெறுவிதானது; ஏழ்மையுடையது

வா - வி

வாகனம் - ஊர்தி
வாய்ப்பு - தருணம்
வாரணங்கள் - யானைகள்
விஞ்ஞானி - பௌதிக சாஸ்திரம் வல்லவன்
விடையிறுத்தார்-பதில் அளித்தார்
விடுதி - தங்கும் இடம்
விண்ணுலகு - வானுலகு
விருதுப்பெயர் - வெற்றிப்பெயர்
விழைகின்றேன் - விரும்புகின்றேன்

வே

வேழங்கள் - யானைகள்
வேனில் - வேனல்; கோடை

CONNEMARA PUBLIC LIBRARY
31 MAY 1956